AN INDIAN PRIESTESS

# THE LIFE OF CHANDRA LELA

---

சந்திரலீலாள்

என்ற ஓர் இந்துமார்க்க குருசங்கையின்

# ஜீவிய சரித்திரம்

SECOND EDITION

MADRAS

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY

1914

[விலை ௨ அணா.

AN INDIAN PRIESTESS

# THE LIFE OF CHANDRA LELA

---

# சந்திரலீலாள்

என்ற ஓர் இந்துமார்க்க குருநங்கையின்

# ஜீவிய சரித்திரம்

---

SECOND EDITION, 2,000—TOTAL COPIES, 4,000

---

MADRAS
THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY
1914

170124.
-600 008.

# அங்கிலேய நூல் முகவுரை

இந்தப் புஸ்தகத்தில் ஒரு பிராமண ஸ்திரீயின் ஜீவிய சரித்திரம் எழுதப்பட்டிருக்கின்றது. அவள் ஆத்ம சமாதானத்தைத் தேடி இந்தியாவில் நீண்ட ஸ்தலயாத்திரைகள் செய்து இளைப்பூர்ந்துபோய், இந்துமார்க்கத்தில் அதைக் கண்டடையாமல், மெய்யான ஒளியாகிய இயேசுவில் அந்தச் சமாதானத்தைக் கண்டடைந்த விதத்தைச் சித்திராலங்காரமாய்த் தெரிவித்திருக்கின்றது. இங்கிதமான இந்த ஜீவிய சரித்திரம் மிஷன் பணிவிடையாட்களுக்கு முற்றிலும் எழுப்புதலுக் கேதுவானது.

ஒரு தேசத்தைக் கிறிஸ்துநாதருக்கென்று ஜெயித்து ஆதாயப்படுத்தவேண்டுமானால் சுதேச பணிவிடையாட்களால் அது ஆகவேண்டும் என்ற நிர்ணயத்தை இது ஊர்ஜிதப்படுத்துகின்றது. சந்திரலீலாளைப்போல் அநேக சுதேசிகள் குணப்பட்டு சபையில் சேர்வார்களாயின் இந்தியாவுக்கு அது எத்தனையோ நம்பிக்கைக் கேதுவான நற்காலமாகும்.

அஞ்ஞான தேசத்து ஜனங்களிடையில் சஞ்சரித்து அவர்களுடைய பக்தி விசுவாசத்தை நன்றாய் அறிந்திருப்பவர்களே அவர்களிடையில் அதிபிரயோஜனமான உத்தம கிறிஸ்தவ பணிவிடை செய்யத்தக்கவர்களா யிருப்பார்கள் என்ற சத்தியத்தையும் இந்தச் சரித்திரம் விளங்கப்பண்ணுகிறது.

இந்த ஆச்சரியமான ஜீவிய சரித்திரத்தை நமது பாலிய பணிவிடையாட்களான திரள்பேர் வாசித்து எழுப்புதலடைவார்களென்று நம்புகின்றோம்.

1902–ௌ அக்றோபர்மீ 21உ. } KINNAIRD.

# பொருள் அட்டவணை


| அதி. | | பக்கம். |
|---|---|---|
| 1. | சந்திரலீலாளின் பிறப்பும், கலியாணமும், வைதவ்வியமும் .... .... .... .... .... .... | 1 |
| 2. | கோவில் தரிசனமும் கஷ்ட நஷ்டங்களும் .... | 5 |
| 3. | சந்திரலீலாள் தவவேடம் பூண்டது.... .... .... | 10 |
| 4. | இந்துமார்க்கத்தின் பயங்கர பித்தலாட்டம் வெளியானது .... .... .... .... .... .... | 15 |
| 5. | சந்திரலீலாளின் விலங்கு தெறித்தது .... .... | 22 |
| 6. | சந்திரலீலாள் பணமும் சம்பாதிக்கப் பார்த்துப் பிரசங்கமும் நடத்தியது .... .... .... .... | 31 |
| 7. | சந்திரலீலாள் தன் சகோதரனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தது .... .... .... .... .... .... | 36 |
| 8. | ஸ்திரீகள் பிரசங்கிக்கலாமா? .... .... .... | 43 |
| 9. | சந்திரலீலாளின் வயோதிபகால யாத்திரை.... .... | 48 |
| 10. | குஷ்டரோகியான ஒரு சிறுமியின் குணப்படுதல்.... | 54 |
| 11. | இராஜமாளிகைக்குட் பிரவேசித்தல்.... .... .... | 62 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
3 - APR 1914
MADRAS.

# LIFE-SKETCH OF THE AUTHOR

---

## இப்புஸ்தகம் எழுதின அம்மாளின் சரித்திரச் சுருக்கம்

சந்திரலீலாளைப்பற்றிய இவ்வாச்சரிய ஜீவிய சரித்திரம் எழுதிய துரைசானிக்கு ஆடா லீ (Mrs. Ada Lee) என்று பெயர். இந்த அம்மாள் வட அமெரிக்காவின் ஐக்கிய மாகாணத்து மேற்கு வர்ஜினியாவின் மலைநாட்டில் ஏழைகளாயினும் வருந்தி உழைப்போரான பெற்றோருக்குப் பிறந்தவர்கள். சிறுவத்திலேயே இவர்களுக்கு கல்வியின்பேரில் மெத்த ஆசை ஆகையால், பாடசாலைக்குப் போகிற பாதை கரடுமுரடாயும் பனிக்கட்டி பெருத்ததாயும் இருந்தாலும் நாடோறும் தப்பாமல் நடந்துவிடுகிற வழக்கமுண்டு. அப்பாடசாலையில் கற்ற கல்வி திர்ப்தியாய்க் காணாததால் நெருங்கிய பந்துவான ஒருவருடைய உதவியினாலே ஒகியோ வென்னு மிடத்திற்குப் போய்த் தனது 14–ம் வயதில் அவ்விடத்துக் கலாசாலையில் சேர்ந்து படிக்கவே, சாப்பாட்டுக்காக வேறு தொழிலும் செய்துவந்தார்கள்.

1873–ம் வருஷத்து மார்க்க எழுப்புதற்காலத்திலே இவர்கள் ஜீவியப்போங்கு முற்றிலும் திரும்பிவிட்டது. எப்படியெனில், இவர்கள் சிலகாலம் ஆத்தும விசாரமடைந்து, அதனின்று ஆச்சரிய விடுதலைபெறவே, அந்தகாரத்திற்குள்ளிருந்த இருதயத்திற்கு வெளிச்சம் வந்திட்டது. பாவ அடிமைத்தனத்திற்குப் பதிலாக மகிமையான சுயாதீனம் வந்தது. ஆகவே எல்லாப் பயமும் அதிஷ்டக்கேடும் ஒழிந்து, மனமகிழ்ச்சியுள்ள கர்த்தாவின் பிள்ளையானார்கள். அப்போதுதானே தேவசித்தத்திற்கும் அவரது நடத்துதலுக்கும் தன்னை முற்றிலும் ஒப்புக்

கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார்கள். இந்தியாவுக்கு வரும்படி தேவகட்டளை பிறந்தபோது துவக்கத்தில் அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிய நல்ல மனதில்லை. ஆயினும் படிப்பு முடிந்து சோதனைநாட்களும் தீரவே, கர்த்தர்தாமே அவர்களுக்கு வழிதிறந்தார். எப்படியெனில் அமெரிக்க ஸ்திரீ ஜனங்களின் ஐக்கிய மிஷனெரி சங்கத்தார் அவர்களை அங்கீகரித்துக்கொண்டு 'ஆதித்தியப் பிரகாசமடைந்த அதிபாக்கியமுள்ள ஆத்துமா' வென்று மதித்தபடியே அவர்களைத் தம் ஆதரவின்கீழ் இத்தேசத்திற்கு மிஷனெரியாக அனுப்பிவைத்தனர்.

அச்சங்கத்து சதாப்த வருஷம் நவம்பர்மீ 4வ இத்தேசத்திற்கென்று கப்பலேறி வந்தார்கள். அப்படியாக தேவாவியின் ஏவுதலால் வங்காளநாட்டில் வந்து சேர்ந்து 5 வருஷக்காலம் அத்தியந்த பக்திவிநயத்துடனே கர்த்தாவின் நாம மகிமைக்கென்று அங்கே நல்ல வேலை செய்துவரவே, நற்பலன்களும் உண்டாயின. பின்பு மெதடிஸ்ற் எப்பிஸ்கோபல் மிஷன் சம்பந்தமான டேவிட் ஹெச். லீ (Rev. David H. Lee) ஐயரை மணம்புரிந்து இரண்டு வருஷமாக இருவரும் ஏக ஐக்கியத்துடன் ஆத்துமாக்களின் இரட்சிப்பை நாடி திருப்பணிவிடை இயற்றினர். அப்பால் ஐயருடைய சுகத்தாழ்ச்சியினிமித்தம் சுயதேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

இப்படி அமெரிக்காவுக்குப் போயிருக்கையில், அங்கேயும் சபை சம்பந்தமாய் ஒப்புவிக்கப்பட்டிருந்த வேலையை உண்மையும் ஊக்கமுமாய் நிறைவேற்றிவரவே, தண்ணீரினின்று வெளியேறின மீனானது தண்ணீருக்குத் தானே திரும்பிப் போக வாஞ்சிப்பதெங்ஙனமோ அங்ஙனமே லீ அம்மாளுக்கும் இந்தியாவுக்கு வரவேண்டுமென்பதே இச்சையாயிற்று. வங்காள ஜனங்களின் ஆத்தும சீரைப்பற்றி அந்தக் கிறிஸ்தவ தேசத்தாருக்கு அடிக்கடி பிரசங்கித்து அவர்களை எழுப்பிக்கொண்டிருந்தமையால், கிறிஸ்தவ அன்பால் ஏவப்பட்ட பல ஆத்துமாக்கள் இத்தேசத்தில் அவர்கள் நடத்தவேண்டிய வேலையில் அவர்கள் கையைத் தாங்க உற்சாகமடைந்தார்கள்.

மிஷனெரிச் சங்கத்தார் யாரும் தக்ஷணம் அவர்களை இத்தேசத்திற்கு அனுப்பிவைக்கக் கூடாமற்போனதால், லீ அம்மாள் இந்நாட்டில் கர்த்தருடைய வேலைக்கென்று 4,000 பவுண் சேர்த்துக்கொண்டு 1894–ஆம் அக்ற்றோபர்மீ ஐயரோடும் தங்கள் ஆறு பிள்ளைகளோடும் கல்குத்தாவுக்குத் திரும்பி வந்தார்கள். அங்கே சுயாதீனராய் என்றாலும் மெதடிஸ்ற் மிஷனைச் சார்ந்து திவ்விய ஊழியம் நடத்திவந்தார்கள். டார்ஜீலிங் ஆபத்திலே அவர்கள் ஆறு பிள்ளைகளும் மடிந்துபோயினர். ஆனாலும் அப் பெருந்துக்கத்தினாலே திவ்விய ஊழியத்தில் அவர்கள் சற்றாகிலும் இளக்கரித்துப் போகவில்லை. ஐயர் அப்பெரும் பட்டணத்தில் பிரசங்கம் நடத்தியும், பங்காளிகளான மாணாக்கருக்குப் படிப்பித்தும் வருகின்றார். அம்மாள் அன்னதானப் பள்ளிக்கூடம் நடத்தியும் பிள்ளைகளைப் படிப்பித்தும் வருகிறார்கள். நிர்வாகத் தாழ்ச்சியுள்ள பெற்றோருக்குப் பிறந்த நூற்றுக்கதிகமான பிள்ளைகள் அந்த அவர்களுடைய அன்னதானப் பள்ளிக்கூடத்திலே பராமரிக்கப்பட்டும் கல்விகற்றும் வருகிறார்கள். பின்னும் அன்னதானப் பராமரிப்படையாத எண்பது பிள்ளைகள்மட்டும் தினந்தோறும் வந்து படித்துக்கொண்டு போகிறார்கள். படிப்பெல்லாம் பங்காளிப் பாஷையிலேதான். வீட்டு வேலையும் ஊசித்தையலும் அவர்கள் பிரதான படிப்பு. பிள்ளைகளையும், விசேஷமாய்த் தங்கள் சொந்த ஜனத்தாருக்கு வேதம் போதிக்க விரும்புகிறவர்களையும் கிறிஸ்துநாதரிடம் வழிநடத்துவதே அப்பாடசாலையின் முழுநோக்கம். இந்தப் பாடசாலை மாணாக்கரில் பலர் விதவைகளானதால் வேதாகம ஸ்திரீகளாகவும் வாத்திச்சிமாராகவும் இருந்து அந்தர்ப்புரங்களிலும் சின்ன பிள்ளைகளிடையிலும் நல்லவேலை நடத்திவருகிறார்கள்.

# AN INDIAN PRIESTESS:
# THE LIFE OF CHANDRA LELA

---

## சந்திரலீலாள்

என்ற ஓர் இந்துமார்க்க குருநங்கையின்

# ஜீவிய சரித்திரம்

## 1. அதிகாரம்

### சந்திரலீலாளின் பிறப்பும், கலியாணமும், வைதவ்வியமும்.*

அறுபது வருஷங்களுக்கு முன்னே நேபாள மலைநாட்டுப் பிராமண குலமொன்றில் ஓர் பெண்குழந்தை பிறந்தது. அதன் பெற்ரோர் அதற்கு 'சந்திர கதிர் விளையாட்டு' எனக் கருத் தமைந்த **சந்திரலீலாள்** என்று பெயரிட்டார்கள்.

அப்பிள்ளையின் தந்தை தனவந்தனான ஓர் சமுசாரி. அவரது முற்பிதாக்கள் பல நூற்றாண்டுகளாய் நேபாளதேசத்து அரசரின் குடும்பப் புரோகிதரானவர்கள். அத்தேசத்தில் அதி மேன்மையும் அதி புண்ணியமுமாக மதிக்கப்பட்ட அவ்வுத்தி யோகத்திற்குக் குடும்பவழியாய் ஜேஷ்டகுமாரனாயிருந்தவன் சுதந்தரவாளியாயிருந்து குருத்தொழில் நடத்திவந்தான். சந்திர லீலாளின் பிதாவுக்கு நாலு மனைவிகள் உண்டு. ஆனால் அவளுடைய மாதாவே அவர்களனைவரிலும் அவருக்கு அதிக பிரியமானவள்.

---

* விதவைத்தன்மையும்.

சந்திரலீலாள் ஏழுவயசா யிருக்கையில்தானே அவளுக்குச் செல்லக்கலியாணம் செய்வித்தார்கள். மாப்பிள்ளைப் பிள்ளை யாண்டான் அந்தப் புரோகித வமிசத்து இன்னொரு கிளைவழி யில்தோன்றிய ஆசைக்கண்மணியான ஏகபுதல்வன். கலியாணப் பவிஷுகள் மெத்த கோலாகல வைபவத்துடன் நடந்தன. தற்பெருமை மிகுத்த அம்மருளாளிக் குடும்பத்து நம்பிக்கைகள் அனைத்தும் அச்சம்பந்தத்தின் சௌபாக்கியத்தையே நடுநாயக மாகக்கொண்டிருந்தன. அப்படியாகவிருக்கையில், கலியாண மாய் இரண்டு வருஷங்கள் கழிந்தபின், ஒருநாள் சந்திரலீலா ளின் மாமாவின் வீட்டினின்று வந்தெட்டிய ஓர் துக்க சமா சாரத்தால் அவளுடைய நாயகன் இறந்துபோனான் என் றறிந்து அவள் பெற்றூர் உற்றூர் புறத்தியார் யாவரும் துக்க சாகரத் தமிழ்ந்தினர். அக்குடும்பம் சந்தானமற்றுப்போனது மாத்திரமல்ல; சந்திரலீலாளும் தனது குழந்தைப் பருவத்தி லேயே அமங்கலியாகி சர்வசிருஷ்டிகளிலும் ஈனமானவளென இழிவடைந்தாள்.

அவள் 13 பிராயமாகுமளவும் தன் தகப்பன் வீட்டிலேயே இருந்தாள். அந்தக்காலத்தை அறச்சோம்பலில் தள்ளிக் கழி யாமல் அவள் தனது சொந்தப்பாஷையைக் கற்றுக்கொண்ட துந்தவிர, இந்துதேசத்துப் பாஷைகளனைத்திற்கும் தாயகமாகப் பட்ட சமஸ்கிருதத்தையும் படித்துக்கொண்டாள். அவள் அந்நியரிடம் சென்று படியாமல் வித்துவானாகிய தன் தந்தை யிடத்திருந்தே கற்றுக்கொண்டாள் என்றறிக. பின்னும் அவள் தன் தகப்பனோடு வெகு தொலைதூரமான ஜகநாதசுவாமி கோவி லுக்குச் சிறுப்பத்தில் முதல் தடவையாக ஸ்தலயாத்திரை புறப் பட்டு, இந்தியாவின் கிழக்கே புண்ணியஸ்தலமென் றெண் ணப்பட்ட அவ்விடத்திற்கு அலுப்பான நெடும்பிரயாணஞ் செய்தாள்.

ஜகநாதன் கோவிலைத் தரிசிக்கப் போவோரில் மிக்கப்பெயர் திரும்பவும் தங்கள் சொந்தவீட்டிற்கு வந்து சேராமல் அங் கேயே இறந்துபோவதுபோல சந்திரலீலாளின் தந்தைக்கும் சம்பவித்தது. அவர் எதிர்பார்த்திராவண்ணம் திடீரென மர ணப்படுக்கையிலாகி, ஜீவன் போமுன் தமது சின்ன மகளை நோக்கி, என் செல்லமே, நான் உன்னைவிட்டுப் பிரிந்துபோக வேண்டிய வேளை வந்திட்டது; இதோ, என் கொத்துச்சாவி, நீ வீடுபோய்ச் சேர்ந்தபின் நமது அறைகளையும் பெட்டகங்களை யும் திறந்து பார். அவற்றினுள்ளிருக்கும் நகைநட்டுக்கள் யாவும்

உன்னுடையவைகள்தான்: உன் புருஷன்வழியாய்க் கிடைத் தவைகளும் அவற்றுடன் இருந்தன: அவையனைத்தையும் நீ எடுத்துக்கொள் என்றார்.

சந்திரலீலாள் தாழ்க்கோல் கொத்தைக் கைப்பற்றியபின், தந்தை மரணத்தில் கண்மூடிப்போவதைக் கண்ணுற்றுத் துய ராழியில் மூழ்கினவளாகித் தியங்கித் தத்தளித்தாள். அவரு டைய உடல் தகனக்கிரியை யடைந்தபின் சொல்லரிய சோகத் தால் சோர்ந்துபோனளாயினும், அப்பால் சீக்கிரம் தன் சுய தேசத்திற்குத் திரும்பிய சில பரதேசிகளுடன் யாத்திரை கொண்டாள். வருத்தமான நீண்ட பயணத்தால் சங்கடப் பட்டு, சிலமாதங்களுக்குப்பின் வீடுசேர்ந்து தந்தையார் சொல் லியவாறு தனதுடைமைகள் யாவும் சரிப்பட்டிருக்கக் கண்டா ளாயினும், அவைகளைப்பற்றிய சந்தோஷத்தால் ஆறித்தேறி யிருக்க அவளுக்கு மனம்போகவில்லை. இந்துமார்க்கச் சுவடி களைப் படித்துத் தன் பாவங்களைப் போக்கடிக்க வகைபார்க்க வேண்டும் என்பதே, அவளுடைய அபிலாசையாயிருந்தது. ஆதலால் அடுத்த வருஷம் முழுவதையும் இந்துமார்க்க இரு ஸாந்தகார நூல்களைப் பாராயணஞ்செய்வதிலேயே போக்கடித் தாள். இப்பரதகண்டத்தின் புண்ணிய ஸ்தலங்களைப்பற்றியும், அவைகளைத் தரிசித்துத் தொழுவோர்க்குச் சித்திக்கும் வாக் குத்தத்தங்களைப்பற்றியுமெல்லாம் படித்தறிந்ததுமன்றி, தன்னை அமங்கலியாக்கிவைத்த பாவதோஷத்தினின்று விடுதலைபெறும் பொருட்டு, இந்தியாவின் நான்கு திக்குகளிலும் இருக்கப் பட்ட கோவில் ஸ்தலங்களைத் தரிசித்து, அவைகளில் தொழுது கொள்ளவேண்டிய முறைகளையும் எல்லாம் அவ்வாறே படித் தறிந்தாள். இந்துப்புராணங்களிலும் சாஸ்திரங்களிலும் சொல் லப்பட்டிருக்கிறவைகளின்படி யெல்லாம் செய்து, தோஷங் கள் நீங்கி புண்ணியங் கட்டிக்கொள்ளவேண்டுமென்பதே, அவ ளது முழுத் தீர்மானமாயிற்று.

அவள் ஒரு நீண்டபையைத் தனக்கென்று தைத்துக்கொண்டு, தன் பெட்டகங்களைத் திறந்து அகமுடையான் வழியாய்க் கிடைத்திருந்த பொன்னுருப்படிகளை எடுத்து அதை நிரப்பிக் கொண்டபின், அப்பையைத் தனது அரையில் சுற்றிக் கட் டிக்கொண்டாள்.

பின்னும் தனக்கு அவசியமான வஸ்திரங்களையெல்லாம் பொறுக்கிப் பொட்டணங்களாகக் கட்டிக்கொண்டு, நம்பிக்கை யுள்ள வேலைக்காரிகள் இருவருக்குத் தன் நோக்கத்தை வெளிப்

படுத்தி, அவர்களும் தன்னுடன்கூடி ஸ்தலயாத்திரை செய்து, இப்பரத கண்டத்துப் பிரபலப்பட்ட இந்துமதக் கோவில்களைத் தரிசித்துத் தொழுதுகொள்ளுகிறதானால், வேதநூல்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிற நித்திய பேரின்ப ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, ஆனந்தமடையலாம் என்று தெரிவித்தாள். இதற்கு அவர்களும் இணங்கிக்கொண்டமையால், அர்த்தராத்திரி தன் சகோதரர் சகோதரிகள் சிற்றம்மை முதலியோர் அயர்ந்த நித்திரையாயிருக்கையில், அவர்களுக்குத் தெரியாவண்ணம் மெல்ல வெளியேறி, அவ்வேலைக்காரிகளுடன் தெய்வத்தைத் தேடிப் பயங்கரப் பிரயாணமாய்ப் பரதேசத்திற்குப் புறப்பட்டுப் போனாள்.

தனது ராஜ்யத்து மலைகளையும் குன்றுகளையும் ஆறுகளையும் கால்வாய்களையும் எழுநாட்களாய் நடந்து தாண்டி, புகை வண்டிப் பாதைகளில்லாத இடங்களாதலால், கால் நொந்து நடை மெலிந்து போகையில், இடைக்கிடையே எக்காவண்டில்களுக்குக் கூலி கொடுத்தேறிச் சென்றாள். நடந்தாலும் வண்டியேறினாலும் தனது உருத்திராட்ச மாலைமணிகளை எண்ணியெண்ணி, வேதங்களினின்றும் அவை சம்பந்தமான திருவுரைகளினின்றும் தான் மனப்பாடம் பண்ணியிருந்த மந்திரங்களைப் படித்துக்கொண்டே போனாள்.

சென்றவிடமெல்லாம் குறுக்கிட்ட புண்ணிய நதிகளில் ஸ்நானஞ்செய்துகொண்டும், கண்டகண்ட விக்கிரக கோவில்களிலெல்லாம் கும்பிட்டுக் காணிக்கை செலுத்திக்கொண்டும், பூசாரிகளான பிராமணர்களுக்குச் சொர்னதான மளித்துக்கொண்டும், காடுமேடு கடந்து, நாடுநகர்களைத் தாண்டி சந்திரலீலாள் வழிநடந்தாள் நாதனைத் தேடி.

அப்படியாக அவள் வழிநடந்து இத்தேசத்து நான்கு திக்குகளிலும் இருக்கப்பட்ட நாலு பெரிய ஆலயங்களிலும் முதலாவதான காளிகாட்டுக்கு வந்தாள். காளிகாட்டு என்னும் இவ்வாலயத்தைப்பற்றித்தான் கல்குத்தா நகரிக்குப் பெயர் வந்தது. சந்திரலீலாள் கல்குத்தாவில் சேர்ந்து, கங்கைநதியில் ஸ்நானஞ் செய்து, காளிதேவியைத் தொழுது காணிக்கைகள் செலுத்தினாள்.

சந்திரலீலாள் முந்தின வருஷம் தன் பிதாவுடன் இங்கே வந்து போயிருந்தாள். இத்தடவையும் முன்போல் வேறநேக மருளாளிகளுடன் சேர்ந்து இவ்விடம் விட்டுப் பயணப்பட்டு இப்பரதகண்டத்தின் இரண்டாவது தேவஸ்தானமாகிய ஜகநா

தசாமி கோவிலுக்கு நடைகொண்டாள். இப்பிரயாணதூரத்தில் பசியினாலும் நோயினாலும் கஸ்திப்பட்டு நெடுக வழியோரங்களில் கைவிடப்பட்டோராய்ச் சகிக்கவொண்ணாத அவதிப்படும் பரதேசிகளான திரள்பெயரை அவள் கண்டாள். அவர்களில் பலர் தங்கள் இனஜனம் அருமையானவர்கள் யாரும் காணக்கூடாத அவாந்தரக் காட்டிலே முற்றிலும் கைவிடப்பட்டு, தங்கள் முழு நம்பிக்கையால் வாஞ்சித்து நோக்கினதொன்றையும் அடையாமலே பரிதாப நிலைமையில் வெட்டவெளியிலே செத்துப்போகிறதையும் காணலானாள். முந்தியொருதரம் அவ்வழி நடந்துசென்ற அவளுக்கு இந்தக் காட்சிகள் நூதனமல்லவாயினும், அவைகளைப் பின்னும் பின்னும் காணவே, அவளது யௌவன இதயம் வாடிச் சோர்ந்துபோனது. என்றாலும் அவள் பாதங்கள் புண்ணாகித் தொய்ந்துபோகக் கடுக நடந்து லோகப்பிரசித்தமான ஜகநாதன் கோவில் தரிசனைக்கு வந்து சேரலானாள்.

# 2. அதிகாரம்

## கோவில் தரிசனமும் கஷ்ட நஷ்டங்களும்

இந்தியாவின் பெரிதான நாலு க்ஷேத்திரங்களில் அதிபிரதானமாகிய இந்த ஜகநாதன் கோவிலுக்குச் சந்திரலீலாள் வந்துசேர்ந்து இரண்டுவாரம் தாமதித்திருந்து அந்த அசங்கிய விக்கிரகத்தைத் தொழுதுகொண்டாள். அங்குள்ள பிராமணருக்கு அவள் பெரிய விருந்துபண்ணி, அவர்களுக்கு அமுதளிக்கவென்று ஒரு பாற்பசுவும் தானங்கொடுத்தாள். பின்னும் ஜகநாதனுக்குக் காணிக்கையாக தடவைக்கு 25 ரூபாயாக இரண்டுமுறை காணிக்கை செலுத்தினாள். அவ்விடத்து சாமிக்குரிய புண்ய கருமாதிகளாகத் தான் செய்யவேண்டிய அனைத்தையும் செய்து நிறைவேற்றியபின், இந்தியாவின் இரண்டாவது பெரிய கோவிலைத் தரிசிக்கவென்று மோசகரமான யாத்திரை தொடுத்தாள். இத்தேசத்தின் தென்கடைகோடியை அடுத்திருப்பதாகிய அப்பேய்க்கோவில் போய்ச்சேர அவள் அநேக மாசம் இளைப்பூர்ந்த யாத்திரை போகவேண்டியிருந்தது.

மாசங்கள் பல கடந்து வருஷங்களானபின் சந்திரலீலாள் இப்பரதகண்டத்து நாலு பிரதான ஆலயங்களில் இரண்டா

வதான இராமநாதன் கோவில் போய்ச் சேர்ந்து பத்து நாள் அங்கே தங்கித்தரித்து இராமனை வணங்கிப் பிராமணருக்கும் பெரிய விருந்து செய்து, இராமநாதனுக்குப் பால் கொடுக்க ஒரு பாற்பசுவும் வாங்கித் தானங்கொடுத்தாள். இராமன் சாயலான ஒரு சின்ன சொரூபத்தையும் அவள் விலைக்கு வாங்கி அதைத் தான் சென்ற இடமெங்கும் கொண்டு திரிந்து தனது விசேஷ தெய்வமாக நமஸ்கரித்து வந்தாள்.

அங்கிருந்து அவள் பின்னும் தன் தளர்வான யாத்திரையைத் தொடுத்தியற்றி உருத்திராட்ச மணிமாலையையும் கையிலேந்தி அதை எண்ணியெண்ணி வழிநெடுக மந்திரோச்சாரணம் பண்ணிக்கொண்டும் தன் குருட்டுப்பக்திக் கிசைய கண்ட கண்ட சுவாமிகளையெல்லாம் வணங்கிக்கொண்டும் வழி நடந்தாள்.

அந்தக் காலத்துப் பிரயாணம் பிரயாசம் மிகுத்ததாயினும் சந்திரலீலாளின் தீர்மானத்தைக் குறுக்கே மறிக்கக்கூடிய தொன்றுமில்லாதிருந்தது. ஆகவே, அவள் எவ்வித கஷ்டத்தையும் சட்டைசெய்யாமல் அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்றவாறு நாளுக்குநாள் மெல்லமெல்ல முன்னேறி நடந்து இந்தியாவின் மேற்கோடியில் இருக்கும் ஒச்சியப்பட்ட துவாரகநாதன் க்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தாள்.

சந்திரலீலாள் இவ்வாலயத்திற்கு வந்து சேர்ந்து தன்னுடம்பெங்கும் சந்தனம் பூசிக்கொண்டிருந்து 15 நாள் அங்கே கும்பிட்டு விழுந்து அவ்விடம் வந்துபோன பிராமணருக்கும் பக்கிரிகளுக்குமெல்லாம் அன்னதானமும் சொர்னதானமும் வேண்டியமட்டும் ஈந்திட்டாள்.

சந்திரலீலாளும் ஆசைமிகுத்த அகத்துடனாயினும், அயர்ந்தாடிப்போன ஆகத்தோடு அந்தத் திருமலையின் அடிவாரம் போய்ச் சேர்ந்து தனது உண்மைத் தோழிமாருடன் மலைமிசை ஏறிச் சென்றாள். பாதரட்சை அறியாத அவர்களுடைய வெறும் பாதங்கள் குளிரால் திமிர்த்தும் உறைபனி ஜலக்கட்டிகளால் அடிப்பட்டுக் கீறி இரத்தம் வடித்தலுமாயின. ஆதலால் அவர்கள் அங்கே தங்கள் பொக்கணங்களை அவிழ்த்து அவைகளிலிருந்து பழந்துணிகளையெல்லாம் எடுத்து இரத்தம் வடிந்து கொண்டிருந்த அப்பாதங்களில் சேர்த்துச் சுற்றிச் சுற்றிக் கட்டிக்கொண்டு, தைரியம்விடாத தாளாண்மையுடன் தாண்டி ஏறினும், ஒன்றுக்கொன்று அம்மலங் குளிர்மிகுத்த ஆகாயம் சகிக்கவொண்ணுக் கூதலாய் அவர்களைச் சிலுசிலென ஆட்டி அனாஉயிராக்கிற்று. என்றாலும் மோசம் மிகுத்த அப்பாதை

யினூடு மெல்ல மெல்ல நகர்ந்தூர்ந்து தள்ளிக்கொண்டிருந்த ஜலக்கட்டிப் படலங்களைப் பற்றிப்பிடித்தும், உறைபனி செறிந்த பாறைகளையும் பாறை வெடிப்புகளையும் தத்தித் தழுவியும், கடைசியில் செத்தோம், பிழைத்தோமென அப்புண்ணிய தேவஸ்தானம் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே தாங்கரிய குளிர் அவர்களை ஆட்டியறையப் பட்டபாடு குட்டைகொள்ளாதாயினும் ஐந்துநாள் தாமதித்திருந்து வேண்டிய காணிக்கைகள் செலுத்தி, சுவாமிக்குச் செய்யவேண்டிய ஜெபதப நமஸ்கார சேவையனைத்தும் குறையறச் செய்து நிறைவேற்றியபின், தாங்கள் அங்கே அடைந்த தேகதெண்டத்தைவிட இனி அத்தெய்வத்திற்குப் படைக்கவேண்டிய நைவேத்தியம் பிறிதொன்றுமில்லையெனத் தெளிந்து தேறி, இனி க்ஷணப்பொழுது அங்கு தறுகினுல் அக்கொடிய கூதலால் தனக்கும் தன்னேடிருப்பவர்களுக்கும் உயிர் நாசம் நேரிடுவது திண்ணமென ஓர்ந்து மீந்திருந்த அரை உயிருடன் அத்தேவகிரியினின்று கீழ்நோக்கிப் பயணப்பட்டனர். ஆனுல் ஐயோ இந்தப் பாடெல்லாம் பட்டுத்தரித்தும் சந்திரலீலாளின் உள்ளத்தை உறுத்தி வருத்தின பாவபாரம் கிஞ்சிதமும் நீங்காமல் சோர்ந்து தியங்கித் தத்தளித்துக்கொண்டே இறங்கி யிறங்கி வழிநடந்தாள். அவள் தன் சொந்த வீடுவிட்டுத் தெய்வத்தைத் தேடிக் காணவேண்டுமென்று புறப்பட்டு அதற்காக இந்தக் கக்கிஷமான நீண்ட ஸ்தலயாத்திரை தொடங்கி இப்போது ஏழுவருஷங்களாகியும் இன்னும் அவரை அவள் கண்டடைந்ததில்லை. ஆயினும் தான் செய்திருக்கவேண்டிய கருமாதிகளில் யாதொன்றைச் செய்யாது பிசகிவிட்டுப்போயிருந்தால் அது தோஷமாகுமே என்ற அச்சத்தால் தன் வழிக்கு அப்பாலிருந்த கேதாரநாதன் சிகரத்திலிருக்கும் தேவகிரகத்திற்கு ஏறிப்போய் தான் கொண்டு நடந்த கங்கைநதி ஜலத்தால் அங்கிருந்த விக்கிரக சுவாமிக்கு புண்ணிய தீர்த்தம் தெளித்து அவ்விடத்தில் நிறைவேற்றவேண்டிய சடங்குகளையும் சரிவர நிறைவேற்றினுள்.

அங்கிருந்து அவள் பின்னும் கால் எட்டி நடந்து இமயகிரி அடிவாரத்தண்டை சேர்ந்து ஓச்சியப்பட்ட புண்ணிய ஸ்தலயாத்திரைபதியாகப்பட்ட ஹரிதுவாரம் சேரலானுள்.

சந்திரலீலாளும் பாங்கிமாரும் இவ்விடத்தில் தீர்த்தமாடி, தங்களைப்போல் தூரதேசங்களிலிருந்து புண்ணிய தீர்த்தத்திற்காய் வந்திருந்தவர்களில் பலர் கண்கொண்டு பார்த்துச் சகிக்கவொண்ணுத கஷ்டங்களையும் மரண உபாதிகளையும் அங்கே பட்டுத்தரித்து வியாகுலமடையும் மறுக்கத்தையு மெல்லாம்

கவனித்துப் பார்த்தபோது, இயல்பாய் தைரியமுடையதாயி னும் மெத்த மிருதுவும் உருக்கமுமுடைய அவள் இருதயமா னது பிரலாபத்தால் இளக்கரித்துப்போனது என்றாலும் அவள் தன் யாத்திரையில் காஸ்மீரத்துக்கு நேரே போய் இந்துப் புராண காவியங்கள் குறிப்பிக்கும் பற்பல தேவஸ்தானங்களைத் தரிசித்து கும்பிட்டு விழுந்து காணிக்கைகள் செலுத்தி, கண்ட கண்ட பிராமணருக்கெல்லாம் அன்னதானமும் சொர்னதான மும் ஈந்திட்டாள். அப்பால் அவள் திரும்பி முத்திராவுக்கு வந்து தனது திருச்சுவடிகளில் சுட்டிப் பேசியிருக்கும் அந்த ஸ்தலத்தைப் பார்த்து அங்கே கிருஷ்ணன் தனது கைவிர லால் மலையை எடுத்துயர்த்தி நின்றதைச் சிந்தனைசெய்தும், கண்டுகேட்ட எவற்றாலும் ஆத்துமாவுக்கு ஆறுதலொன்றும் கிடையாமல் விசாரமுற்றாள். ஆயினும் அவள் அவ்விடம் விட் டுப் புறப்பட்டு தேவநகரி என்னப்பட்ட அலகபாத்துக்குச் சென்று கங்கையும் யமுனையும் தத்தம் புனர்பிரவாகத்தை ஒன்றுபடக் கலக்குமிடத்தில் புண்ணியஸ்நானஞ் செய்தாள்.

இவ்விடத்து தேவஸ்தானத்தில் சிறப்பு நடந்த ஒருமாசக் காலமும் அவள் தங்கித் தரித்து நாடோறும் தீர்த்தமாடித் தொழுதுகொண்டுவந்தாள். இங்கே நிலவறைக்கோவில் ஒன் றிருந்தது. அதற்குள்ளும் அவள் சென்று அவ்விக்கிரகத்தைக் கும்பிட்டுப் பூமிக்குள் அக்கோவிலின் நடுவே குத்திருட்டில் வளர்ந்து நிற்பதாகத் தனக்குத் தெரிவிக்கப்பட்ட ஓர் புண் ணியதருவின் சில இலைகளையும் வாங்கிக்கொண்டு போனாள். அவ்விலைகள் வியாதியஸ்தருக்குச் சுகமளிக்குமென்று அங்குள்ள பூசாரிகள் புளுகினர். ஆனால் அதைப்பற்றிய யதார்த்தம் யாதெனில், தூரதேசத்தினின்று அவ்விடம் தொழுதுகொள்ளப் போம் பரதேசிகளுக்குத் தெரியாவண்ணம் பூசாரிகள் தானே இராமானமாய் ஒரு மரத்திலைகளை வெளியேயிருந்து கம்புக ளுடன் ஒடித்துக்கொண்டுபோய் வைத்துத் தொழும்பர்களை அவ்விதம் ஏமாற்றிக்கொண்டு வந்தார்கள்.

சந்திரலீலாள் தன் கையிலிருந்த சாஸ்திர ஏடுகளை அனுதி னம் கருத்தாய் வாசித்து அவற்றின் கற்பிதங்களுக்கிசையச் சகலத்தையும் செய்து முடித்தபின், கங்காநதித் தீரமாய் கீழ்த் திசை நோக்கி நடந்து இந்துக்களின் அதிபுண்ணிய நகரியா கிய காசிப்பட்டணம் போய்ச் சேர்ந்தாள். அங்கே அவள் சங்கார தேவனாகிய சிவனைத் தொழுதுகொண்டு அச்சேத்தி ரத்துத் தலைமைப் புரோகிதனான பிராமணனுக்கு கட்டளைப் படியே ஒரு குடையும் ஒரு படுக்கையும் ஒரு மூடுதுகிலும்

ஒரு உண்கலமும் ஒரு பானபாத்திரமும் ஒரு விளக்கும் ஒரு மட்குடமும், விக்கிரகத்திற்குத் தீர்த்த ஜலம் தெளிக்க ஒரு சீசாவும் சந்தனக்கட்டைகளும் ஒரு பாற்பசுவும் தானங்கொடுத்தாள். தனது புஷ்பக் காணிக்கைகளைக் கங்கையில் எறிந்து கொடுத்தாள். மற்றுள்ளோரும் அவ்வாறே ஆங்காங்கு எறிந்து செலுத்திய கணக்கற்ற காணிக்கைகளாகிய புஷ்பக்கொத்துகளுடன் அதுவும் ஜலப்பிரவாகத்தில் இழுப்புண்டு போகையில் பார்ப்போர் கண்களுக்கு மிதந்தோடும் பூந்தோட்டம்போலிருந்தது. அதைக் கண்டவர் மனங்களித்துப் பூரிக்கினும் சந்திரலீலாளின் உள்ளத்திலோ எல்லாம் வெளிச்சமற்ற கார் மேகமாகவே இருந்தன. அளவிறந்த விக்கிரகக்கோவில் நிரம்பிய அந்தப் பிரமாத்திய விக்கிரகாசனத் தலத்தில் அவள் நெடுநாள் தங்கித் தரித்து தீர்த்தமாடித் தொழுது காணிக்கைகளும் செலுத்திவந்தாள். இராமனின் பிறந்தகமாகிய ஸ்தலத்தையும் அவள் தரிசித்து தனது அருமையான விக்கிரகத்தை ஒருமாதம் அங்கே கும்பிட்டுச் சேவை புரிந்தாள். அந்தக் கோவிலில் இராமனின் பத்தினி சீதாதேவியின் சமையற்பாத்திரங்கள் இருக்கின்றனவென்று புளுகி அப்படியாகச் சொல்லிக் கொள்ளப்படுகின்றவைகளை அவளுக்குக் காண்பித்தார்கள். ஆனால் ஐயோ இவ்விடத்தை யடுத்து அவள் தாமதித்திருக்கையில் அவள் வேலைக்காரிகளில் ஒருத்தி விஷபேதி கண்டு யமலோகஞ் சென்றாள். அவளுடைய ஜீவனைக் காப்பாற்றக் கருதி சந்திரலீலாள் தான் அறிந்த சிகிச்சையெல்லாம் செய்து பார்த்தும் ஒன்றும் பயன்படாது போயிற்று. போலீசார் வந்து பிரேதத்தையும் சீலைகளையுமெல்லாம் சுட்டெரித்தார்கள். சின்னாட்களுக்குப்பின் மற்ற வேலைக்காரியும் அவ்வாறே மரித்துப்போக சந்திரலீலாள் தனித்தவளாகித் தன் ஜீவகாலத்தில் முதல் தடவையாகத் தண்ணீர் எடுத்துவந்து தன் சமையற்காரியங்களைத் தானாகவே செய்துகொள்ளவேண்டியதாய்த் தீர்ந்தது. இதால் அவளுக்கு அதிக மனச்சோர்பும் சங்கடமும் உண்டாகவே, அப்பால் செய்யத்தக்கவை யாதெனத் தெரியாமல் தத்தளிக்கலானாள்.

அவள் தன் வீட்டை விட்டுத் தேவர் கிரகங்களைத் தரிசித்து தொழுதுகொள்ளவேண்டிய ஸ்தலயாத்திரையாகப் புறப்பட்டு இப்போது ஏழு வருஷங்களாயிற்று. அவள் அப்படித் தத்தளித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் அவள் இருந்த வழியாய்ச் சில பரதேசிகளான தொழும்பர் கடந்துபோகக் கண்டு அவர்கள் போகுமிடத்தைப்பற்றி விசாரிக்கவும், அவர்

கள் ஜகநாதன் கோவிலுக்குப் போகிறதாகத் தெரிவித்தார்கள். அப்போதவள் தான் தனித்தவளாக விடப்பட்டிருப்பதை அறிவித்து அவர்களுடனே அவ்விடத்திற்கு நடந்துபோகச் சம்மதங் கேட்டாள். அதற்கவர்கள் தாங்கள் ஒரு நெருங்கிய காட்டினூடே நடந்துபோக வேண்டியிருப்பதால் மறுதலம் பற்று முன் படப்போகிற பாடு மிகக் கொடிதாகுமென் றறிவித்து அவளை நிறுத்தப் பார்த்தார்கள். அவளோ அதையெல்லாம் வகைவையாமல் தொடர்ந்து நடந்து அவர்களுடன் சொல்லரிய உபத்திரவங்களையெல்லாம் பட்டுத்தரித்தாள். அவள் தேவஸ்தலங்கள்தோறும் பெருந்தொகையான காணிக்கைகள் செலுத்தி தானதர்மங்க ளீந்து தனக்கும் தன்னுேடிருந்தவர்களுக்கும் வேண்டிய போஜனுதிகளுக்காகவு மெல்லாம் பணச்செலவு செய்துவந்தபடியால் தன் பொக்கணத்தில் கொண்டுவந்திருந்த திரவியமெல்லாம் ஏகதேசம் அடிபட்டுப் போயிற்று. அவளுடைய சுத்த சுயாதீனமான ஆவி எவ்வகையானதோ இந்த யாத்திரை காலங்களிலெல்லாம் பரதேசிகளுக்குக் கொடுக்கப்பட்டதான யாதொரு தின்பண்டத்தையும் அவள் ஒருக்காலும் வாங்கி அனுபவித்திருந்ததேயில்லை.

# 3. அதிகாரம்

## சந்திரலீலாள் தவவேடம் பூண்டது

பரதேசிகளான அத்தொழும்பர்க் கூட்டம் தங்கள் பிரயாணத்திலே ஒருநாள் மிதுனபுரிக்கு இருபதுமைலுக் கப்பாலிருந்த ஒரு இராஜனின் அரமனையடுத்து வந்தார்கள். அந்த இராஜன் பரதேசிகளுக்கென்று அங்கே ஒரு மடம் கட்டிவைத்து அதில் வந்துபோகும் பரதேசிகளுக்கு நாடோறும் சாதம் பருப்பு நெய் முதலியன அனுப்பிவைக்கும் வாடிக்கையிருந்தது. சந்திரலீலாளும் அவள் கூட்டத்தாரும் அந்த மடத்தில் போய்ச் சேர்ந்து இளைப்பாறிக்கொண்டிருக்கையில் அவள் வழக்கப்படிக்குத் தன் சாஸ்திர ஏடுகளை எடுத்து வைத்துப் படித்துக் கொண்டிருந்தாள். அப்போது இராஜாவின் மனுஷன் சாப்பாடு கொண்டுவந்து பரிமாறினுன்; அவன் சந்திரலீலாளிடம் வந்து, அவளுடைய பங்கை நீட்டினபோது அவள் அதை வாங்கிக்கொள்ளாமல் “எனக்குச் சொந்தப் போஜனம் இருப்ப

தால் வேறொருவருடையது அவசரமில்லை" என்று சொல்லி விடவும், அவன் ஆச்சரியப் பிரமைகொண்டு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு, பின்பு இராஜாவிடம் திரும்பிப் போனபோது தான் பரிமாறின போஜனாதிகளை எல்லாரும் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டதாகவும், ஒரு ஸ்திரீ மாத்திரம் அதை வேண்டாமென்று சொல்லித் தனது சாஸ்திரச் சுவடிகளைப் படித்துக்கொண்டிருப்பதாகவும் அறிவித்தான். உடனே இராஜாவானவர் ஆளனுப்பி அவளை வரவழைக்க, இராணியும் பாங்கிமாரும் இருந்த அரமனையில் அவள் கொண்டுவந்து விடப்பட்டாள்.

அப்போதவர்கள் அவளைப் பார்த்து "நீ எவ்விடத்திலிருந்து வந்தவள்? நாங்கள் அனுப்பியிருந்த உணவை நீ வாங்கிக்கொள்ளாததேன்?" என்று கேட்க,

அவள், "நான் நேபாள தேசத்திலிருந்து வந்தவள்; என் தந்தையார் நேபாள தேசத்து இராஜாவின் குடும்பப் புரோகிதர்: நான் என் சொந்தச்செலவில் யாத்திரைசெய்து, என் போஜனத்தை நானே விலைகொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறேன்" என்றாள்.

'நீ இவ்வளவு தூரம் வந்ததேன்' என்று அவர்கள் மறுபடியும் கேட்க, 'நான் தெய்வத்தைத் தேடிக் கண்டடைந்து பாவ தோஷங்களினின்று விடுதலையடைய வகை பார்க்கிறேன்' என்றாள்.

பின்னும் அவள், இராஜாவும் இராஜஸ்திரீயும் கேட்கத் தன் சரித்திரத்தைச் சொல்லித் தான் புண்ணியஸ்தல யாத்திரை செய்துவந்த இந்த வருஷங்களிலே பட்டுத்தரித்திருந்த அவஸ்தைகளையும் அனுஷ்டானங்களையுமெல்லாம் எடுத்துரைத்து 'நான் தெய்வத்தைக் கண்டுபிடிக்கலாமென்ற நம்பிக்கையோடேதான் இதையெல்லாம் பட்டுத் தொலைத்தேன்' என்றாள்.

இவையனைத்தையும் காதாரக்கேட்ட ராஜசமுகத்தில் பரிதாபமும் உருக்க விரக்கமும் வெளிப்படவே, இராஜன் அவளை நோக்கி 'நீயும் எங்கள் குடும்பப் புரோகிதரின் குமாரத்தியைப்போலொத்தவளாய்க் காணப்படுதலால் எங்கள் சொந்தக் குமாரத்திக்குச் சரிப்பட்டவள்தான். ஆகவே, நீ உன் அலைச்சலைவிட்டோய்ந்து இங்கே தரித்து எங்கள் குலகுருவுத்தமியா யிருப்பாயாக' என்றார்.

அவ்வாறே, அவள் அங்கே தங்கியிருக்க உடன்படவும், இராஜன் அவளுக்கென்று ஒரு வீடும் கட்டிக்கொடுத்து வேலைக்காரிகளையும் விட்டுக்கொடுத்தார். அவள் இராஜாவின் கொட்

டாரத்திலிருந்து ஸ்திரீ ஜனங்களுக்கு சமஸ்கிருதம் படிப்பித்தும் சாஸ்திரங்கள் காவியங்களை வாசித்துக்காட்டியும் அவர்களுக்காகப் பூசனைகள் நடத்தியும்வந்தாள். அதுவுமன்றி இராஜகொட்டாரத்து வேலைக்காரரிடத்திருந்து பங்காளி ஒரிஸாவென்னும் பாஷைகளையும் கற்றுக்கொண்டாள். எவரும் அவளைப் பக்திவிநயத்துடனே ஆசரித்துவந்தனர். இராஜாவும் இராஜஸ்திரீயுங்கூட காலைமாலைகளில் அவளுக்கு முன்பாகக் குனிந்து கும்பிட்டுவந்தார்கள். இப்படி செல்விக்கையான நமஸ்கார உபசாரணைகள் பெற்று அங்கே ஏழுவருஷம் தங்கியிருக்கையில் அவ்வரசனும் அவரது சிரேஷ்ட இராணியும் தேகவியோகமாகி அவர்களது ஜேஷ்ட புத்திரன் கிரீடபதியானான். அப்போது அவளுக்கு வயது 28. அவள் எந்நேரமும் தனது தேவர்களுடைய உக்கிரத்தைச் சாந்திபண்ண ஜாக்கிரதையோடே முயன்று கிரியை நடத்தியும் தான் நாடின ஆத்தும சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் கண்டடையாமற்போனாள். இதுகாரணத்தால் கடைசியாக இன்னுமொரு ஸ்தலயாத்திரை போய்வர நினைந்து ஒரு பொய்யைச் சொல்லி அவ்விடத்தை விட்டுப் பிரிந்துவிடத் தீர்மானித்துக்கொண்டதால் தன்னுடைய ஜெனன தேசத்திற்குப் போகப்போகிறதாக அப்புதிய வேந்தனிடம் புளுகிச் செலவு பெற்றுக்கொண்டு புறப்பட்டு நடந்துவிட்டாள்.

இவ்வாறு சந்திரலீலாள் இராஜனுக்குச் சுபமொழியான வந்தனஞ்சொல்லி அவர் கொடுத்த 25 ரூபாயையும் பெற்றுக்கொண்டு தந்திரமாய்த் தான் கருதிய ஸ்தல யாத்திரையைப் பின்னும் தொடங்கினாள். இந்தத்தடவை தனது யாத்திரையில் மூன்று வருஷம் தேக உபத்திரவ மடையவேண்டுமென்றுலோசித்துக்கொண்டு இந்து சாஸ்திரங்களில் விதித்திருக்கிறபடி தேவர்களுக்குப் பிரியமானதாகத் தான் எண்ணிக்கொண்ட குரூர வேதனைகளைத் தனக்குத்தானே செய்துகொள்ளத் தீர்மானித்து, ராமகங்கைக்கு நடந்து சென்று அவ்விடத்துத் தவசிகளுடன் சேர்ந்துகொண்டாள். அவ்விடம்போய்ச் சேர்ந்த மருளாளிகள் ஒவ்வொருத்தரும் தத்தம் மனதுக்குப் பொருந்திய தவம், தேகோபத்திரவம் ஆதியானவற்றைத் தெரிந்துகொண்டு, சிலர் அதன்படியே இரும்பு முட்கூர் நெருங்க அடுக்கிய படுக்கைகளில் படுத்துக்கொண்டனர். வேறு சிலர் ஆற்றங்கரை மணலைத் தோண்டி அதிலிறங்கி மோவாக்கட்டையளவு மணல் நிரப்பித் தங்களைப் புதைத்துக்கொண்டிருந்தார்கள். வேறு சிலர் புகைந்துகொண்டிருக்கும் கொள்ளிக்கட்டைகளைப் பரப்பி

அதன்மேல் படுத்திருந்தார்கள். பின்னும் சிலர் தங்கள் கைப் புயங்களின் சதையானது எலும்புடன் ஒட்டி யுலர்ந்து போய் விரல்களின் நகங்களும் அநேக அங்குல நீளம் வளர்ந்து சாடி வாடி வதங்கின கையைச் சுற்றி வளைந்தெழும்பி அல்லது கைச்சதையை ஊடறுத்துப் பொத்து வெளியாகுமட்டும் அவை களை ஒரே நிலையாய் உயர்த்தி வைத்துக்கொண்டிருந்தார்கள். சந்திரலீலாளோ தான் செய்துகொண்ட பொருத்தனைப்படிக்கு தன் தேகமெங்கும் சாம்பலை வாரிப் பூசியும் முகத்தில் வெண் புள்ளி செம்புள்ளி குத்தியும் அலங்கோலப்படுத்திக்கொண்டு, அலங்காரமான தன் நீண்ட கூந்தலில் பசுவின் சாணியை வாரிப் பூசி அதைப் பயங்கரக்கோலமாய்த் தலையின் உச்சியில் இழுத்து ஒரு முடிப்பாகக் கட்டி வைத்துக்கொண்டாள். பின் னும் அவள் தன் கழுத்தில் நீளமான உருத்திராட்சமாலை தரித் துப் பாதங்களில் மிதியடியும் போட்டுக்கொண்டாள். ஒரு மான்தோல் அவளுக்குப் படுக்கை; விக்கிரகங்களின் முன்னி லையில் நைவேத்தியக் கிரியைகள் நடப்பிக்க ஒரு இரும்பிடுக் கியும் அவள் கையிலிருந்தது. இந்தக்கோலமாக வருஷத்தில் அதிகாங்கையான ஆறுமாசம் எரிபந்தமான வெயிலில் தன்னைச் சுற்றிலும் பஞ்சாக்கினி வளர்த்து வைத்து நடுவில் மான்தோலை யும் போட்டு உட்கார்ந்திருந்தாள். பகல் முழுவதும் இப்படி உட்கார்ந்திருக்கையால் அவள் தேகம் முழுதும் வேர்வை சிந்திக் கொண்டிருந்தது. இத்தனைக் கஷ்டமும் போதாதென்று இராக் காலங்களில் விக்கிரகத்திற்குமுன் சென்று ஒரு காலூன்றி நிற்க, மற்றக்காலை ஊன்றிய காலின் முட்டுக்குமேல் குறுக்கே தாங்க வைத்துக்கொண்டும், அவ்விக்கிரகத்திற்கு நேரே தன் இரு கரங்களையும் கூப்பிச் சேர்த்து வைத்துக்கொண்டும் சுவாமி தன்னை அவளுக்கு வெளிப்படுத்தும்படி மன்றாடிக்கொண்டு 12 மணிமுதல் விடியுமட்டும் அந்நிலையிலேயே நின்றுவந்தாள். இப்படி ஒரு பக்கிரியாட்டமாய் விக்கிரக பீடங்கள் இருந்த இடமெங்கும் போய் ஒவ்வொன்றிற்கு முன்பாகவும் மூன்று மாதக்காலம் தங்கி மேற்கூறிய கோலம் நடித்துக் கருமம் நடத் திவர தனவந்தர் தரித்திரர் என்ற விகற்பமின்றி எவரும் அவளை யும் கும்பிடத் துவக்கினர். ஐசுவரியவான்களானவர்கள் ஓமத்தீ வளர்ப்பதற்கென்று தாங்களே விறகுக்கட்டைகளைக் கொண்டு வந்து அவளைச் சுற்றிலும் அதை வளர்த்து அது அணைந்து போகாமல் காத்துவந்தார்கள். அது புண்ணிய கிருத்தியமென் றும் அதனால் வெகு புண்ணியங் கட்டிக்கொள்ளலாமென்றுமே அவர்கள் அப்படிச் செய்தார்கள்.

வெயில்காலங்களில் இப்படி நடந்து குளிர்காலமானபோது இரவில் ஒற்றைக்காலில் நிற்பதை நிறுத்தி குளத்திலே கழுத்தளவு தண்ணீரில் போயிருந்துகொண்டு அஸ்தமனமுதல் விடியுந்தனையும் தனது உருத்திராட்சமணிகளை எண்ணியெண்ணி மந்திரங்கள் படித்தாள். இதைப்பற்றி சந்திரலீலாள் தானே பிற்காலத்தில் சொன்னதாவது:—

'அந்த ராக்காலங்கள் விடியாத எத்தனையோ நெடுநேர ஜாமங்களாய்த் தோன்றினவென்றும், விடிந்து வருமுன் நான் அடைந்த உபத்திரவம் எத்தன்மையானதென்றும் எனக்கேயன்றி வேறொருக்குத்தான் தெரியப்போகுது. அந்த உருத்திராட்சத் தாவடத்தில் கோத்திருந்த மணிகள் 108; ஒவ்வொரு மணியையும் தள்ளிவிடவே, ஒரோர் தேவனின் பெயரை சொல்லிக் கூப்பிட்டேன். மணிமணியாய் அத்தாவடம் முழுவதையும் எத்தனைதரம் எண்ணி மந்திரோச்சாரணம் பண்ணி முடித்தேன் என்பதற்கு மற்றக் கைவிரல்களால் கணக்குவைத்தேன். இப்படி ஒருராத்திரியில் உருத்திராட்சமாலை முழுவதையும் ஆயிரந்தரம் சொல்லி முடிக்கவே, லட்சத்து எண்ணாயிரந்தரம் தேவர்களின் பெயர் உச்சாரணமாகும். நான் கீழ்த்திசையை நோக்கிப் பொழுது எப்போதாவது விடியுமாவென்று பார்த்திருப்பேன். கொடிய குளிரால் திமிர்த்துப்போன என்னுடம்பின் அவயவங்களை விடிந்தபின் தண்ணீரினின்று கூடிய மட்டும் மெல்ல மெல்ல இழுத்தெடுத்து நெடுஞ்சாங்கிடையாய்த் தரையில் வீழ்ந்து ஊர்ந்தூர்ந்து பகல் முழுதும் விக்கிரகத்தைக் கும்பிட்டுக்கொண்டிருக்கவேண்டிய ஸ்தலம் போய்ச் சேருவேன்: அடிக்கடி உட்கார்ந்திருந்தே தூங்கினேன். இப்படி இராப்பகலாய் இராமனை நோக்கிக் கதறிக் கெஞ்சியும் எனக்கு மறுவுத்தர வில்லாமற்போயிற்று. தெய்வத்தைக் கண்டடையவேண்டியே இந்த அனுஷ்டானங்களையெல்லாம் நிறைவேற்றிப் படாத பாடுகளைப் பட்டுத்தரித்தேன்' என்பதே.

இந்த மூன்று வருஷங்களிலும் உப்போ, சோறோ, வேறெவ்வித தானிய தவசவகையோ அவள் வாய்க்குட் போனதில்லை. அவள் தன்னுடன் கொண்டுசென்ற பழமேயன்றி வேறொன்றும் அவளுக்கு உணவாயிருந்ததில்லை. அவள் தனக்கு முன்னிருந்த விக்கிரகத்தைப் பார்த்து 'நீர் தெய்வமேயானால் எனக்கு உம்மை வெளிப்படுத்தி உமது கையை நீட்டி நான் கொண்டுவந்திருக்கிற காணிக்கையை ஏற்றுக்கொள்ளும். உம்மிடத்தில் எனக்குத் தயை கிடைத்திருக்கிறதென்பதற்கும் என் மகா பாவ

தோஷங்களை மன்னித்து என்னை ஏற்றுக்கொண்டீர் என்பதற்கும் அடையாளமாக, நான் காணவோ, கேட்கவோ, தடவியறியவோ, தக்க ஒரு அடையாளத்தை எனக்குத் தெரிவித்தருளும்' என்று கெஞ்சிக் கெஞ்சிப் பிரார்த்தித்தாள். ஆகிலும் ஐயோ! யாதொரு அடையாளமோ இளைப்பாறுதலோ இருதயச் சமாதானமோ கண்டடைந்தாளில்லை.

# 4. அதிகாரம்

## இந்துமார்க்கத்தின் பயங்கர பித்தலாட்டம் வெளியானது

மூர்ஷடபாத் என்னுமோரிடத்தில் சந்திரலீலாள் பஞ்சாக்கினி தன்னைச் சூழ எரிந்துகொண்டிருக்க, விக்கிரகங்களுக்கு முன் வணங்கி நிற்கவே, அப்பாதையாய்க் கடந்து சென்ற பெருங்கூட்டமான ஜனங்கள் அவளைக் குனிந்து கும்பிட்டு அவள் கால்களில் பூசியிருந்த விபூதியை முத்திக்கொண்டு வழி நடந்தார்கள். அப்போது அக்கூட்டத்தில் சென்ற ஆஸம் தேசத்து மானிப்பூர் மகாராணியும் சேர்ந்து வந்து அவளைக் கும்பிட்டாள். இந்த இராணியின் ஆட்கள் சிலர் ஆஸம் தேசத்திற்குத் திரும்பிப்போகிறதாகச் சந்திரலீலாள் அறிந்து தான் சாஸ்திரங்களில் அடிக்கடி வாசித்தறிந்தபடி அங்கேயும் பல புண்ணியஸ்தலங்கள் இருக்கையால் அவைகளையும் போய்த் தரிசிக்கத் தீர்மானித்தாள். ஆகையால் அவள் 'காற்றிருக்கும்போதே தூற்றிக்கொள்' என்ற சுலோகப்படிக்குத் தன்னைக் கும்பிட்ட அந்த இராஜாத்தியை நோக்கித் தன்னையும் அந்த ஜனங்களுடனே அத்தேசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டாள். அந்த ராஜமடந்தை உடனே அதற்கிணங்கி இவளைக் கவனித்து இவளது புண்ணிய யாத்திரையில் தடங்கலின்றி தேவஸ்தலங்களெங்கும் போய்வர இடங்கொடுத் துதவவேண்டுமென்று அங்கிருந்த தன் புத்திரனுக்கு இவளை அறிமுகப்படுத்துவதான ஒரு கடிதமும் எழுதிக்கொடுத்து அனுப்பிவைத்தாள்.

இது பலநாளாய்ப் படகேறிச் செல்லவேண்டிய பயணமாயினும் தன்னைச் சுற்றிலும் மண்பாத்திரங்களில் பஞ்சாக்கினி

வளர்த்து யாதொருவிதத்திலும் தனது பொருத்தனைக்கு இலங்கனம் நேரிடாதபடி நடத்திக்கொண்டாள். அப்படியே ஆஸம் தேசம் போய்ச் சேரவும், இராஜகுமாரன் அவளைப் பக்தி வினயத்துடன் ஏற்றுக்கொண்டார். 15 நாள் அவள் அங்கே தாமதித்திருந்தபின் அந்நாட்டு துரைத்தன உத்தியோகஸ்தருக்கு அவளை அறிமுகப்படுத்துவதான கடிதங்களுடன் அங்குள்ள பெரிதான தேவகிரகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டாள்.

சந்திரலீலாள் தன் பாவத்தைப் போக்கவென்று அத்தேசத்துப் பிரபலப்பட்ட பெரிய நதியாகிய பிரமபுத்திர நதியில் தீர்த்தமாடிப் போனபோன விடமெல்லாம் இருந்த பேய்க்கோவில்களில் கும்பிட்டு வீழ்ந்து காணிக்கைகளும் செலுத்தினாள். ஒருநாள் அவள் குளித்துத் தொழுதுகொள்ளப் போயிருந்த சிறப்புற்றதான ஒரு கோவிலில் பூசை செய்துவந்த பூசாரியானவன் அக்கோவில் விக்கிரகசுவாமியினின்று வருஷத்தில் ஒருமுறை இரத்தம் பீறிட்டு வடிதலாகிய ஒரு புதுமை நடந்துவருவதாகவும், தான் அந்த இரத்தத்தை ஒரு துணியில் தோய்த்தெடுத்து அன்று தொழுதுகொள்ள வருவோருக்கு அதனின்று ஒரு துண்டு கிழித்துக்கொடுக்கிறதாகவும், அதை வாங்கிக்கொண்டு போகிறவர்களுக்கு நினைத்த காரியமெல்லாம் கைகூடுவதாகவும் புளுகினான். இதுகேட்ட சந்திரலீலாள் அந்நாள் எப்போது வருமென்று விசாரித்தறிந்து, அது நடப்பதற்கு இன்னும் ஆறுமாதமிருந்தாலும் அதுமட்டும் அங்கே தாமதித்து நின்று அச்சோரிப் பிரவாகத்தைத் தனது சொந்தக் கண்கொண்டு பார்த்தபின் அப்புண்ணிய துகிலில் கொஞ்சத்தைப் பெற்றுக்கொண்டுதான் போகவேண்டுமெனத் தீர்மானித்தாள். இதனிடையில் அவள் தன் தேகோபத்திரவ நேர்த்திக்கடன் யாதொன்றையும் அற்பமேனும் நிறுத்திவிடாமல் முன்போலவே அவையனைத்தையும் நடத்திக்கொண்டே வந்ததுமன்றி பிராமணக் கன்னிகைகளுக்கு அன்னதானமும் ஈந்து கோவில் விக்கிரகங்களுக்கு சொர்னதானமும் அளித்தாள்.

சந்திரலீலாள் இப்படி அங்கே நீண்டகாலமான ஆறுமாசம் சஞ்சரித்தபின் விம்பம் உதிரம் சிந்துவதாக அறியப்பட்டிருந்த தினம் அதிகாலையில் கும்பிடவும் குருதிவடிதலைப் பார்க்கவுமென்று அவ்விக்கிரகாலயத்திற்குச் சென்றாள். அவள் அதிகாலையில் அப்படி அங்கே போய் நுழைந்தது அக்கோவிற் பூசாரிக்குப் பிடியாமையால் அவளை அவ்விடத்தினின்று வெருட்டிவிடக் கருதி, அவ்விம்பம் உதிரம் சிந்த இன்னும் நேரமாக

வில்லையென்பதாகவும், அந்நாளில் அத்தனை அதிகாலையில் அங்கே வந்தது சரியல்லவென்பதாகவும், அந்நேரமாகையில் தான் எல்லாரையும் வரவழைப்பதாகவும், அப்போது அவளும் வரலாம் என்பதாகவும் சொல்லி அவளைத் துரத்திவிட்டான். அவள் அவ்வாறே போய்விட்டு, சுவாமி குருதி பொழிதலை ஆரம்பமுதல் கண்ணூரக் காணவேண்டும் என்ற அபிலாசையால் தங்கித் தரிக்கமாட்டாமல், அப்பூசாரி தன்னை அழைக்கு முன் தானே மெல்லப் போய் உள்ளே நுழைந்துவிட்டாள். அப்போது அத்தந்திரப் பூசாரியின் வஞ்சகம் வெளிப்பட்டது. எப்படியெனில் அவ்விக்கிரகத்தில் இரத்தம் வடிதலை அவள் காண்பதற்குப் பதிலாக அச்சூதன் ஒரு ஆட்டை அறுத்து அதன் இரத்தத்தில் ஒரு துணியைப்போட்டு முக்கிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்றுப் பிரமிக்கலானுள். அன்றையத் தினம் நூறுநூறு பரதேசிகளான தொழும்பர் எப்போதும் போல் அக்கோவிலில் தொழுதுகொண்டபின் அவ்வம்புத்தனப் பூசாரியின் புளுகலை நம்பி அத்தந்திர உற்பன்ன துகிலில் கீறிய துண்டுகளை விலைகொடுத்து வாங்கிக்கொண்டு போயினர். சந்திரலீலாளோ அச்சூதை அறிந்துகொண்டதால் அந்தச் சீலைத் துண்டை வாங்கிக்கொள்ளவில்லை. அப்பிராமணப் பூசாரி செய்த வஞ்சகம் அவள் நெஞ்சகத்தில் பலபல விபரீத எண்ணங்களை எழுப்பிவிட்டதால் கலக்கமுற்று அம்மதக் கோட்பாட்டில் வேறு கள்ளத்தனங்கள் நடந்துவருகின்றனவோ என்று ஆராய்ச்சி செய்யலானுள்.

இந்தக் கோவிற்புரோகிதர் பின்னும் ஒருகாரியத்தைப்பற்றி அவளிடம் பேசியிருந்தார்கள். அதென்னவென்றுல் அவள் தங்கள் குமாரத்திகளுடன் அதிக நட்புப் பாராட்டிவந்ததை அவர்கள் கவனித்துக்கொண்டு, அவளை நோக்கி 'நீ எங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது ஒருவாக்குப்பண்ணி அதை நிறைவேற்ருமல் ஓடிப்போய்விட்டால் நீ போகிற வழியில் காட்டகத்தினின்று கடுவாய் வந்து உன்னைக் கொன்று கண்டந்துண்டமாய்க் கிழித்துப்போடும்' என்பதே. இந்தத் தந்திர மொழியால் தடுமாற்றமடைந்த சந்திரலீலாள் அப்பிராமணரின் இக்குறி சொல்லுதலையும் பரீட்சித்தறியவேண்டுமென்று துணிந்துகொண்டாள். அதைப்பற்றி அவள் பின்னுக்குத் தெரிவித்ததாவது:—'அந்த அந்தணர் கூறியவாக்கு மெய்யாமோவெனச் சோதித்தறியக் கருதி நான் ஒரு பொய் சொன்னதுண்டு; அஃதெங்ஙனமெனில் அவர்கள் குமாரத்திகள் இருவரிடம் போய் அவர்கள் ஒவ்வொருத்தியின் கைகளுக்கும் போதுமான

வளையல்களை நான் வாங்கிக்கொடுப்பதாக வாக்கருளி அதை நிறைவேற்றுமற் போய், அப்படியாவது நான் அதமாகித் தொலைந்துபோகட்டுமென்றெண்ணிக்கொண்டு அவ்விடம் விட்டுக் காட்டுவழி தேடி நடந்துபோனேன். அப்படியே நான் பட்டணத்தைவிட்டு நடந்து காட்டகத்தே சென்ற ஒரு ஏகாந்தமான ரஸ்தாவழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் கடுவாய் வந்து என்மேல் சாடி இன்றேடே என் ஜடத்துக்கு முடிவுண்டாக்குமென்ற பூரண நிச்சயத்துடனே எந்நிமிஷமும் அங்குமிங்கும் புதருக்குள் எட்டிப்பார்த்த கண்ணுய்க் கலக்கமுற்று வழிநடந்தேன். இவ்வாறு என் குலை துடிக்க மனம் பதற உடல் சிலிர்த்துக் கால் தள்ளாட அக்காட்டகத்தில் செவியுற்ற ஓரோர் சிற்றரவத்திலும் வெருண்டு வெகு தொலைதூரமாய்ப் போய்க்கொண்டிருந்தும், யாதொரு கடுவாயோ, புலியோ, நரியோ என்னைக் கண்டு வந்ததேயில்லை. அப்போது தான் நான் முதற்றடவையாக இந்துமார்க்கப் பூசாரிகள் புண்ணிய புருஷோத்தமராயிராமல் ஒரு கூட்டம் பொய்யராக்கும் என்ற எண்ணமுடையவளாயினேன்' என்பதே.

அவள் அங்ஙனம் போய்க்கொண்டிருந்து இன்னொரு ராஜாவின் ராஜ்ய எல்கைக்குட்பட்ட ஒரு விக்கிரகக் கோவிலில் சேர்ந்தாள். விசேஷ காணிக்கை செலுத்துவோருக்கேயன்றி மற்றையவர் யாருக்கும் அதில் தொழுதுகொள்ளப்போகும் சிலாக்கியமில்லை. விலையேறப்பெற்றதும் அங்கீகாரத்திற்குரியதுமான அந்தக் காணிக்கைகளை அவள் இராஜனிடம் கொண்டுபோய்ச் செலுத்தினுள். ஒரு கட்டியுப்பும் ஒரு உருண்டை அபினியுந்தான் அந்தக் காணிக்கை. அந்தக் காலங்களில் அத்தேசத்துச் சாதாரணமான ஜனங்கள் எல்லாரும் உப்பு உபயோகப்படுத்தவேணுமென்ருல் கிடையாது. அவ்வாலயத்திற்கு பரசுராமன் ஆலயம் எனப் பெயர். பரசுராமன் தனது தாயைக் கொன்ற ஸ்தலம் அதுதாஹும். அவள் சிரச்சேத மடைகையில் தலைசாய்த்து வைக்கப்பட்ட பெருந்தறியைப் பூசாரி காட்டிக்கொடுக்கவும், சந்திரலீலாள் உடனே அதற்குப் புஷ்பமுஞ்சாற்றிக் கும்பிட்டு விழுந்தாள். இக்கோவிற் பூசாரிகள் மெத்தப் பொருளாசைக்காரராயிருந்து அவளுடைய பணத்தையெல்லாம் தட்டிப் பறிக்க நின்றதால் அவர்கள்பேரில் அவளுக்குண்டான வெறுப்பு இம்மட்டென்றில்லை. எப்படியெனில், அவள் அங்குள்ள பிராமணருக்கெல்லாம் நியாயமான படிக்கு சொர்னதானமளித்தும் அவர்கள் அது போதுமென்று திருப்தியடையாமல் பிணத்தைச் சூழ்ந்து அவாவுடன் கொத்

திப்பிடுங்கும் கழுகுகளாட்டமாய் அவளுக்கு உள்ளது உரியது அனைத்தையும் பிடுங்கிக்கொள்ள ஆசித்தாற்போல் அவள் போர்த்துக்கொண்டிருந்த சேலையையும் பற்றி யிழுத்து அதை இரண்டாய்க் கீரிப் பாதியை எடுத்துக்கொள்ளவே, தன் உடம்பில் சுற்றிக்கொள்ள மறுபாதியும் அவர்களைவிட்டோடிப்போகத் தன் ஜீவனும் கிடைத்ததே பாக்கியம் என்று சந்தோஷத்துடனே வெளியேறி ஓடிப் பிழைத்தாள்.

அவள் தன் திருச்சுவடிகளில் சிவன் மனைவி பார்வதியின் மரணத்தைப்பற்றி வாசித்திருந்தாள். பார்வதியின் தந்தை ஒரு பெரிய விருந்தை ஆயத்தப்படுத்தி அதற்குச் சிவனைத்தவிர தன் மருமக்களனைவரையும் மற்றைய பெரியவர்களையும் அழைப்பித்திருந்தான். அதனாலே அவளுடைய தகப்பன் தனது நாயகனுக்குக் காண்பித்த அவமானத்தைச் சகிக்கமாட்டாமல் உள்ளுடைந்தவளாகித் தானும் அவ்விருந்துக்குப் போக மறுத்து விட்டாள். அதுவுமன்றி விருந்தாளிகள் அவ்விருந்துண்ணும் வேளையில் முற்றத்தில் பெருந்தீயாகிய வேள்வி வளர்க்கப்பட்டிருந்ததைக்கண்டு அதிலே பார்வதி சாடிவிடவும், அவளது பிராணநாயகனான சிவன் அங்கே எழுந்தருளிவந்து எரிந்துகொண்டிருக்கும் அவளுடலைத் தன் உடைவாளால் குத்தியெடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் பறந்தோடவே, அவ்வுடம்பினின்று சில பாகங்கள் பிய்ந்து விழுந்துபோயின. கீழே பூமியில் அத்துண்டுகள் அங்ஙனம் விழப்பெற்ற இடங்கள் புண்ணியஸ்தலங்களாயினவாம். இவ்விதமாக, இந்துக்கள் வழிபடுகிற தேவர்களும் தேவிகளும் தற்கொலை மாத்திரமல்ல, மனுஷர் வழக்கப்படி நடப்பிக்கிற அகிர்த்தியங்களான கொலைபாதகங்களையும் எவ்வித துஷ்டத்தனக் கிரியைகளையும் நடப்பித்தார்களென்று இந்துக்களின் புராணேதிகாசங்கள் கூறுகின்றன.

சந்திரலீலாள் இவைகளைப்பற்றி வாசித்திருந்ததால் பார்வதியின் ஒரு கண் அப்படி ஆஸம் தேசத்திலுள்ள ஓர் பெரிய ஏரியின் மத்தியில் வீழ்ந்து அங்கே எரிந்து பிரகாசித்துக்கொண்டிருக்கிறதாக அறிந்திருந்தாள். ஆதலால் அதன் உண்மையைத் தான் கண்ணாரப் பார்த்தறியவேண்டுமென்றாலோசித்துக்கொண்டு அந்த ஸ்தலம் போய்ச் சேரும்படியாக வெகுதூரம் நடந்தாள். அவள் அங்கே போய்ச் சேர்ந்து விசாரித்தபோது அப்படி சொல்லிக்கொள்ளப்படும் ஒரு குளத்தைக் காட்டிக்கொடுத்தார்கள். அங்கே தண்ணீரிலே ஒருவெளிச்சம் காணப்பட்டது. அதைச்சார்ந்த கோவிற்பூசாரி அதைத்தான் பார்வதி பகவதியின்கண்ணெனக் காட்டிக்கொடுத்தான்.

அவள் அவ்வெளிச்சத்தைப் பார்த்தகண்ணுய்க் குளக்கரை யைச் சுற்றி நடந்து ஒரு கண்ணனது அங்ஙனம் தண்ணீரில் எரிவதெப்படியென்று கவனித்தபோது காரியம் சற்று விகற்ப மாய்த் தோன்றியதால் ஒளித்துப்போய்ப் பார்த்துக்கொண் டிருந்தாள். அப்படியிருக்கையில் இருட்டிக் கொஞ்சநேரத் துக்குப்பின் அப்புரோகிதன் வள்ளமேறிப்போய்த் தண்ணீர் படாமல் அங்கேற்றப்பட்டிருந்த அச்சூத்திர விளக்கில் எண் ணெய் வார்த்துச் சரிப்படுத்திவிட்டுப் போவதைக்கண்டு பூசாரி கள் பொய்யரென்றும் இந்துசாஸ்திரங்கள் வியர்த்தமென்றும் திகைத்துத் தடுமாறினுள். ஆயினும் தனது கருமாதிகளை விட்டுவிட மனமற்று அவைகளை நடத்திக்கொண்டேவந்தாள். உஷ்ணகாலத்து மூன்றுமாதங்களிலும் அவள் அங்கேயே தங் கித்தரித்து பகலெல்லாம் முன்போலவே பஞ்சாக்கினியைத் தன்னைச் சுற்றிலும் எரியவைத்துக்கொண்டு எரிபந்தமான வெயிலில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். இப்படி செய்துவரு வதினுல்தான் கடவுளிடம் விரும்பிய எதுவும் கைகூடிவரு மென்று சாஸ்திரங்கள் கூறியதை நம்பியே இவ்வித அனுஷ் டானங்களையெல்லாம் நடத்தி இந்தப் படாதபாடெல்லாம் பட் டுத்தரித்தாள்.

அம்மூன்றுமாசத்திற்குப்பின் அவள் கல்குத்தாவுக்குத் திரும் பிவர ஆசிக்கவும் தனவந்தனை அந்நாட்டானெருவன் தன் செலவில் அவளைக் கப்பலேற்றி அனுப்பிவிட நினைந்து, அதற் கென்று ஒரு கப்பல் மாலுமியிடம் கேட்டுக்கொண்டான். ஊத்தைச்சாம்பல் பூச்சாண்டியான அவள் பார்க்க அருவருப் பான நாமக்கட்டி குரூபியாயும், தீச்சட்டியும் விறகும் சிறகும் சேர்த்துக் கட்டிவைத்துக்கொண்டு கப்பலேறவேண்டி நிற்கிற பைத்தியக்காரிக் கொப்பானவளாயும் இருந்ததால் மாலுமிக்கு அவளைக் கப்பலிலே ஏற்றுக்கொள்ள மனதில்லை. ஆயினும் அவளுக்காகச் சிபாரிசு பேசிநின்ற சீமான் அவள்பேருக்குப் போதுமான கப்பற்கூலி கொடுக்க உடன்பட்டதின்பேரில் கப் பலில் அவளுக்கு இடங்கிடைத்தது.

அம்மரக்கலம் கரைதெரியாமல் அகாத சமுத்திரத்தில் ஓடிக் கொண்டிருக்கையில் வழியில் ஓர் பெரும்புசல் எழும்பிவிட் டது. உடனே கடற் கொந்தளிப்புண்டாகி அலைக்கிளர்ச்சி யால் தண்ணீர் கப்பலுக்குள் எழும்பிச் சாடினது. உடனே கப்பலிலிருந்த அநேகர் கொடிய ஆபத்துக்குள்ளாகி அமிழ்ந்திப் போகப்போகிறதாக எண்ணிப் பயந்து ஓலமிட்டார்கள். அதி

லிருந்த இந்துக்கள் இராமராமா எங்களை இரட்சிக்கவேணு மென்று கூப்பாடுபோட்டார்கள். சந்திரலீலாளும் அவர்களு டன் கூடிக்கொண்டு பெருங்கூச்சலிட்டாள். அந்த ஜனங்க ளின் கூக்குரலைக்கேட்ட கப்பித்தான் மேற்றட்டில் வந்து அவர்களுடைய குழப்பத்தைச் சகிக்கமாட்டாமல் மெத்த சாந்த மான அமர்ந்த தொனியில் அவர்களுடன் பேசி, நீங்கள் தத்தளித்துப் புலம்பவேண்டாம்; மேலே வானத்தில் இருக்கிற வர் நம்மைக் காத்துக் கரைசேர்ப்பார் என்று தமது கையைத் தலைக்குமேலாக உயர்த்திக் காட்டிச் சொன்னார். சந்திரலீலாள் தான் இத்தனைகாலமும் தொழுது தோப்புக்கரணம்போட்ட விக்கிரக சுவாமிகளைவிட மேலான கடவுள் ஒருவர் மேலோகத் தில் இருக்கிறாரென்று முதன்முதல் கேள்விப்பட்ட தருணம் இதுவே. அப்பால் சீக்கிரத்திற்குள்ளாக அப்புயல் நின்றுபோ யிற்று. அதனாலே அவள் தன் மனதை ஊடுருவிப் பதிந்த சிந்தனையை ஒருக்காலமும் மறந்துபோனதில்லை.

அவள் கல்குத்தாவில் போய்ச் சேர்ந்து ஒருவாரந் தங்கி கங்கா ஸ்நானம் செய்தாள். அதன்பின்பு ஒன்பது ரூபாய்க்கு ஒரு சுமட்டுக்குதிரை வாங்கித் தன் சாமான்களையெல்லாம் அதிலேற் றிக்கொண்டு 40 மைல் தூரத்திற் கப்பாலிருந்த மிதுனபுரிக் குப் பயணப்பட்டாள். அங்கே சேர்ந்தபின் முன்போல் தன் னைச்சுற்றி பஞ்சாக்கினி மூட்டி காவிவேடம்பூண்டு பழமே யன்றி வேறொன்றும் புசியாமல் தனது மூவாண்டுப் பொருத் தனையையும் குறைவற நிறைவேற்றினாள். அந்நாட்கள் கழிந்த பின்பு மறுபடியும் கல்குத்தாவுக்குச் சென்று கங்கையில் பின் னும் புண்ணியஸ்நானஞ்செய்து கடந்த மூன்று வருஷங்களாய் எண்ணெய் பூசாமலும் சீப்பிடாமலும் ஜடைவளர்த்திருந்த தன் நீண்ட கூந்தலைக் கத்தரித்து அதைக் காணிக்கையாக நதியிலே எறிந்துகொடுத்து, “தேவனாகிலும் மனுஷனாகிலும் யாரானா லுஞ் சரி, அவர்கள் மாம்சதேகிக்குக் கட்டளையிட்டவை அனைத் தையும் இதோ நான் செய்தும், இந்தத் தேகத்திலே பட்டுத் தரித்தும், நிறைவேற்றியும் யாதொரு பலனையும் காணேனே” என்று நெட்டோலமிட்டாள்.

ஐயையோ! எத்தனை யெத்தனையோ வருஷங்களாக, நாடு நகர், காடு மேடு, ஆறு மலைகளைத் தேடியோடி அலைந்து கால் கள் புண்ணாகி மனதுடைந்து இளைப்பூர்ந்து போனாள். என் றாலும் இரக்கத்தில் ஐசுவரியமுள்ள பரமபிதா தம்மைவிட்டு அந்தகாரத்தில் தடவி யலைந்து கோபாக்கினைக்கே பாத்திரமா

யிருந்த அவளுக்குக் கடைசியாய்த் தம்மை வெளிப்படுத்தச் சித்தமானதால், நற்செய்தியைக் கூறி இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தும் ஒரு சுவிசேஷகனின் பிரசங்க வார்த்தைகளை அவள் கேட்கும்படி அருள் அளித்தார்.

இந்துமார்க்க சடங்காசாரங்களாகிய ஸ்தலயாத்திரை, புண்ணிய தீர்த்தம், தானதர்மம், தேகோபத்திரவம், விரதமாகிய யாதொரு அனுஷ்டானங்களினாலும் அவள் ஆத்துமம் வாஞ்சித்த இருதய சமாதானம் அவளுக்குக் கிடையாமற்போய், கடைசியாய்க் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் கண்டடைந்தபோது தான் அந்த இருதய சமாதானத்தைப் பெற்றுக்கொண்டு ஆறுதலடைந்தாள்.

# 5. அதிகாரம்

## சந்திரலீலாளின் விலங்கு தெறித்தது

சந்திரலீலாள் மிதுனபுரிக்குத் திரும்பிப்போய் அங்கே சில சீஷப்பிள்ளைகளைத் தனக்கென்று கூட்டிச் சேர்த்தாள். அவர்களுக்குள்ளே ஒரு சின்ன பையனுமிருந்தான். அவன்மீது அவள் மெத்தப் பிரியமாயிருந்தாள். அப்பிள்ளையாண்டான் அவளிடம் வந்து சேர்ந்த விதமாவது:—

ஒருநாள் ஒரு ஸ்திரீ அவளிடம் வந்து, அவள் பாதத்தில் கும்பிட்டு விழுந்து, அவள் கால்களிலிருந்த சாம்பர்ப் பூச்சை முத்தி, 'அம்மா, எனக்கொரு பெரிய சங்கடமுண்டாயிருக்கிறது. எனக்குப் பிள்ளையில்லை. நான் ஒரு புத்திரனைப் பெறாமற்போனால் என் புருஷன் என்னைத் தள்ளிவிட்டு வேறொருத்தியைக் கலியாணம் பண்ணவேண்டுமென்றிருக்கிறார்' என்றாள். பின்னும் அவள் "என் ஆசை நிறைவேறி எனக்கொரு புத்திரசந்தானம் உண்டாகும்படியாக தேவர்களுக்கு நான் படைக்கவேண்டிய காணிக்கைகள் எவையென்று தெரியச் சொல்லவேண்டு" மெனக் கெஞ்சிக் கேட்டாள். சந்திரலீலாள் மாறுத்தரமாக, 'தங்காய், என்ன காணிக்கை செலுத்தினால் நீ பிள்ளைத்தாய்ச்சியாகக் கூடுமென்று அறியேன். ஆயினும், எனக்கொரு மருந்து தெரியும்; அது ஒரு வேர்தான். மந்திர தந்திரமுமல்ல: உன் கெர்ப்பப்பையில் உற்பத்தியாயிருக்கின்ற

யாதொரு நோயினாலே அல்லது தேகபலவீனத்தினாலே நீ மலடிருந்தால் அந்த மருந்தை உட்கொண்டபின், அந்நோய் நீங்கி நீ கர்ப்பந்தரித்து பிள்ளைத்தாய்ச்சியாகக் கூடும்' என்றாள்.

அதைக்கேட்ட அந்த ஸ்திரீக்குச் சந்தோஷம் பிறந்து, சந்திரலீலாளிடம் அம்மருந்தை வாங்கிச் சாப்பிட்டதினால் ஒரு உற்பத்திகாலத்திட்டத்திலே ஒரு புத்திரனை ஈன்றெடுத்தாள். இந்தப்பிள்ளை பிராயப்பக்குவமானபோது தாய் அவனைச் சந்திரலீலாளிடம் கொண்டுவந்து விட அவள் அவனைச் சிறுபிராய முதல் படிப்பித்துவந்தாள். அப்பட்டணத்தில் அவளுடைய வணக்கத்தையும் சீஷாட்களுக்கு அவள் படிப்பித்தலையும் இரஸ்தாவோரமாய் நாடோறும் கவனித்துக்கொண்டு போய்வந்த ஒரு சுதேச உத்தியோகஸ்தனின் மனைவி ஆளனுப்பி, அவள் வந்து தனக்குச் சாஸ்திரங்களை வாசித்துக் காட்டும்படி கேட்டுக் கொண்டாள். அப்படியே அவள் போய் வந்ததால் அவர்கள் அவள்பேரில் மெத்தப் பிரியப்பட்டு, அவள் தான் கொண்டு திரிந்த சொரூபங்களையும் வைத்துக்கொண்டு, தங்கியிருக்கும் படியாக தங்கள் வீட்டில் அவளுக்கென்று ஒரு அறையைக் கொடுத்துதவினார்கள். அப்படியாக அவள் அங்கே தங்கியிருந்த அநேக ஸ்திரீகளுக்குச் சாஸ்திரங்களைப் படிப்பித்து அவர்களுக்காகப் பூசைகள் நடத்தி சொரூபங்களைச் சேவித்து வந்தாள். ஆயினும் உள்ளுக்குள்ளே அவளுக்கு அந்த விக்கிரக சுவாமிகளைப்பற்றிய உத்தம நம்பிக்கை நாளுக்குநாள் குறைந்து கொண்டேவந்தது. உயர்தரக் குடும்பத்தாரான பலர் அவளைத் தங்கள் புரோகித மாதாக வீடுகளில் விரும்பி யழைத்துக் கொள்ளவே, அவள் அவர்களுக்கு இந்துமார்க்க புராணேதிகாசங்களை உபதேசித்துவந்தாள். அப்படியிருக்கையில் என்ன விதமாகவோ அவளுக்கு அவற்றின்மீது இருந்திருந்து ஒரு வெறுப்புண்டாகவே, தன் சுரூபங்களையெல்லாம் சேர்த்தெடுத்து தாழ்ந்த ஜாதியாளான ஒருத்தியின் வீட்டிலே கொண்டுபோய்க் கொடுத்து 'மனசானால் உனக்குக் கும்பிட இவைகளை வைத்துக்கொள்; நான் என் சிறுபிராயமுதல் இதுமட்டுமுள்ள நெடுங்கால ஆண்டுகளாய் அல்லும் பகலும் இவைகளை நமஸ்கரித்து யாதொரு பலனையும் காணேன்: இனி இவைகளை என் ஜீவகாலத்தில் ஒருபோதும் கும்பிடமாட்டேன்: இந்துமார்க்கத்தில் ஒன்றுமேயில்லை. யாதாமொரு நன்மையுண்டென்றால் நான் அதைக் கண்டடைந்திருப்பேனே' என்றாள்.

சந்திரலீலாள் தன் அருமைச் சீஷப்பிள்ளையாண்டானின் வீட்டிற்கு அடிக்கடி போய்வந்தாள். அவனுடைய சகோதரி

கலியாணமாகி அப்பட்டணத்தின் இன்னோரிடத்திருந்த தனது மாமா வீட்டிற்குப் போய்விட்டாள். அந்த வீடு காலஞ்சென்ற பிலிப்ஸ் பண்டிதரின் பங்களாவுக்குச் சமீபமாயிருந்தது. அவருடைய சகோதரியாகிய ஜூலியாவென்ற மிசியம்மாள் அந்தக்காலத்திலே அமெரிக்க பாப்திஸ்து மிஷன் சம்பந்தமாய் அந்தர்ப்புர மிஷனெரிவேலை நடத்திவந்தாள். இந்த மிசியம்மாள் போய்ப் படிப்பித்துவந்த வீடுகளிலொன்று இந்தச் சிறுபெண்ணின் வீடாயிருந்தது. சந்திரலீலாள் ஒருநாள் பார்வதியென்ற அச்சிறுபெண்ணைப் பார்க்க விரும்பி அவள் வீட்டிற்குப் போகவும், அங்கே அவள் கிறிஸ்துமார்க்கப் புஸ்தகங்களை வைத்து வாசித்துக்கொண்டிருக்கக் கண்டாள். சந்திரலீலாள் தன் ஜீவியத்திலே முதல்தடவையாக இப்போது தான் கிறிஸ்துமார்க்கப் புஸ்தகங்களைக் கண்டாள்.

உடனே அவள் பார்வதியைப்பார்த்து இந்தப் புஸ்தகங்கள் உனக்கு எங்கிருந்து கிடைத்தது என்று கேட்க, பார்வதி:— 'எனக்குப் படித்துத்தர வருகிற துரைசாணி இவைகளைக்கொண்டுவந்து தந்தார்கள்.'

**சந்திரலீலாள்:**—'அப்படியா? எனக்கு அந்தத் துரைசாணியைக் காணவேண்டுமென்று ஆசையிருக்கிறது: எப்போது வந்தால் அவர்களைக் காணலாம்?'

**பார்வதி:**—'நாளைக்குப் பின்னேரம் 3 மணிக்கு வந்தால் அவர்களைக் காணலாம்; நாளையத்தினம் அவர்கள் இங்கே வருகிற முறைதான்?'

**சந்தி.**—'அப்படியானால் நான் நாளைக்கு எந்தவிதமும் வந்துவிடுகிறேன்' என்று சொல்லி சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்தபின் போய்விட்டாள்.

அவ்வாறே சந்திரலீலாள் மறுதினம் பார்வதியின் வீட்டுக்குப் போய் அத்துரைசாணியின் வரவு பார்த்திருந்தாள். ஆனால் ஏதோ ஒரு காரணத்தினிமித்தம் ஜூலியா மிசியம்மாள் அன்றைக்குப் பார்வதியின் வீட்டிற்குப் போகக்கூடாமையால் அவளுக்குப் பதிலாக பழமை பரிசனையுள்ள ஒரு வேதாகம ஸ்திரீயும், சூர்ஜி என்றொரு பெண்பிள்ளையும் அங்கே போனார்கள். அவர்கள் அங்கே சந்திரலீலாளைக் கண்டபோது அம்மாளைக் கண்டுபேச அவளுக்கிருந்த பேராவலைக் கவனித்துப் பிலிப்ஸ் அம்மாளிடம் வந்து தாங்கள் ஒரு இந்துமார்க்கப் புரோகித ஆவியைப் பார்வதியின் வீட்டில் கண்டதாகவும், அவ

ளுக்கு வேத புஸ்தகத்தை வாசிக்கக் கேட்பது மெத்தக் கொண்டாட்டமாயிருப்பதாகவும் அறிவித்தார்கள். மறுநாள் பிலிப்ஸ் அம்மாளும் ஜூலியா மிசியும் பார்வதியின் வீட்டில் அவளைப் பார்க்கப் போயிருக்கவே, சந்திரலீலாள் அன்றுதான் முதற்றடவையாக அவர்கள் வாயிலிருந்து சுவிசேஷவசனம் பிரசங்கிக்கப்பட்டதைக் கேட்டறிந்தாள். அதனால் சந்திரலீலாளுக்கு மெத்த அகமகிழ்ச்சி தோன்ற, அவள், அவர்கள் தனக்கு வங்காளப்பாஷை இலக்கணத்தைக் கற்றுக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு, ஒரு இலக்கண புஸ்தகத்தையும் அவர்களிடம் விலைக்கு வாங்கிக்கொண்டாள். அந்த அம்மாள்மார் அவளுக்கொரு வேதாகமத்தையும் கொடுத்து, அதைத் தங்கள் வேத புஸ்தகம் என்று சொல்லி அதை வாசிக்கக் கேட்டார்கள். அவள் அதைக் கொஞ்சம் வாசித்தபின் அதற்கு விலையாக எட்டு அணுவைக் கொடுத்துவிட்டு வீட்டுக்குக் கொண்டுபோய் இராப்பகலாய் மிக்க ஆவலுடன் வாசித்துவந்தாள். பின்னும் அவள் அவர்கள் பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொடுத்துத் தன்னையும் படிப்பிக்கும்படி கேட்டுக்கொண்டாள். அப்பால் அதுவும் போதாதென்று தானாகவே மிஷனெரியின் வீட்டுக்கு அடிக்கடி போய் இந்தப் புதிய மார்க்கத்தைப்பற்றியும், இயேசுவைப்பற்றியும் அதிகமதிகமாய்க் கேட்டுக் கற்றறிந்தாள். அதில் அவள் உண்மையாய் போதிக்கப்பட்டுவந்தபடியால் வேத புஸ்தகத்தின்பேரில் அவளுக்கு உண்டான பேராவல் இன்னமட்டென்றில்லை. ஆதலால் அவள் அதை மனமகிழ்ச்சியுடனே வாசித்துக்கொண்டிருந்து தன் சீஷப்பிள்ளைகளுக்கும் வாசித்துக் காட்டிவந்தாள். இராமாயணத்தையும் இந்துசாஸ்திரங்களையும் முன்போல் தங்களுக்கு வாசித்து விஸ்தரிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினபோது, அவள், அவைகளை வாசிக்க எனக்கு மனமில்லை, இந்த என் புதிய புஸ்தகத்தைத்தான் இனி வாசிப்பேன் என்றாள்.

அந்த நமது பழைய சுவடிகளை ஏன் வாசிக்கக்கூடாது என்று அவர்கள் கேட்கவும், சந்திரலீலாள் இந்தப் புதிய புஸ்தகம் அவைகளைவிட அதிக நல்ல புஸ்தகமாயிருக்கிறது என்றாள். அதை வாசிக்கக் கேட்ட ஸ்திரீகளுக்கும் அது மெத்தப் பிரியமாகத்தானிருந்தது. ஆயினும் புருஷரானவர்கள் அவளைப் பார்த்து 'இதென்ன புஸ்தகத்தை வாங்கி வைத்துக்கொண்டு வாசிக்கிறீர்கள்? கிறிஸ்தவர்களின் புஸ்தகத்தை வாசித்து கிறிஸ்தவளாகப் போகிறீர்களோ? மிஷனெரிகளின் வீடுகளுக்குப் போவதை இனி நிறுத்திப்போடவேணும். நமது வீட்டில்

வைத்து உங்களுக்கு பங்காளிப்பாஷையின் இலக்கணம் படிப்பிக்கத்தக்க ஒரு ஆசானை சட்டங்கெட்டித் தருவோம்' என்றார்கள்.

அதற்குச் சந்திரலீலாள், 'வேண்டாம், யாதொரு முனிஷியிடம் படிக்க எனக்கு மனதில்லை; துரைசானியிடம் போய்ப் படிக்கத்தான் எனக்கு விருப்பம்' என்றாள்.

அவள் அப்படி சொல்லக்கேட்டு 'நீங்கள் கிறிஸ்தவளாய்ப் போனால் உங்களைப் புறக்கணித்துப் போடுவோம்: ஜனங்கள் உங்களைப் பயித்தியக்காரி யென்று சொல்லி அடிக்கவும், பிடிக்கவும், கல்லெறியவும் தலைப்படுவார்கள். கிறிஸ்தவர்கள் உங்கள்பேரில் அலுப்படைந்தவர்களாகி, அவர்களும் உங்களைத் தள்ளிக் கலைவார்கள்: அப்படியாகிறபோது என்ன செய்வீர்கள்' என்றார்கள்.

சந்திரலீலாள் மாறுத்தரமாக, இயேசு பகவானாயிருக்கிறார்: அவர் நிமித்தமாக, மரித்தால் இரட்சிக்கப்படுவேன்; மரிக்க எனக்குப் பயமுமில்லை: என்னைப் பிடித்தடக்கி வைத்துக் கொள்ள உங்களாலாகாது. அதற்காக நீங்கள் பிரயாசப்படவும் வேண்டாம். நீங்களும் கிறிஸ்தவர்களாகத்தானே வேண்டியதாயிருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, அவர்களுக்கு இயேசுவைப்பற்றி அறிவிக்கவும், அதுகேட்டுக் கூடிவந்து நெருங்கின ஜனக்கூட்டத்திற்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாள்.

இரண்டுமாசம் படித்துவரவே, சந்திரலீலாள் தான் கிறிஸ்தவளாக விரும்பி அதைப்பற்றி மிஷனெரிமாருக்குத் தெரிவித்தாள். ஒருநாள் அவள் மிஷன்வீட்டில் படித்துக்கொண்டிருக்கையில் பிலிப்ஸ் பண்டிதரும் (Dr. Phillips) அவரது தந்தையும் அவளிடத்தில் வந்தார்கள். அப்போது அப்போதக சிரேஷ்டரின் பிதாவானவர் அவளை நோக்கி 'உன்னுடைய ஜெனன தேசம் எது' என்றார்.

அவள் 'என் வீடு நேபாள தேசத்திலிருக்கிறது' என்றாள்.

'நீ புண்ணியாத்மாவா பாபாத்மாவா' என்றார்.

'என் தந்தை தாயர் பாவத்தில் பிறந்தவர்களாயிருந்தது எப்படியோ அப்படியே நானும் பாவஜென்மிதான்; எத்தனை எத்தனையோ தேசங்களில் சென்று நான் விக்கிரகங்களை வணங்கியிருக்கிறேன். அநேக பொய்களைப் பேசியிருக்கிறேன்; அநேக அநேக வீணான கிருத்தியங்களை நடப்பித்திருக்கிறேன். அப்படியிருக்க நான் என்னைப் புண்ணியாத்மாவென்று எப்படி சொல்லலாம்' என்றாள்.

அப்போது பிலிப்ஸ் பண்டிதர், 'நீ இத்தனை விக்கிரகங்களையெல்லாம் வணங்கியிருப்பதாகச் சொல்லுகிறாயே; அந்தப் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டிருக்கிறதா?' என்றார்.

அதற்கவள், 'எனக்கு அறிவிக்கப்பட்ட விக்கிரகங்களையெல்லாம் வணங்கி வந்திருக்கிறேன்; இந்துமார்க்கப் போதனைப்படியெல்லாம் நடந்து கற்பிக்கப்பட்ட ஸ்தலயாத்திரைகள் அனைத்தையும் செய்து முடித்திருக்கிறேன்; ஆகிலும் பாவ மன்னிப்பைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது, எனக்கு மனச் சமாதானமேயில்லை' என்றாள்.

'உன் விக்கிரகங்கள் உன் பாவங்களை மன்னிக்கக் கூடாதோ? அவைகள் பாவத்தை மன்னிக்கக் கூடாதானால், நீ பாவமன்னிப்புப் பெற்றுக்கொள்வதெப்படி' என்று பிலிப்ஸ் பண்டிதர் பின்னும் கேட்க, அவள் மாறுத்தரமாக,

'நான் இயேசுவைப்பற்றி வாசித்துப் பார்க்கிறபோது, அவர் தான் இரட்சகர் என்றும், அவரே பாவ மன்னிப்பருளக் கூடியவரென்றும் தெரியவருகிறது; அதைத்தான் நான் விசுவாசித்து கிறிஸ்தவளாக விரும்புகிறேன்' என்றாள்.

பிலிப்ஸ் மிசியம்மாள், அப்போதவளைப் பார்த்து 'இந்து தேவதைகளின் கோவில்கள் அநேகத்தைத் தரிசித்து வந்திருக்கிறாயே; ஆனால் எங்கள் கோவிலை வந்து பார்த்திருக்கிறாயா?' என்க,

சந்திரலீலாள், 'இல்லை, நான் கிறிஸ்தவர்களின் கோவிலுக்குப் போயிருப்பதேயில்லை. உங்கள் கோவிலுக்கு நான் வரலாமா, எப்போது வரலாம்?' என்று கேட்டாள்.

அதற்கு அந்த அம்மாள், 'நாளைச் சாயங்காலம் கோவிலில் எங்களுக்கு ஆராதனையுண்டு; அப்போது எவ்விதமும் வந்துவிடு' என்று சொல்லி கோவிலையும் காட்டிக்கொடுத்தார்கள்.

கிறிஸ்தவ ஆராதனைக்குத் தான் முதற்றடவையாகப் போயிருந்ததைப்பற்றி சந்திரலீலாள் பிற்பாடு சொன்னதாவது:—'குறிக்கப்பட்ட சமயத்திலே நான் கிறிஸ்தவர்களின் ஆராதனைக்குப் போனேன். முன் கத்தரிக்கப்பட்டிருந்த என் தலைமுடி கழுத்துமட்டும் வளர்ந்திருந்தது. காவி வேடந்தான் தரித்திருந்தேன். இரவிக்கைபோன்ற யாதொரு சட்டை எனக்கில்லை. கோவிலுக்குள் பிரவேசிக்கையில் என் மேற்சீலையை இழுத்து முக்காடிட்டு தேகத்தையும் மூடிக்கொண்டேன். பிலிப்ஸ்

போதகர்தான் பிரசங்க பீடத்தில் காணப்பட்டார். அவர் உதடு களிலிருந்துதான் முதற் பிரசங்கத்தைக் கேட்டேன். ஓ! அது எத்தனை மகத்தான பிரசங்கம்! நான் அந்தப் பிரசங்கத் திற்குச் செவிகொடுத்துக்கொண் டிருக்கையில், நான் வெகு காலமாய்த் தேடி யலைந்ததைக் கண்டடைந்தேன் என்று என் இருதயம் எனக்குள் புது உயிரடைந்தது. இந்துமார்க்கத் தின் சகலவிதக் கொடிய வஞ்சகங்களையும் தள்ளிவிட்டு கிறிஸ்து மார்க்கத்தில் உடன்தானே சேர்ந்துகொள்ள ஆசைப்பட்டேன்.' ஆராதனைக்குப் பின் பிலிப்ஸ் போதகரும் நாட்டையரும் என்னைப் பார்க்க வந்தார்கள். நான் போதகரைப் பார்த்து ஸாய்பே, எனக்கு ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவர் மாறுத்தரமாக, 'நீ கிறிஸ்தவ ளாகும்போது உனக்குப் பெருந்துக்கம் நேரிடும்; எல்லாரும் உன்னைக் கைவிட்டுவிடுவார்கள்; சாப்பாடு தரமாட்டார்கள்; அப்போது என்ன செய்வாய்' என்றார்.

அதற்கு நான் 'பகவான் ஆகாயத்துப் பறவைகளுக்கும் புசிப்பளிக்கிறாரே, அப்படியிருக்க எனக்குப் போஜனம் தர மாட்டாரா? வாயை உண்டாக்கினவர் அதற்கு உணவு அருளா திருப்பாரா? அவர் என்னைக் காப்பாற்றுகிறவராயிருக்க நான் பயப்படவேண்டியதென்ன' என்றாள். அப்போதுதான் அவர் என் பெயரைக் கேட்டார். அப்படி சிறிதுநேரம் பேசிக்கொண் டபின் இந்துமார்க்க அந்தகாரம் உறைந்ததான வீட்டுக்குத் திரும்பிப்போனேன். அவ்விரவு என் கண்களுக்கு நித்திரை வரவில்லை. நான் கண்மூடக் கூடாமல் இளைப்பாறுதல் அற்ற வளாகி எல்லாவற்றையும் விட்டு எப்போது கர்த்தருடையவ ளாகலாமென்று நினைத்து நினைத்து விசாரப்பட்டுக்கொண்டி ருந்தேன்.

சந்திரலீலாள் இப்பேர்ப்பட்ட சிந்தையால் ஏவப்பட்டிருக் கவே, பின்னும் ஒருவாரம் படித்துக்கொண்டிருந்து அப்பால் பிலிப்ஸ் போதகரிடம் போய்த் தனது இந்துக்களான சிநே கிதரை விட்டுப் பிரிந்து வந்துவிடத் தான் ஆயத்தப்படுவதாக வும், தனக்குச் சொந்தமான கொஞ்சம் பணமும் வெண்கல பாத்திரங்களும் சற்றுத் தூரத்திற்கப்பால் ஓர் சிநேகிதியின் வீட்டில் வைத்திருப்பதாகவும், தான் போய் அதை வாங்கிக் கொண்டு வருவது தகுதியாயிருக்குமா என்பதாகவும் ஆலோ சனை கேட்டாள்.

போதகர் அவளுக்கு மாறுத்தரமாக, 'அப்படி நீ போகிற தாயிருந்தால் சாத்தான் ஒருவேளை உன்னை அனுப்பி, இந்த

உன் பணத்தையும் வைத்துக்கொண்டு இங்கேதானே இருந்து கொள் என்று சொல்லி, அமர்த்தி வைத்துக்கொள்ளவும்கூடும்; ஆகவே, அவ்விடம் விட்டு வர உனக்கு மனமில்லாமலும் போக லாமே' என்றார். சந்திரலீலாள் அந்த யோசனையைச் சரி வைத்து அப்படியே போகாதிருந்துவிட்டாள்.

பின்னும், அவள் தான் ஸ்தலயாத்திரை சென்ற இடமெங் கும் கொண்டு நடந்து கும்பிட்ட சுரூபங்களையும் இந்துமார்க் கச் சுவடிகளையும் இன்னொரு வீட்டில் வைத்திருப்பதாக அப் போதகரிடம் அறிவிக்கவே, அவர் அவளுடனேகூட ஒரு வயோதிப ஸ்திரீயை அனுப்பி அவைகளை எடுத்துக்கொண்டு வரும்படி சொன்னார். அப்படியே அவைகளைக் கொண்டுவந்து தான் தங்கவிருந்த தனது சிஷப்பிள்ளையின் வீட்டில் வைத் திருக்க, அவர்கள் அவளை நோக்கி, அவைகளைக் கும்பிடவேணு மென்ற நோக்கமாய்த்தானு கொண்டுவந்தீர்கள் என்று விசா ரித்தார்கள். அதற்கவள், 'அப்படியல்ல, முன்னமேயே நான் அவைகளைக் கும்பிடுவதை நிறுத்தியாயிற்று; இனி நான் அவைகளை என் ஜீவகாலத்தில் கும்பிடுவதேயில்லை' என்றாள்.

இந்தச் சுரூபங்களையும் சுவடிகளையும் பின்பு பிலிப்ஸ் போதக ரிடம் கொடுத்துவிட்டாள். தன் யாத்திரையிலெங்கும் தூக்கிச் சுமந்து ஓயாமல் பணிந்துகொண்ட ராமனின் சின்ன சுரூப மும் அவைகளுடனே இருந்தது.

அதற்குப்பின்பு ஒரு செவ்வாய்க்கிழமை காலையில் அவள் தன் பண்டம்பாடிக ளனைத்தையும் சேர்த்தெடுத்துக்கொண்டு போய் அவ்விடத்து நாட்டையர் வீட்டில் சேர்த்தாள். அத னாலே அவள் கிறிஸ்தவர்களோடு போய்ச் சேர்ந்துகொண்டாள் என்ற செய்தி ஊரெங்கும் பரம்பவே, இந்துக்களான அவள் சீஷரும் மற்றநேகரும் சேர்ந்துபோய் அத்தனைக்காலமாய்த் தங்கள் புரோகித ஆயியாயிருந்த அம்மாதைத் திருப்பிக்கொண்டு போகும்படியாகப் படித்த வித்தையெல்லாம் வைத்துத் தங்களால் ஆனமட்டும் பார்த்தார்கள். அவள் வெளி வராந்தாவில் அவர் களிடம் போய்த் தான் இந்துமார்க்கத்தை முற்றிலும் தள்ளிக் களைந்ததாகவும், இனி அம்மார்க்கத்தைப் படிப்பிப்பது தன் மனச்சாட்சிக்குப் பொருந்தாதென்றும் தெளிவாய்ப் பேசி, அதை அவர்களுக்குத் திருஷ்டாந்தப்படுத்தும்படியாக நாட் டையரின் மனைவியை ஒரு கிண்ணத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டு, அதை வாங்கி அவர்கள் கண்கள் காணக் குடித்துவிட்டு, பக்கத்தில் நின்ற இன்னொரு

கிறிஸ்தவளைக் கூப்பிட்டு அவளுடைய உக்காவைக் கொண்டு வரச்சொல்லி, அதை வாங்கி வாயில் வைத்து அங்குக் கூடிவந்த சில கிறிஸ்தவர்களுடனேகூட புகையுரிந்து அவ்விதம் அவர்கள் கண்களுக்குமுன் தான் ஜாதிப்புரட்டாகிப் போனதாக வெளியரங்கப்படுத்திவிட்டாள். அதைக் கண்ட இந்துமார்க்கத்தாரான அவளுடைய சிநேகிதர்கள், ஐயோ, ஆயி ஜாதியை விட்டுப் போய்விட்டாளே! இனி அவளைத்தொட்டு நமக்கென்னவுண்டு என்று கதறித் துயரமடைந்து மகா சஞ்சலத்துடனே திரும்பிப்போயினர்.

சந்திரலீலாள் அந்தநேரத்துக்கு உக்கா உரிந்தாளேயன்றி அதற்குப்பின் ஒருக்காலும் அவள் உக்காக்குழலைத் தொட்டதேயில்லை. ஏனெனில் உக்கா உரிதலும் மதுபானம் பண்ணலும் சுத்த இருதயத்திற்குப் பொருந்தாதென்று அநேக வருஷங்களுக்கு முன்னமேயே அவள் உய்த்துணர்ந்தவளா யிருந்தாள்.

சில வருஷங்களுக்கு முன்னமே சந்திரலீலாள் மிதுனபுரிக்கு 20 மைலுக்கப்பால் ஒரு ராஜாவின் கொட்டாரத்திலே வேதமோதும் குருமாதராசாய் ஏழு வருஷம் தங்கியிருந்ததைப்பற்றி முன்னர் தெரிவித்திருந்தோமே. அவ்வரசனின் மரணத்திற்குப்பின் சிம்மாசனபதியான அவரது புதல்வனாகிய ராஜனிடமல்லவோ செலவுபெற்று சந்திரலீலாள் ஜெனன தேசம் போகப்போகிறதாகச் சொல்லி ஓடிப்போனாள். அம்மன்னன் இப்போதவள் கிறிஸ்தவர்களிடம் போயிருப்பதை அறிந்து அவளை ஏற்றிக்கொண்டு வந்துவிடும்படி ஒரு யானை கொடுத்தனுப்பினார். அப்படி யானையைக் கொண்டுவந்திருந்த அவ்வரசனின் ஆட்கள் அவள் ஜாதிப்புரட்டாகிப் போனதை அறிந்து தங்கள் பருப்பு வேகாதெனச் சும்மா திரும்பிப்போய்விட்டார்கள். ஆயினும் பிற்காலத்திலே அவள் அவ்வேந்தனின் அரமனைக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கித்து வேதம் போதித்தாள். அவருக்கு இப்போது வேதம் சத்தியம் என்பதைப்பற்றிப் பூரணமான அறிவும் உணர்வும் உண்டாயிருக்கிறதாயினும் ஜனங்களுக்குப் பயப்பட்டும் இராஜமேன்மை பறிபோமோவென் றஞ்சியும் தம்மைக் கிறிஸ்தவனென்று பகிரங்கமாய் அறிக்கையிட ஐயமுற்றிருக்கின்றார்.

பின்பு சந்திரலீலாள் தனக்குச் சாப்பாடு கொடுத்த ஸ்திரீக்கு ஐந்து ரூபாய் கொடுத்து ஒரு மாசம்போல் அந்த நாட்டையருடைய குடும்பத்தாருடன் வாசஞ்செய்துகொண்டிருந்து

வேதம் வாசிப்பதிலும் கிறிஸ்தவ நம்பிக்கையைப்பற்றிய உபதேசங்களைக் கற்றுக்கொள்வதிலும் நேரத்தைச் செலவிட்டாள்.

அப்படியிருக்கையில் அவளுடைய ஜீவியத்திலே ஒரு விசேஷித்த நாள் வந்தது. அது பிலிப்ஸ் போதகரிடம் அவள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டதினந்தான். அது அவள் தன் ஜீவகாலத்தில் ஒருக்காலும் மறந்துபோகக்கூடாத சந்துஷ்டியான நாளாயிருந்தது. அந்த ஞான தீட்சையை அப்படிக்கொத்த ஒரு பெரியவரிடத்திருந்து பெற்றுக்கொள்வதைவிட அதிமேன்மையானது வேறொன்றில்லை. பிசாசின் அந்தகாரக் கோட்டையினின்று ஆச்சரியவிடுதலையடைந்த அப்பேர்ப்பட்ட ஒரு மடந்தைக்கு அத்திருச்சடங்கை நடத்துவதைவிட அதி பெரிய சலாக்கியமும் வேறில்லை என்றே சொல்லவேண்டும்.

# 6. அதிகாரம்

## சந்திரலீலாள் பணமும் சம்பாதிக்கப் பார்த்துப் பிரசங்கமும் நடத்தியது

சந்திரலீலாள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபின்பு மற்றைய வேதாகம ஸ்திரீகளுடன் அந்தர்ப்புரங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் படிப்பிக்கும்படியாக அனுப்பப்பட்டாள். ஆனால் அவள் தன்னை அடக்கிக்கொண்டு ஓரிடத்தில் உட்கார்ந்திருந்து சிறுவர்க்கு நெடுங்கணக்கு படிப்பிக்கவும் ஸ்திரீகளுக்கு வாசிப்புப் படிப்பிக்கவும் முடியவில்லை. ஆதலால் அவள் வேத புஸ்தகத்தை எடுத்துக்கொண்டுபோய் வீடு வீடாய் அதை வாசித்துக்காட்டி பிரசங்கிக்கத் தொடங்கினாள். தெருக்களிலே ஜனங்கள் கும்புகூடி அவளுடைய பிரசங்கத்திற்கு செவிகொடுத்தார்கள். பகற்காலங்களில் சாப்பிடவோ இளைப்பாறவோ வேணுமென்று பிரசங்கத்தை நிறுத்தப்போகிறதில்லை. இராத்திரிசமயந்தான் சமையல் செய்து சாப்பிடுவாள். இந்த அவளுடைய நடப்பைக் கவனித்த மிஷனெரிமார் இதே வேலைக்கென்று அவளைத் தீர்மானித்து அவள் போக விரும்பின இடத்திற்கெல்லாம் அனுப்பிவைத்தார்கள். முந்திய மூன்று வருஷங்களிலும் மிதுனபுரியிலும் அதன் சுற்று வட்

டங்களான எவ்விடங்களிலும் சென்று கர்த்தராகிய இயேசுவே பூலோக இரட்சகரென்று காட்டிப் பிரசங்கித்தாள்.

அவள் கிறிஸ்தவளாகி இரண்டு வருஷங்களானபின், அவளுடைய சகோதரன் நேபாள தேசத்திலிருந்து வேறு சிலருடனே கூடிக்கொண்டு ஜகநாதன் கோவிலுக்கு ஸ்தலயாத்திரையாய் வந்தார். அவர் சந்திரலீலாளைப்பற்றிக் கேள்விப்பட்டு அவளைத் தேடிப்பிடித்து இரண்டு வாரம் அவளுடன் தாமதித்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கவே, அவள் அவருக்குக் கர்த்தராகிய இயேசுவையும் அவரால் வந்திருக்கிற பெரிதும் ஆச்சரியமுமான இரட்சிப்பையும் குறித்துத் தெரிவித்து விக்கிர காராதனையைக் கட்டோடே தள்ளிவிட்டு கிறிஸ்தவனாகும்படி போதனை செய்தாள். பிலிப்ஸ் போதகர் அவருக்கு ஒரு வேத புஸ்தகம் கொடுத்துதவினார். அம்மனிதன் தமது சகோதரியுடன் கிறிஸ்தவ ஆலயத்தில் ஆராதனைக்கு வந்துபோயிருந்து அப்பால் சுயதேசத்திற்குத் திரும்பிப் போனார்.

சந்திரலீலாள் சமீபமாயுள்ள பட்டணங்களுக்கும் கிராமங்களுக்கும் பிரயாணம்பண்ணி, கர்த்தராகிய இயேசுவைப் பிரசங்கித்துவருகையில் தான் சந்நியாசவேடம் பூண்டவளாய் முன்னர் விக்கிரகாலயங்கள் தேடியோடிக் குளித்துக் கும்பிட்டுச் சரணம்போட்டுவந்த சில ஸ்தலங்களுக்காகிலும் போய்ப் பிரசங்கிக்க வேண்டுமென் றுசித்து முதன் முதல் அதற்கென்று முர்ஷடபாத்துக்குப் போனாள். அவள் முக்கியமாய் ஸ்தல யாத்திரையாய் வந்துபோகும் பரதேசிகள் கூட்டம்போடும் ஆற்றோரங்களில் போய் அவர்களுக்கு பாவமன்னிப்படையக் கூடிய சரியான விதத்தையும், மோட்சத்துக்குப் போம் மெய் வழியையும்பற்றிப் பிரசங்கித்து அப்படி ஒருமாசம்வரையில் சில விடங்களில் தாமதிப்பாள். அவ்வாறு அவள் ஓர் சமயம் ஒருமாசப் பிரசங்கத்திற்கென்று போய்த் தாமதிக்கையில் தன் செலவுக்குப் பணத்தட்டு உண்டாகுமென்று கண்டு அதை நிவிர்த்திப்பதற்காக ஒரு காரியஞ் செய்தாள். அதெப்படியெனில் ஜனங்கள் அதிகம் போக்கு வரத்துள்ள வழியோரமான ஒரு மரத்தடியில் அவள் ஒரு கடைபோட நினைந்து 12 ரூபாய்க்கு விறகும் மாம்பழமும் வாங்கி அவைகளை மறுவிலைக்கு விற்று லாபமெடுத்துச் செலவு நடத்தும்படி வியாபார முறையாய் வைத்துக்கொண்டு அங்கு வருவோருக்குப் பிரசங்கித்து விலைகொடுப்போருக்கு அவைகளை விற்பனையும் செய்தாள். அப்படி நடந்துவருகையில் சில தருணங்களிலே ஆள் கூட்டம் அதிகப்பட, ஆத்துமாக்களின் இரட்சிப்பின்பேரில் சிந்

தாகுலமாகித் தன் வியாபாரச் சரக்குகளை மறந்துபோய் பிரசங்கத்திலேயே கவனமெல்லாம் போய்விடவும் வந்தவர் போனவர் யாவரும் மனம்போல் அப்பொருட்களைத் திருடிக்கொண்டு போய்விடுவதாயிற்று. ஆள் கூட்டம் குறைந்து பிரசங்கமும் முடிந்தபின் இருக்கும் மீதியை விற்றுக் கணக்குப் பார்க்கையில் லாபமல்ல நஷ்டமே வந்ததென்று அடிக்கடி கண்டாள். அதைப்பற்றி ஆலோசிக்கவே, தேவதாசர் தங்கள் சரீர பிழைப்புக்காகக் கவலைப்பட்டு தேங்காயும் மாங்காயும் விற்பதல்ல, கர்த்தர் தங்களுக்கு ஒப்புவித்த வேலையைச் செய்து சரீரத்துக்கு வேண்டியவைகளுக்காக அவர்பேரில் நம்பிக்கையாயிருப்பதே அவரது சித்தமென் றறிந்துகொண்டு அப்பால் அத்தொழிலை விட்டுவிட்டாள். பின்பு பல சமயங்களில் அவள் பிரசங்கம் முடிந்து தளர்ந்துபோயிருக்கையில் கருணையுள்ள சிநேகிதர் அவளுக்குப் போஜனாதிகள் கொண்டுவந்து கொடுத்துதவுவார்கள்.

ஒருநாள் மெத்தக் கரடுமுரடும் பிரயாசமுமான காட்டுப்பாதை வழியாய்ப் போய்க்கொண்டிருக்கையில் பசிக்கு யாதொன்றும் கிடையாமல் வழிநெடுகிலும் கண்ட ஓர் பூண்டைப் பறித்து வாயிலிட்டு மென்று அதன் சாரத்தை விழுங்கி அங்ஙனம் பசியடக்கிக்கொண்டு நடந்துபோனாள். அன்று சாயரட்சை ஓர் சிற்றூரில் போய்ச் சேர்ந்து பசியினால் வாடி வதங்கிப்போயினும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு அங்கு கூடிவந்தவர்களும் அதற்குமுன் ஒருக்காலும் சுவிசேஷ வசனத்தைக் கேட்டிராதவர்களுமான பலருக்குக் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப பிரசங்கித்தாள். அவளுடைய கவனமெல்லாம் அந்தப் பிரசங்கத்திலேயே சென்றுவிட்டமையால் தனக்கிருந்த பசியை மறந்துபோனாள். கருக்கலாகி ஜனங்கள் ஒவ்வொருத்தராய் தங்கள் வீடுகளுக்குப் போய்விடவே, அவளுடைய பிரசங்கமும் முடிந்தது. அப்போது ஒரு ஸ்திரீ அவளைப் பார்த்து உங்களுக்குச் சாப்பாட்டுக்கு என்ன இருக்கிறது என்று கேட்க, சந்திரலீலாள் தனக்கு என்ன கிடைக்கப் போகிறதென்று தெரியாதென்றாள். உடனே அந்த நல்ல பெண்மணியானவள் தான் போய்ப் போஜனம் கொண்டுவரலாமாவென்று கேட்டுக்கொண்டு அப்படியே தன் வீட்டுக்குப் போய்ச் சாதமும் கறியும் தயிரும் நல்ல பலகாரங்களும் கொண்டுவந்து கொடுத்தாள்.

சந்திரலீலாள் தனக்கு அறிமுகமில்லாத அந்நிய கைவழியாய் இப்படி ஆச்சரியமானவிதத்தில் சம்பிரம அமுதளித்த ஆண்டவரை ஸ்தோத்திரித்துக்கொண்டு, அதைச் சாப்பிட்டுத் திருப்தி

யடைந்தபின் இரவு தூங்கி மறுநாளின் வேலைக்கு சுகபெலத்துடன் எழுந்திருந்தாள். மிதுனபுரியில் பிலிப்ஸ் போதகருக்குச் சேகரத்து வேலை சம்பந்தமாய் உதவிசெய்வதே அடிக்கடி அவளுடைய சோலியாயிருந்தது.

ஒருதரம் அவள் தேசாந்தரப் பிரசங்க சோலியாய்ப் புறப்பட்டுப் போகவிருக்கையில் மேற்படி போதகர் அவளை நோக்கி நீ சாப்பாட்டுச் செலவுக்குப் பணமில்லாமல் இப்படி இருந்தாற்போல் புறப்பட்டுப் போவது எனக்குத் திகைப்பாயிருக்கிறது. நீ பிராமணப் பூசாரியாயிருந்தபோது இந்துக்களானவர்கள் உனக்குத் தாராளமாய்ப் போஜனங்கொடுத்தார்கள். இப்போதோ அவர்களுடைய உதவி உனக்கிராமையால் கஷ்டப்பட்டுப் போவாய். ஆனபடியால் நீ ஒரு பையில் கொஞ்சம் புஸ்தகங்களைக் கொண்டுபோவது நல்லது. போகுமிடங்களில் அவைகளை விலைப்படுத்தி அந்தப் பணத்தைக்கொண்டு செலவு நடத்திக்கொள்ளலாமே என்றார். அது தனக்கு ஒத்துவராதென்ற அச்சமிருந்தபோதிலும் ஐயருடைய வார்த்தையை அல்லத்தட்டலாகாதென்றெண்ணி அப்படியே ஆகட்டுமென்று புஸ்தகங்களைப் பையில் வைத்தெடுத்துக்கொண்டு தூரவிடங்களில் பிரசங்கிக்கப் போவாள். போகிறவிடங்களில் சில புஸ்தகங்கள் விலைப்படும். ஆயினும் ஆள் நெருக்கமுள்ள கடை அங்காடிகளில் பிரசங்கிக்க நேரிடுகையில் அவள் கவனமெல்லாம் ஆத்துமாக்களின் ரட்சிப்பின்பேரிலுள்ள பேராவலால் இழுப்புண்டுபோய்ப் புஸ்தகங்களைப்பற்றிய நினைவு விட்டுப்போமாதலால் ஜனங்கள் அவைகளைத் திருடிக்கொள்வார்கள். ஆதலால் அவள் திரும்பி வருகையில் வெறும் பையைப் போதகரிடம் கொண்டுவந்து ஸாய்பே, நான் உலகசிந்தையாயிருக்க முடியவில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தான் என்னாலாகும் என்பாள். கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் திருப்பணிவிடை செய்வோர் யாவரும் சந்திரலீலாளைப்போல் தங்கள் ஊழியத்தில் முழுக்கவனத்தையும் செலுத்துவார்களாகில் எத்தனையோ நன்மை விளையும்!

அப்பால் அவசியத்திற்குத் தக்கதாய் செலவுக்குக் கொஞ்சம் பணம் கொண்டுபோகாமல் சிநேகிதர் அவளைச் சும்மாவிட்டதில்லை. அவள் மிதுனபுரி சேகரத்து ஒவ்வொரு கிராமத்தையும் வீடுவீடாய்ச் சந்தித்துக் கிறிஸ்துவைப் பிரசங்கிக்க தேவாவியால் ஏவப்பட்டபடியே, சுவிசேஷ செய்தியைக் கூடுமானால் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் வெளிப்படுத்தவேண்டு

மென்று விடாமுயற்சியுடன் பிரசங்கித்துவந்தாள். இந்தப் பணிவிடையை சரிவர நிறைவேற்றக் கருதி ஆறுமாசக்காலமாய் ஜெபத்துடனே பிரசங்கவேலையில் முயற்சியுடன் சுற்றித் திரிந் தாள். இந்த அவளுடைய பிரயாசத்தினாலே சிலர் இரட் சணியமார்க்கத்தைக் கண்டடைந்து கிறிஸ்தவர்களானதால் தங் கள் சொந்த ஜனங்களாலே ஜாதிப்புரட்டர் என்று துரத்தி யடிக்கப்பட்டார்கள். அவ்வாறு தள்ளிவிடப்பட்டவர்களை சந் திரலீலாள் சந்தோஷமாகத் தன்னுடனே ஏற்றுக்கொண்டு, அவர்கள் தங்களுக்கென்று ஒரு தொழிலைக் கண்டடையுமட் டும் அவர்களைக் காப்பாற்றிவந்தாள்.

இப்படிக்கொத்த நல்லாவியையுடைய திரள் சேனையான திருத்தொண்டரை கர்த்தர் நமக்குத் தந்தனுக்கிரகிப்பாராக. சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டிராதவர்களை வீடுகள்தோறும் தேடிப்பிடித்து மீட்டுக்கொள்ளவேண்டுமென்று ஆவலுடைய வர்களே கிறிஸ்துவின் பண்ணையாட்களாய் அவருடைய திராட் சத்தோட்டத்திற்கு வேண்டியவர்கள். போதகன்மார் போயி ராத தூரஸ்தலங்களுக்கு ஓடித்திரிந்து சாட்சியாகச் சுவிசே ஷத்தைப் பிரசங்கித்து சகல ஜாதிகளும் கிறிஸ்துவைப்பற்றிய அறிவடைய வேண்டுமென்று ஆசைப்பட்டு அதற்கென்று கிரி யை நடப்பிப்பதே மெய்ப்பக்தரின் உத்தம ஊழியமாகும். அப்படி சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டிருக்கையில் கிறிஸ்து வருவார். 'சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங் கள்' என்று இயேசு கட்டளையிட்டிருப்பது நமக்குத் தெரியுமே. சகலத்திராளுக்கும் ஆளாளாய் சுவிசேஷ சத்தியங்கள் அறி விக்கப்பட்டிருக்கவேண்டுமென்பதே அதன் கருத்து. மெய்த் தேவனைப்பற்றி அறியாத இலட்சாதிலட்சமான ஜனங்கள் இருக்கிறார்களே. உற்சாக மனதுடனே ஊக்கவைராக்கிய மான ஆவியோடு அப்பேர்ப்பட்டவர்களைத் தேடிப்பிடித்து இரட்சணியமார்க்கத்தைத் தெரியப்படுத்தவேணுமென்று ஆசிப் போருக்கு அவ்வித ஊழியம் எங்கெங்கேபார்த்தாலும் வேண் டியமட்டும் இருக்கிறதே. ஓ! அறுப்புக்கு எஜமானானவர் அவ் வித ஊழியங்களை ஆயிரமடங்காகப் பெருகப்பண்ணி யருள் வாராக. அப்பேர்ப்பட்டவர்களுக்கு அலுவல் கண்டுபிடிப்பது பிரயாசமல்லவே.

இதற்குச் சிலகாலத்திற்குப்பின் சந்திரலீலாளின் சகோதர னுடைய மகன் அவளைப்பற்றிக் கேள்விப்பட்டு பார்க்கவந்தான். அவள் அவனுக்குக் கர்த்தராகிய இயேசுவைப்பற்றித் தெரிவித்து

அவனுடைய குணப்படுதலுக்காக ஊக்கத்துடனே ஜெபித்து வர, அவன் சீக்கிரமாகக் கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசியாகி ஞானஸ்நானத்திற்காகக் கேட்டுக்கொண்டாலும், அவன் புருஷபக்குவமடையாத பாலியனுதலால் மிஷனெரிமார் உடனே அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்துவிடாமல், அவனை அவன் ஜனத்தாரண்டைக்குத் திரும்ப அனுப்பிவைத்தார்கள். சில மாதங்களுக்குப்பின் அவன் மரித்துப்போனுன் என்ற செய்தி வந்தெட்டியது. அவன் இரட்சிப்பைக் கண்டடைந்தவன் என்பது சந்திரலீலாளின் நம்பிக்கை.

மிதுனபுரியில் பிலிப்ஸ் போதகருடன் கூடி மெத்தவும் மகத்தான திவ்விய பணிவிடை செய்துவந்ததுபோலவே, வேறு சேகரங்களின் போதகன்மாருக்கும் ஏந்தலாய்ப் போயிருந்து அருமை பெருமையான ஊழியம் செய்துவந்தபடியால் தேவஊழியத்திலே அவள் ஆவியின் வல்லமை பெற்றுக்கொண்டவளென்று எல்லாரும் அறிந்துகொண்டார்கள். சுவிசேஷத்தைப்பற்றிக் கேள்விப்பட்டிராத வேறு ஜனங்களண்டைக்குக் கர்த்தர் தன்னைப் பின்னும் பின்னும் போக ஏவுகிறுர் என்பதை அவள் மெய்யாய் உணர்ந்து அப்படியே மறுபடியும் புறப்பட்டுப்போக ஆலோசிக்கலானுள்.

# 7. அதிகாரம்

## சந்திரலீலாள் தன் சகோதரனுக்கு ஞானஸ்நானம் கோடுத்தது

சந்திரலீலாள் அப்பால் தான் கர்த்தருக்கு மகிமையாகச் செய்யவேண்டிய பணிவிடையைப்பற்றி யோசித்தபோது தான் முன்னர் மருளாளியாய் நடந்தலைந்த விக்கிரகாலயங்களுக்குச் சென்று கூடுமோகில் அவற்றில் நடத்தப்படும் திருவிழாச் சமயங்களுக்காகவும் காத்திருந்து அவ்விடங்களில் வந்து கூடும் திரள் சேனையான அஞ்ஞானிகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தகுதி என்றுணர்ந்ததால் அவ்வூழியத்தைப்பற்றிக் கர்த்தராகிய இயேசுவுக்குள் அடைந்த பூரிப்பால் எப்போதும் உற்சாகமுள்ளவளாகவே இருந்தாள்.

சுயதேசத்தில் தன் ஜனத்தாரண்டைக்கும் போய்த் தான் கண்டடைந்த அற்புத மீட்பைப்பற்றி அறிவித்து அவர்களையும் இரட்சித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினாள். இப்போது அவள் தேகம் சுத்தவிர்த்தியாயும் சரியான ஆகாரத்தால் காப்பாற்றப்பட்டு அலங்காரமான சுதேச வெள்ளுடை போர்த்ததாயுமிருந்தது.

அலகபாத் விக்கிரகாலயத்தில் சிறப்பு நடத்தப்பட்ட உற்சவ காலத்தில் அவள் அங்கே போய் ஒரு மாதம்போல தாமதித்து அவ்விடத்தில் கும்புகூடி வந்திருந்த ஆயிரக்கணக்கான விக்கிரக பக்தருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாள். இந்துமார்க்கத் தப்பறைகளில் சிலவற்றையும், அதன் பூசாரிகளின் பித்தலாட்டமான சில நடபடிகளையுங் குறித்து அவள் ஜனங்களுக்குக் கொஞ்சம் பேச நேரிட்டபோது அவ்விடத்துப் பூசாரிகள் அவளை அடித்துத் தூக்கி யெறிந்துபோடுவதாகப் பயமுறுத்தி அதற்கென்று ஒரு கூட்டம் துஷ்டனைக் கூலிபொருந்தி அவளை எதிர்த்து அடிக்கும்படி ஏவிவிட்டார்கள். அப்படி ஏவிவிடப்பட்டுவந்த கலகக்காரரின் கும்பு அவள் தரையில் உட்கார்ந்து ஜனங்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருக்கக் கண்டு சுற்றி நெருங்கினார்கள்.

அப்படி அவர்கள் தீமைசெய்ய வந்து கூடினபோது அவள் சற்றும் அஞ்சாமல் அவர்களில் தலைவனாய் நின்றவனைத் தைரியமும் அமரிக்கையுமானவிதமாய்ப் பார்த்துக்கொண்டு உங்களுக்கு வரப்போகிற மோசத்தைப்பற்றி எச்சரிக்கும் சிநேகிதியாகிய என்மேல் கல்லெறியக் காரணமென்னவென்று கேட்டாள். அவர்கள் பின்னும் கல்லெடுத்தபோது அவள் உங்களுக்கு மனதானால் எறியுங்கள். உங்கள் கற்கள் எனக்கல்ல; உங்களுக்கே காயத்தை உண்டாக்கும்; தேவன் உங்களைத் தண்டியாதிருப்பாராக வென்று பட்சத்துடனே பயமின்றிப் பேசின விதம் (எங்ஙனமோ) அவர்கள் அப்பால் அவளுடைய பிரசங்கத்திற்குத் தடையில்லாமல் விட்டு, யாதொரு தீங்கும் செய்யத் துணியாமல் பின்வாங்கிப் போய்விட்டார்கள்.

இப்படி அவள் இந்துதேசத்தின் பற்பல விடங்களுக்கு மாத்திரமல்ல, ஆஸம் தேசத்திற்கும் ஷில்ஹெட் முதலிய விடங்களுக்கும் சென்று முன்பு தான் தரிசித்து விக்கிரகங்களை வணங்கிவந்த பிரதான ஸ்தலங்களிலெல்லாம் சென்று அருமை ரட்சகரின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாள். தான் பண்டாரியாய்த் திரிந்த அந்தக்காலத்தில் தன்னைப் பட்சமாய் ஏற்றுக்

கொண்டு தயவுபாராட்டின ஆஸம் தேசத்து ராணியினிடம் போய் அங்கேயும் சத்திய வேதத்தை வாசித்துக்காட்டி கர்த்தராகிய இயேசுவைப்பற்றிப் பிரசங்கித்தாள். அவளுடைய பிரசங்கம் அந்த ராணியின் புத்திரனுக்கு அதிசயமாகத் தோன்றியது. அந்த ராஜகுமாரன் அவள் முகத்தைப் பார்த்தபோது, அவளிடத்தில் காணப்பட்ட ஆச்சரியமான மாறுதலைக் கவனித்து 'முன்னே நாங்கள் உன்னைக் கண்டபோது உன்னைச் சூழ பஞ்சாக்கினி வளர்த்து எப்போதும் விக்கிரகங்களை வணங்கிக்கொண்டிருந்தாய். இப்போதோ நீ வேறொரு புஸ்தகத்தைக் கொண்டுவந்து இரட்சகனைக் கண்டடைந்திருக்கிறேன் என்று சொல்லுகிறாய்: உன்னில் உண்டாயிருக்கும் இந்த மாறுதல்களுக்கெல்லாம் காரணம் யாது என்று எங்களுக்குத் தெரியச்சொல்லு என்றார்.

அவள் அவர்களைப்பார்த்துத் தான் இந்துமார்க்கத்தின் அடிஸ்தானமட்டும் நன்றாய்த் தேடி ஆராய்ந்து பார்த்தபோது, அதில் தன் ஆத்துமாவுக்கு ஆறுதலை அளிக்கத்தக்க தொன்றையும் கண்டடையாமல், முற்றிலும் அபகடமும் ஏமாற்றமுமாய் இருந்ததுகண்டு இளக்கரித்துப் போனதைத் தெரிவித்தாள். கடைசியில் கர்த்தராகிய இயேசுவில் வைத்த விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிப்பையும் பூரண சமாதானத்தையும் கண்டடைந்ததைப்பற்றி சவிஸ்தாரமாய் மிக்க மனமகிழ்ச்சி முகமலர்ச்சியுடன் பேசி அறிவித்தாள். கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தாலும், அவர்களுக்குள்ளே தைரியமில்லாமையால் வெளியரங்கமாய்க் கிறிஸ்துவை அறிக்கையிடப் போனால் தங்கள் ஜாதி ஜனங்களால் துன்பம் நேரிடுமேயெனப் பயந்து தங்களுக்குள் எழும்பிய நல்லுணர்வுகளை அடக்கிப்போட்டார்கள்.

அவள் நேபாளதேசத்தில் தன் சொந்தவீட்டை விட்டு வந்து 27 வருஷங்களானபின் இப்போது முதல்தடவையாய் அத்தேசத்திற்கும் திரும்பிப்போனாள். கிறிஸ்தவ மிஷனெரிமார் அத்தேசத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடாதபடி வாசல் அடைபட்டிருந்தாலும், அவள் அங்கே போனபோன விடமெல்லாம் கிறிஸ்துவைப் பிரசங்கித்தாள்.

அஞ்ஞானிகளான அத்தேசத்தாருக்குப் பிரசாத திருவிழா என்றொரு உற்சவமுண்டு. அதன் கொண்டாட்டத்திற்கு அத்தேசத்தோர் அனைவரும் போய் மொய்த்துக் கூடுவார்கள். சந்திரலீலாளும் அந்தச்சமயம் போய்ச் சேர்ந்து அங்கே கூடி வந்திருந்த திரள்கூட்டமான ஜனக்கும்புக்குச் சுவிசேஷத்தைப்

பிரசங்கித்து அவர்களில் பலருக்கு சத்தியவேதப் பிரதிகளும், சன்மார்க்கப் புஸ்தகங்களும் கொடுத்தாள். வாங்கினவர்கள் அவைகளைத் தம்மிடங்களுக்குக் கொண்டு நடந்தபடியால் வேத புஸ்தகம் அதிலேசாய் அத்தேசமெங்கும் பரம்ப ஏதுவானது. இப்படி அவள் கிறிஸ்துமதப் புஸ்தகங்களைப் பரப்பினதினிமித் தம் போலீஸார் அவளைப் பிடித்துக் குற்றஞ்சாட்டி மாஜிஸ்தி ரேட்டு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். மாஜிஸ்தி ரேட்டு அவளைப் பார்த்து, நீ யார் என்று கேட்க, அவள் தன்னை ஒரு நேபாள ஸ்திரீதான் என்று வெளிப்படுத்தி, தன் ஜனத் தாருக்கு நல்ல புஸ்தகங்களையே கொடுக்கிறதாகத் தெரிவித் தாள். அப்போது மாஜிஸ்திரேட்டு அவள் தன் சொந்த சிநேகி தருக்கு அவைகளைக் கொடுக்க உத்தரவளித்து அவளையும் தண் டியாமல் விடுதலை செய்துவிட்டார். உடனே அவள் கடை வீதிகளெங்கும் திரிந்து அந்த திருவிழாக் கொண்டாட்டத்து நாட்கள் முடியுமளவும் யாதொரு தொந்தரவின்றி தாராள மாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டு திரிந்தாள்.

பின்பு அவள் தன் சொந்தவீட்டுக்கும் இனத்தாரண்டைக் கும் போய் மிதுனபுரியில் தன்னிடம் வந்துபோயிருந்த சகோ தரனைக் கண்டாள். அவர் வியாதிப்படுக்கையி லிருந்தார். ஆத லால் அவள் சிறிதுகாலம் அங்கே தங்கியிருந்து ஒரு தாயா னவள் தனது குழந்தையைப் பேணிப் போஷித்துக் காப்பாற் றினாற்போல் அவர் பக்கத்திலிருந்து வெகு உருக்கமாய் ஆகா ரம் முதலியவை கொடுத்துக் காப்பாற்றிப் பராமரித்துவந்தாள். ஒருநாள் அவர் அவளை நோக்கி, 'என் சகோதரியே, நான் இயேசுவில் விசுவாசம் வைத்திருக்கிறேன். நான் உன்னைப் பார்க்க வந்திருந்து உன் வாயினாலே அவரைப்பற்றி போதனை யடைந்ததுமுதல் நான் அவருடையவனாகி அவருக்கே ஊழி யஞ்செய்யப் பிரயாசப்பட்டு வந்தேன். அவர் என்னைத் தம்மு டையவனாக ஏற்றுக்கொண்டு இரட்சிப்பாரென்று நினைக்கி றாயா என்று ஆவலுடனே கேட்டார். சந்திரலீலாள் மறு மொழியாக, என் நேச சகோதரனே, 'என்னிடத்தில் வருகிற ஒருவனையும் நான் புறம்பே தள்ளுவதில்லை' என்று அன்பான அமிர்தவாக்கருளிய அந்த அருமை ரட்சகர் நிச்சயமாகவே உம்மை ஏற்றுக்கொண்டு உமக்கு இரட்சிப்பருளச் சித்தமாயி ருக்கிறார். உமக்காகவும் அவர் தமது ஜீவனை ஒப்புக்கொடுத் தார். பூமியின் எல்லையெங்குமுள்ள விசுவாசக் கூட்டத்தார் அவரை நோக்கிப்பார்த்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள் ளுகிறதுபோல் நீரும் உமது முழு இருதயத்தோடும் அவரை

விசுவாசித்தால் மெய்யாகவே அவர் உம்மை ஏற்றுக்கொள்ள நற்சித்தமுள்ளவராகவே இருக்கிறார் என்று பூரண நிச்சயத்துடன் தெரிவித்தாள். அவர் என்னை ஏற்றுக்கொள்ளுவார் என்பது உனக்கு அவ்வளவு நிச்சயமாவென்று ஆவலாய்க் கேட்டுக்கொண்டு பின்னும் அவர் சொன்னதாவது:—

'நான் என் சமுசாரம் பிள்ளைகளோடு உன்னிடம் மிதுனபுரிக்கு வந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களுடனே சேர்ந்துகொள்ள வேணுமென்று நினைத்திருந்தேன். ஆனால் அப்படிக்கெல்லாம் செய்ய இனி நான் உயிரோடிருக்க முடியாதென்று காண்கிறேன். இனி எனக்கு அதிக நாட்களில்லைபோலிருக்கின்றது. ஆகிலும் கிறிஸ்தவனாய் மரித்துப் போவதையே விரும்புகிறேன். இயேசுநாதர் எவ்விதமும் என்னை ஏற்றுக்கொள்ளுவாரென்று உனக்கும் நிச்சயமிருக்கிறதே' என்று உள்ளம் உருகி உணர்வோடு சொன்னார்.

அதற்கவள், 'ஆம், ஆம், என் நேச சகோதரனே, கர்த்தர் உம்மை இத்தருணமே ஏற்றுக்கொள்ள நற்சித்தமுள்ளவராயிருக்கிறார் என்றறிவேன், நீர் இதைப் பூரணமாய் விசுவாசித்து உமது சரீரம் ஆத்துமாவாகிய இரண்டையும் அவருக்கு ஒப்புக்கொடுக்கிறீரா,' என்க,

அவர், 'ஆம், நான் அவைகளை முற்றிலும் அவருக்கே ஒப்புக்கொடுக்கிறேன்; இயேசு என்னை ரட்சிக்கிறாரென்றும் விசுவாசிக்கிறேன்: ஆ, நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் நல்லதே!' என்றார்.

சந்திரலீலாள் மாறுத்தரமாக, 'என் அருமைச் சகோதரமே, உமக்கு ஞானஸ்நானம் தர இவ்விடத்தில் பாதிரி ஸாய்புகள் இல்லையே; இந்த நமது தேசமெங்கும் தேடிப்பார்த்தாலும் அப்படிக் கொருவனைக் காணக்கிடையாதே; அதற்கென்று வெகு தொலைதூரமாய்ப் போய் ஒருவனைக் கொண்டுவரவும் இப்போது முடியாதே' என்று அங்கலாய்ப்போடு சொன்னாள்.

மரணத்தறுவாயிலிருந்த சகோதரன் இதுகேட்டு, 'என் சகோதரியே, நீ தூரஸ்தலத்திற்குப் போய் ஒரு பாதிரியானை அழைத்துவர விரும்பினாலும், அதுமட்டும் நான் உயிரோடிருப்பேன் என்று தோன்றுகிறதில்லை. ஆனால் நீ கிறிஸ்தவளாயிருந்து சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறாயே, அப்படியிருக்க, உன் கையால் நீ ஏன் எனக்கு ஞானஸ்நானங் கொடுக்கக் கூடாது, நான் கிறிஸ்தவனாகவே மரித்துப்போக விரும்புகிறேன்' என்றார்.

அதுகேட்ட சந்திரலீலாள் சிறிதுநேரம் அதைப்பற்றி ஆலோசித்தபின் தனதருமை உடன்பிறவி முகத்தில் உருக்கமாய்ச் சிறிது நிமிஷம் பார்த்துக்கொண்டிருந்து தனக்குள்ளே சொல்லிக்கொள்ளுகிறாள்: இந்த என் சகோதரனின் குணப்படுதலுக்காக நான் எவ்வளவுகாலமாய் வெகு வாஞ்சையுடனே கர்த்தரிடம் மன்றாடிக்கொண்டுவந்தேன். இப்போது கர்த்தர் இரங்கி என் ஜெபத்தைக்கேட்டு என் சகோதரனைத் தமது இரட்சிப்புக்குச் சமீபமாக்கியிருக்கையில் அவர் சமாதானமாய்க் கிறிஸ்துவுக்குள் நித்திரையடையப் போகிறபோது அவர் விருப்பப்படிக்கு ஞானஸ்நானத்தைக் கொடாமல் நான் தண்ணீரை எப்படி அவருக்கு விலக்கிவைக்கலாம்! மெய்யாகவே அவர் ஆசிக்கிறபடி நான் அவருக்குத் தண்ணீரினாலே ஞானஸ்நானங் கொடுத்தால் தேவன் என்பேரில் கோபமாயிரார்; அஞ்ஞானிகளின் பொய்த்தேவர்களுக்கு முன்பாக புரோகித ஸ்தானத்தில் நின்று எத்தனை எத்தனையோ பூசைகளை நடத்தியிருக்கிற நான் தேவாதிதேவனின் மகிமைக்காக இந்தக் கருமத்தை ஏன் செய்யக்கூடாது என்றயிர்த்துக்கொண்டு திடீரென வெளியேபோய் ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக்கொண்டு உள்ளே வந்தாள். அவள் அதைக் கீழே வைத்துக்கொண்டு தன் சகோதரன்பக்கமாய் முழங்காலூன்றி மெத்தப் பக்திவிநயத்துடனே கர்த்தர் தனக்கருளிய கிருபைக்காக அவரை ஸ்தோத்திரித்தபின், தன் சகோதரனின் குணப்படுதலுக்காகவும் அவரை ஸ்தோத்திரித்து தனதுள்ளம் கனிந்துருக ஜெபித்தபின், தன் சகோதரன்மேல் தான் தெளிக்கப்போகும் ஞானஸ்நானத் தண்ணீரை அவர் ஆசீர்வதித்து பரிசுத்தாவியின் ஸ்நானத்தையும் அவருக்குள் பொழிந்தருள வேண்டுமென்று மகா ஆவலுடனே கெஞ்சி மன்றாடினாள். அவள் இன்னும் தன் முழங்காலில் நிற்கவே, அப்பாத்திரத்தைத் தன் கையிலே ஏந்திக்கொண்டு அதிலிருந்து தண்ணீரை அள்ளி அவருடைய தலைமேல் வார்த்து, என் சகோதரனே, பிதா, குமாரன், பரிசுத்தாவின் நாமத்திலே நான் உமக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன், ஆமென், என்று சொல்லித் தன் தலையைச் சாய்த்துக்கொண்டு இருதயத்திலே அத்தியந்த பணிவுடன் கர்த்தரை நோக்கிப் பின்னும் ஜெபித்தாள்.

சந்திரலீலாள் அத்திவ்ய நியமத்தை பக்திவிநயத்துடனே நடப்பிக்கையில் மீட்பரான இயேசுதாமே தமது விண்தூதர்க் குழாங்களுடன் அங்கெழுந்தருளிப் பாத்தை நோக்கிய அவ்வாத்துமாக்களின் மேலாக அந்தரத்திலே அசைவாடி நின்று அக்கி

யான மருளுறைந்த அத்தேசத்தின் மத்தியிலிருந்த அவ்வீட்டை உன்னதத்தின் மகிமையால் நிரப்பியிருக்கலாமென்று ஓர்ந்தறியலாம்.

அவள் தன் ஜெபத்தை முடித்து எழுந்திருக்கையில் தன் சகோதரன் முகத்திலே சமாதான புன்னகை இங்கித சுடர்போல் விளங்கியிருக்கக் கண்டு 'இப்போது என் நேச சகோதரன் சாத்தானுடைய இருளினின்று நீங்கி, கிறிஸ்துநாதரின் முகத்திலுள்ள ஒளிப்பிரபையால் இரட்சண்ய நிச்சய சோபிதாலங்காரம் அடைந்திருக்கின்றனரே' என்று ஆனந்த பரவசமடைந்தாள்.

அந்த மகிமை சிறந்த விண்தூதர்ச் சேனை சிறிது நாட்களுக்குப்பின் மீண்டும் அக்குடிசைக்கு வந்து சந்திரலீலாளின் சகோதரனைத் தங்கள் கைகளில் ஏந்தி யெடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

அஞ்ஞானிகளான அவருடைய சிநேகிதரும் உறவினரும் தங்கள் குலாசாரப்படியே அவ்வுடலை எடுத்துக்கொண்டுபோய்த் தகனிக்கும்படி வந்தார்கள். சந்திரலீலாளோ தன் சகோதரனின் தேகத்தைக் கிறிஸ்தவமுறையாய் அடக்கஞ்செய்யும் சலாக்கியத்தை கர்த்தர் தனக்களிக்க வேண்டுமென்று ஊக்கமாய் வேண்டிக்கொண்டாள். அதற்காக அந்த ஜனங்களிடத்தில் கேட்டபோது, அவர்கள் அவளுக்குச் செவிகொடாமல் நீ கிறிஸ்தவளா யிருப்பதினாலே உன் விருப்பப்படிக்கு நாங்களும் செய்வோமென்று நினைக்கவேண்டாம் என்று சொல்லிப்போட்டார்கள். அவளோ, தன் சகோதரன் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவனாய் மரித்ததையும், அவரது மரணத்திற்குமுன் அவர் தாமே அப்படி அவர்கள் முன்பாக அறிக்கையிட்டதையுமெல்லாம் சொல்லிக்காட்டி அதனாலே கிறிஸ்தவ ஒழுங்குக்கு அத்தேகத்தை விட்டுக்கொடுக்க கூடியமட்டும் அவர்களிடம் மன்றாடினாள். அவர்களோ தாங்கள் அதற்கு உடன்படுவதில்லை என்று பிடிவாதமாய் நின்றார்கள். என்றாலும் அவள் அதைரியப்படாமல் ஆண்டவர் அந்த ஒரு தயவையும் தனக்குக் கூடுதலாய் அனுக்கிரகம் பண்ணவேண்டுமென்று நம்பிக்கையோடே விண்ணப்பம் பண்ணிக்கொண்டுவந்தாள்.

அது மாரிகாலமானதால் மெத்த ஈரலிப்பாயிருந்தது. அவர்கள் தகனத்திற்கான கட்டைகளையெல்லாம் வெட்டி யடுக்கி, அதற்கென்று ஆயத்தப்பட்டிருக்கையில் மழை சோனாமாரியாய் எடுத்தூற்றிக்கொண்டே யிருந்தது. ஆயினும் அவர்கள் பிரேதத்தைக் கட்டி யெடுத்துச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோய்விட்

டார்கள். சந்திரலீலாளோ, ஆண்டவர் அவர்கள் இஷ்டத்திற்கு ஒப்புக்கொடாமல், தனக்கே அப்பிரேதத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்று அந்தரங்கத்தில் ஜெபித்துக்கொண்டே பின்னாலே தொடர்ந்து நடந்தாள். சுடுகாடு தண்ணீர்க்காடாகி அவர்கள் அடுக்கிய கட்டைகளிலெல்லாம் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. என்றாலும் அவர்கள் பிரேதத்தை கட்டைகளின்மேல் கிடத்தி கொள்ளி வைத்தார்கள். மழை பின்னும் பின்னும் அறைந்துகொண்டிருந்தமையால் அவர்கள் என்ன தான் பார்த்தாலும் கட்டைகளில் தீப்பிடிக்கவில்லை. மழைத் தண்ணீர் கட்டைகள் முங்கத்தக்கதாக எழும்பிக்கொண்டேயிருந்தது. கருக்கலாகிறபோது சந்திரலீலாள் அவர்களை வருந்தி, என் சிநேகிதரே! நம்முடைய தேவனானவர் தமது பிள்ளையான ஒருவனுடைய தேகத்தை இந்துமார்க்க முறைமைப்படி அக்கினியாலே தகனிக்க விடமாட்டார் என்பதை அறியீர்களா? அவர் என் ஜெபத்தைக் கேட்டு உங்களைத் தடைபண்ணும் பொருட்டே இந்த மழையையெல்லாம் அனுப்பிக்கொண்டிருக்கிறார். இதை நீங்கள் அறிந்து இந்த என் உடன்பிறவியின் தேகத்தை என்னிடம் ஒப்புவித்துவிட்டுப் போய்விடுங்கள். நீங்கள் அப்படிச் செய்யாதபட்சத்திலே அவர் இனிப் பயங்கரமானவிதமாய் உங்களைத் தடுப்பார் என்றாள். இது கேட்டு அவர்கள் காரியம் வாய்க்காது என்று காணவே, அப்பால் அவளுடைய இஷ்டப்படி செய்ய விட்டுவிட்டார்கள். உடனே அந்தக் கிறிஸ்தவ உத்தமி ஆட்களை விட்டுத் தேகத்தை எடுத்துக்கொண்டுபோய், ஒரு பிரேதக்குழி தோண்டி கிறிஸ்தவமுறையாய், அந்த ஜனங்களுடைய கண்களுக்கு முன்பாக அதை நல்லடக்கஞ்செய்தாள்.

# 8. அதிகாரம்

## ஸ்திரீகள் பிரசங்கிக்கலாமா?

சந்திரலீலாள் இரண்டு வருஷங்களுக்குமுன் அந்நிய ஸ்திரீயாக முதன்முதல் எங்கள் வீடுவந்து சேர்ந்தபோது நாங்கள் அறியாமல் எங்கள் ஜீவியத்தில் ஒருதரம் ஒரு தேவதூதிகையைத் தான் உபசரித்துவிட்டோம் என்று சொல்லவேண்டும். முதலாவது அவளுடைய முகத்தோற்றமும் அப்பால் அவளு

டைய சாந்தமும் அடக்கமுமான ஆவியும் எங்களை உணர்த் திற்று. தேவஊழியத்தில் அவளுக்கிருந்த பக்திவிநயத்தை அதிசீக்கிரம் பார்த்தறிந்தோம்; அவள் மற்றவர்கள் அதைச் செய்யட்டுமென்று ஓர்போதும் விட்டிராமல், நாடோறும் அதி காலையில் புறப்பட்டுப்போய் எங்கும் சுற்றித்திரிந்து பிரசங் கித்துவிட்டு இருட்டோடே தான் வீடுவந்து சேர்வாள்.

அவளுடைய ஊழியத்தின் விசித்திரம் எத்தனை விசேஷ மானதோ! ஒருநாள் அவள் போய் ஓர் சுதேச பெருமாட்டியின் பாதத்தண்டை உட்கார்ந்துகொண்டு அவளுக்கும் அவள் வீட் டாருக்கும் வேதபுஸ்தகத்தை வாசித்து விஸ்தரித்துக்காட்டுவ தைக் காணலாம். மறுநாள் கடை அங்காடிகளில் சென்று அங்கே வந்துபோகும் ஜனங்களுக்குப் பிரசங்கிப்பாள். இன் னொருநாள் படிப்பாளிகளான சுதேசிகள் கூடியிருக்கும் ஓர் வீட்டில் சென்று தனக்குப் பிரியமானபடி தரையில் தானே உட்கார்ந்துகொண்டு (முகப்புப்படம் பார்க்க.) அவர்களிடத் தில் பேசுவாள். அவர்கள் முதலாவது அவள் நேருக்கு ஓர் வேளை பரியாச ஜாடை காண்பித்தாலும், இருந்திருந்து அவள் ஒரு ஸ்திரீ என்பதை மறந்தவர்போலாகித் தங்கள் சாஸ்திர நூல்களில் அவளுக்கிருக்கும் அறிவைக் கவனித்து வியப்படைந் தவர்களாகித் திகைப்பார்கள். அவர்கள் வேதங்களிலும் சாஸ் திரங்களிலுமுள்ள பாடல்களை அவசியத்திற்குத் தக்கதாய் இருந்தாற்போல் எடுத்துப் பாடி, அவர்கள் மதானுசாரத் தவறு களை யூகமாய் வெளிப்படுத்திவிடுவதால், அவளை எவ்விதத் திலும் தங்களுக்கு மேற்பட்டவளாகவே இருக்கக் காண்பது மன்றி, அவளுடைய பிரசங்க சாதுரியத்தால் இழுப்புண்டு மெல்லமெல்ல ஒவ்வொருத்தராய்க் கிட்டப்போய் உட்கார்ந்து கொள்வார்கள். அவள் சமர்த்துடனே அவர்கள் கவனத்தை வெகுநேரத்திற்குக் கவர்ந்துகொண்டு அவர்களுடனே பேசி அவர்கள் மார்க்கம் சூனியமெனத்திருஷ்டாந்தப்படுத்தி, இயேசு கிறிஸ்துவை அவர்கள் ஆசித்து அறியத்தக்கவிதமாய் சுட்டிப் பேசித் தெரிவிப்பாள். நாலு வித்தியாசமான பாஷைகளில் பிரசங்கிக்கும் திறமை அவளுக்குண்டு. தனக்கு அவசியமான வற்றைத்தொட்டு கொஞ்சத்திலே பூரண திருப்தி, சுயவெறு றுப்பு, பிறர் நன்மையைக் கருதிய சிந்தை, தேவன்பேரில் பெரிய நம்பிக்கை இவ்வித குணதிசயங்களே அவளுடைய ஜீவி யத்தின் அலங்காரமாய் விளங்கின. அவளுக்கு இப்போது ஏகதேசம் 70 வயசாகப்போகிறதால் பலட்சயப்பட்டுக் கண் ணொளி மங்கிவருகிறது. என்றாலும் 40, 50 மைல் தூரம்

பிரயாணம்பண்ணிப் பலவிடங்களில் கூட்டங்கள் நடத்தி ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக ஜெபத்துடனே வேலை நடத்திவருகின்றாள். அவள் மூலமாய்க் கிறிஸ்துநாதரைக் கண்டடைந்தோரின் தொகை எவ்வளவென்று அவள் ஜீவகிரீடம் தரிக்குமட்டும் தெரியாதிருக்கலாம்.

சிறிதுகாலத்திற்குமுன் சில அம்மாள்மார், வேதாகம ஸ்திரீகள் சகிதம் அவள் தேசாந்தரப் பிரசங்கத்திற்குப் போய்த் திரள் பேருக்குப் பிரசங்கித்து கிறிஸ்துமார்க்க சத்தியத்திற்குப் பலத்த நியாயங்கள் எடுத்துப் பேசினார்கள். அப்போது அங்கிருந்த போதக சிரேஷ்டர்களிலொருவர் அவ்வூர்த்தலைவனைப் பார்த்து 'இந்தச் சத்தியங்களையெல்லாம் காதாரக் கேட்ட நீர் இதற்கு மாறுத்தரமாக என்ன எதிர் நியாயங்களை எடுத்துக் காட்டப் போகிறீர்' என்றார்.

இதைக்கேட்ட இந்துமார்க்கத்தானான கண்ணியமுள்ள அம் மனுஷன் இந்த ஸ்திரீகளுக்கு என்ன தெரியும், யதார்த்தப்படி ஒன்றுந் தெரியாது; எங்கள் சுவாமியின் ஞானத்தை நீங்கள் கேட்குமட்டும் பொறுத்திருங்கள் என்று சொல்லிக்கொண்டு போய் அவ்வூர்ப் பிராமணப் பூசாரியை அழைத்துக்கொண்டு வந்தார். தவவேடம்பூண்ட அந்தப் பூசாரி வெகு கண்ணியத்துடன் வந்து ஜனங்களிடையில் உட்கார்ந்தான். அவன் பேசத் தொடங்கவே, அம்மனிதன் தன் பழைய சீஷர்களிலொருவன் என்று அறிந்துகொண்ட சந்திரலீலாள் அவனுக்குச் சந்தோஷமாய் வந்தனஞ்செய்து, ஜனங்களை நோக்கிச் சொன்னதாவது:—

'ஜனங்களே! இந்த மனிதனுக்கு இந்துமார்க்கத்தைப்பற்றி நான் படிப்பித்திருந்ததெல்லாம் தெரியும். இவருக்கு மந்திரங்களைப் பாடமாக்கினது நான்தான்: தேவர்களை நோக்கிப் பிரார்த்தனை செய்ய இவருக்குப் படிப்பித்ததும், வேதங்களை இவருக்குக் கற்றுக்கொடுத்ததும், பூஜைக் கருமாதிகளை நடப்பிக்க இவருக்கு அதிகார உரிமை யளித்ததுமெல்லாம் நான்தான்' எனத் தெரிவித்தாள்.

இதுகேட்டு ஸ்வாமியார் காரியம் தட்டுக்கெட்டுத் தடுமாற்றமாக அவர் திறுதிறெனக் குறுவிழி விழித்தார். பேச அவருக்கு நாவெழும்பவில்லை. அவருடைய ஞானத்தின் தத்துவமும் அம்மாத்திரந்தான்.

சந்திரலீலாள் இந்துமார்க்கத்தின் கற்பிதங்கள் முற்றிலும் பிசகென்று பிற்பாடு தான் கண்டுபிடித்ததை தெரியக்காட்டி,

கிறிஸ்துமார்க்கப் போதனைகள் அனைத்தும் உண்மையானவைக ளாய் மாத்திரமல்ல மனுபுத்திரருக்கு அவசியமான ஆசீர்வாதங் கள் நிரம்பியவைகளாயும் இருக்கின்றனவென்று பல திருஷ் டாந்தங்களைக்கொண்டு சாட்சியர்க ஃறிவித்து இந்துக்களை வாயடைத்தாள். அவள் சொன்னவையெல்லாம் அந்த ஜனங்க ளுடைய மனதில் பட்டது.

இப்படியாக இந்த அந்தகாரதேசத்துப் பெரிதும் சிறிதுமான ஜனக்கூட்டங்களுக்கு சந்திரலீலாள் முப்பது வருஷகாலமாய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாள்.

வித்துவாமிசர் அடிக்கடி அங்கங்கே கூட்டங்கூடி ஸ்திரீக ளைப் பிரசங்கிக்க விடலாமா என்ற விஷயத்தைவிட்டு அதிக மாய் ஆலோசிக்கின்றனர். பகிரங்கமான கூட்டங்களில் அவர் கள் ஜெபித்தலும் தகுதியாயிருக்குமாவென்று தர்க்கம் பேசு கிறவர்களுமுண்டு. போதக சிகாமணிகளைத் தலைமைகொண்ட அச்சியந்திரசாலைகளும் பிரசங்க பீடங்களும் சபைகளின் பிரக் கியாதிபெற்ற அத்தியாபகர்களும் ஸ்திரீ ஜனங்களைப் பொது வான ஆலோசனைச் சங்கக் கூட்டங்களில் கூடியிருக்கச் சம்ம திக்கலாமா என்ற காரியத்தையிட்டு ஒற்றுமைப்படாது சமுசய பாவனையாயிருப்பதும் சகஜந்தான்.

இவ்விஷயங்கள் தகுதியானவைகளோ அல்லவோ என்பதின் பேரில் ஆலோசனைகள் நடந்தேறி அவற்றைக் குறித்த சட்டங் கள் ஏற்பாடாகையில், சந்திரலீலாள் படிப்பாளிகளும் அறிவிலி களும் உயர்குலத்தோரும் இழிஜனரும் புருஷர்களும் ஸ்திரீ ஜனங்களுமாகப்பட்ட ஆயிரக்கணக்கானவர்களுக்குப் பிரசங் கித்து அவளுக்கு இயல்பான ஞானுதிக்கத்தால் அநேகமணித் தியாலங்களுக்கு யாரும் வாய்திறந்து எதிர்பேசக்கூடாத திற மையுடன் அவர்கள் மனதைக் கவர்ந்து பிரசங்கிப்பாள். ஜீவ வார்த்தைகளை அவள் பொழியும் மேனாயைப் பார்த்தால் வேதசாஸ்திர விபுணரும் அத்திறமைக்காக இச்சித்து நிற்பார். அவளுடைய பிரசங்கம் ஆதியோடந்தமாய் அதே சீராயிருக் கும். திருப்பணிவிடைக்கென்று தேவனால் தெரிந்துகொள் ளப்பட்டு அபிஷேகம்பெற்ற ஸ்திரீகள் மனுஷரால் நியமிக்கப் பட்டாலுஞ்சரி படாவிட்டாலுஞ்சரி, தங்களுக்குக் கட்டளை யிடப்பட்ட அத்தெய்வ ஊழியத்தைத் தாராளமாய்ச் செய்யட் டும். அப்பேர்ப்பட்ட ஸ்திரீகளுக்குப் பொதுவான ஆலோ சனைச் சங்கத்தில் உட்கார்ந்திருக்க ஓர் இடங்கிடைத்தாலு மென்ன, கிடையாவிட்டால்தான் என்ன? எல்லாம் சரிதான்.

நமதருமையான ஐரோப்பிய ஜனங்கள் இத்தகைமையான அற்பக்காரியங்களில் மனதைச் செலுத்தாமல், இரட்சிப்பைக் கண்டடையாத லட்சாதிலட்சமான ஆத்துமாக்களை எட்டிப் பிடிக்க ஏற்றவகை பார்ப்பாரேயாகில் அதுவே மகத்தான காரியமாகும்.

பசித்த ஆத்துமாக்களுக்குச் சுவிசேஷம் போய் எட்டும்படி அவசியத்திற்குத் தக்கதாய் அநேகர் தங்களைத் தியாகம் பண்ணவும், பாடுபட நேரிட்டால் அதற்காகவும் மனோற்சாகமடைந்தால் தாவிளை. சந்திரலீலாள் ருத்திராட்சத் தாவடம்பூண்ட அருவருப்பும் அசங்கியமுமான ஊத்தைச் சாம்பல் பூச்சாண்டியாய் உட்கார்ந்திருந்தவிதமாக, ஐயையோ, எத்தனையோ வைரரத்தினங்கள் நம்மைச் சுற்றிலும் செடி கூளங்களில் கிடந்து அலைசடிப்படுகின்றன! இந்தச் சுரங்கக் கழனியினின்று அவர்களைச் சேர்த்துக்கொண்டுவர உதவிபுரிவாருண்டோ? ஈக்களாட்டமாய் மொய்த்து தங்களைப் படிப்பிக்கவோ, தங்கள் ஆத்துமாக்களுக்காகக் கவலைப்படவோ செய்கிறவர் யாருமின்றி அந்தகாரத்தில் தடவித் தட்டோலப்பட்டலையும் இந்த நிர்ப்பந்தமான ஜனங்களை சீர்மை தேசத்திலுள்ள உத்தமர் காணக்கூடுமாயின், தேவபிதாவின் பிள்ளைகளான அவர்களில் பலர் 'கர்த்தாவே, இதோ அடியேன் இருக்கிறேன்; உமது காரியமாய்ப் போக என்னை அனுப்பும்' என்று சொல்லி இவ்விஸ்தார திராட்சத்தோட்டத்தின் வேலைக்கென்று மனோற்சாகமாய்ப் புறப்பட்டுவரவோ அல்லது தங்களுக்குப் பதிலாக வேறே உற்சாகமுள்ள பணிவிடைக்காரரை அனுப்பிவைக்கவோ ஏவப்படுவார்கள் என்பது திண்ணம்.

பஞ்சத்தின் பயங்கரங்களையும், கொள்ளைநோய் ஆதியான வாதைகளின் பாழ்க்கடிப்புகளையும், பூமியதிர்ச்சிகளின் சேதபாதங்களையும் பற்றியெல்லாம் அநேகர் சவிஸ்தாரமாய் எழுதுகிறார்கள்; எங்கும் பேசிக்கொள்ளவும் செய்கிறார்கள். ஆனாலும் என்ன? தேவனில்லாதவர்களாய் ஜீவித்து மாண்டுபோகிற லட்சாதி லட்சமான இந்த நிர்ப்பந்த ஆத்துமாக்களைக் கவனிக்கையில், இதுபோல் பயங்கரமில்லை. இந்தப் பரிதாப ஜனங்களிடையில் தெய்வ வேலைசெய்ய ஐரோப்பா அமெரிக்காவிலிருந்து மாத்திரமல்ல; இந்நாட்டுப் பணிவிடையாட்களும் எழும்பி வரத்தான்வேண்டும்.

ஓ! நமது கர்த்தாதி கர்த்தரானவர் சந்திரலீலாளைப்போல் மீட்கப்பட்டவர்களும், தங்கள் ஜனத்தாரில் மீட்பைக் கண்டடையாதவர்களுக்கு அதைத் தெரியப்படுத்தத் தக்கவர்களுமான சுவி

சேஷ சேனுவீரர் அநேகரைத் தமது திராட்சத்தோட்டத்திலே அனுப்பிவைக்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள். அப்போது இப்பாழ்வனாந்தரம் செழித்து நறுமலராம் ரோஜாவைப் போல் பூத்துப் பரிமளிக்கும். ஆகவே, கர்த்தாவின் வருகையில் பல ஜனத்தாரிலும் பாஷைக்காரரிலுமிருந்து சேர்க்கப்பட்ட திரள்சேனையான ஓர் அலங்காரசபை அவருக்கு ஜெய கம்பீரமாய் எதிர்கொண்டுபோக இவ்விஸ்தார இந்தியாவிலிருந்தும் புறப்படலாமே.

சந்திரலீலாளைக் கேளுங்கள்: 'நான் தேவனைக் கண்டடையும்படியாகவே இந்தப் பாடெல்லாம் பட்டுத் தொலைத்தேன்' என்கிறாள். சிநேகிதரே! இதைக் கவனியுங்கள். நாம் நமது தேவனை ஜாதிகளுக்குள் அறிவிக்கும்படியாக, ஜனசதளங்கள் அவரைக் கண்டடையும்படியாக, என்னகாரியம் செய்திருக்கிறோம்? எவ்வளவேனும் பாடுபட்டிருக்கிறோமா?

# 9. அதிகாரம்

## சந்திரலீலாளின் வயோதிப காலயாத்திரை

**வார** ஜெபமான ஒருசமயத்தில் கல்குத்தா வெங்குமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்துப் பிரதிநிதிகளான சுதேசிகளனைவரும் கிறிஸ்தவக் கூட்டத்தாருடன் தங்களுடைய ஐக்கிய ஜெபதோத்திரங்களை ஏறெடுக்கும்படி தேவாலயத்தில் கூடிவந்தார்கள். சாமானிய வெள்ளைச்சேலை உடுத்துத் தலைநரைத்த ஒரு வயோதிப ஸ்திரீயும் தள்ளாட்டமான நடை நடந்து அப்போது ஆலயத்தில் வந்துட்கார்ந்து ஜெபவாஞ்சையால் நிறைந்தவளாய் ஆராதனைக்கிருந்தாள். அவளார்? சந்திரலீலாள்தான். அவள் கிறிஸ்து நாதரைப் பிரசங்கிக்கும் சோலியாய் தூரஸ்தலத்திற்கு யாத்திரை போயிருந்து இப்போதுதான் வள்ளத்தின்வழியாய் வந்திறங்கினாள். எப்போதும் பிரசங்கம் பண்ணிக்கொண்டு திரிய வேண்டும் என்பதே அவளுடைய பேராவல். அவள் எங்கே போகிறதென்று அறியாள்: ஆவியானவர் எங்கே நடத்திக் கொண்டு போவாரோ அங்கேதான் அவளுடைய போக்கு.

ஆராதனை முடிந்தபின் பார்வைக்கு அலங்காரமான ஒரு மனிதன் அவளண்டையில் வந்து நின்று சலாம் செய்து, 'இதுதானா சந்திரலீலாள்' என்று விசாரித்தார். அதற்கவள்,

'ஆம், மகனே, நீர் யாரென்று எனக்குத் தெரியவில்லையே' என்க, அவர், 'பதினாலு வருஷங்களுக்கு முன்னமே அலகபாத்தில் **மாக்மேளா** என்ற பங்குனி மாசத்துத் திருவிழாவில் நீங்கள் வந்திருந்த ஞாபகமிருக்கிறதா?' 'ஆம், நான் அங்கே அப்போது போயிருந்தேன்.' 'அப்போது ஒருநாள் பிராமணப் பூசாரிகளின் கூட்டத்திலே அவர்களுக்கும் உங்களுக்கு மிடையில் கர்னகடோரமான தர்க்கம் எழும்பிவிட்டதையும், கிறிஸ்துமார்க்கத்தின் உண்மையைத் தெளிவிக்கிறதான உங்கள் நியாயங்களை எடுத்து மடக்க ஏலாதபோது அவர்கள் ஒருவர்பின் ஒருவராய் எழுந்து போய்விட்டதையும் பற்றி ஞாபகமிருக்குமே; அந்தக் கூட்டம் கலைந்தபின் ஒரு இந்து வாலிபன் உங்களிடம் வந்து தன் இருதயத்திற்கு ஆறுதல் இல்லாததைப்பற்றித் தெரிவித்த ஞாபகம் இருக்கிறதா? அப்போது அவனைப் பார்த்து நீங்கள் 'வாலிபனே, இவ்வுலகத்தில் உன் ஜீவியம் வெற்றியடைந்து பூரிக்கவேண்டுமாகில் இனிவரும் ஜீவன்பேரில் வாஞ்சையாயிருந்து, உன் தப்பறையான மார்க்கத்தைத் தள்ளிவிட்டு உத்தம கிறிஸ்தவனாகு' என்று சொல்லவில்லையா? அந்த வாலிபன் நான்தான். நீங்கள் சொன்ன அந்தக் கடைசி வார்த்தைகளை நான் ஒருக்காலும் மறந்துபோகவில்லை. நான் அதேநாளில் கிறிஸ்துநாதரைப் பற்றிப் படித்தறிய வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். நான் அவரைக் கண்டடையுமுன் இரண்டு வருஷமாய் அந்தகாரத்தில்தான் தடவித் திரிந்தேன். அவருடைய நாமத்தினிமித்தம் சகலத்தையும் தள்ளிக் களைவது எனக்கு மெத்தப் பிரயாசமாய்க் காணப்பட்டது. எப்படியும் கடைசியில் நான் தைரியமடைந்து இந்துமார்க்கத்தைத் தள்ளிக் கிறிஸ்தவனாகி ஞானஸ்நானம் பெற்று 12 வருஷங்களாகிறது. இப்பொழுது நான் இந்தப் பட்டணத்து லண்டன் மிஷன் காலேஜில் ஒரு ஆசிரியனாயிருக்கிறேன்' என்றார்.

இவைகளைக் கேட்டபோது, சந்திரலீலாளுக்கு உண்டான சந்தோஷம் இம்மட்டென்றில்லை. அந்த வாலிபனின் முகத்தை வெகுகாலம் அவள் காணாதிருந்து இப்போது கண்ணியமும் பிரயோஜனமுமுள்ள கிறிஸ்தவனாக அவர் தனக்குமுன் வந்து நிற்பதைக் கண்டு களிகூர்ந்தாள்.

அவர் பின்னும் அவளைப்பார்த்துப் பேசி, 'என் ஊர் இங்கிருந்து 40 மைல் தூரத்திற்கப்பால் இருக்கிறது. என் ஜனங்களெல்லாரும் இந்து மார்க்கத்தார்தான். என் தந்தையின் வீடு இன்னும் விக்கிரகங்களின் கூடாயிருக்கிறது. நீங்கள் வந்து

அவர்களுடைய தப்பிதத்தை எடுத்துக்காட்டி, நீங்கள் மெய்த் தேவனைக் கண்டடைந்த விதத்தை தெரியச் சொல்லமாட்டீர்களா? எனக்கு இரண்டுவாரம் விடுமுறையுண்டு; நீங்கள் என்னுடனே வருவீர்களானால் என் அருமை ஜனத்தாரான அவர்களில் சிலரையாவது பிசாசின் அந்தகாரக் கோட்டையினின்று விடுதலையாக்கப் பார்க்கலாமே' என்றார்.

சந்திரலீலாள் இதைக் கேட்டபோது அது கர்த்தரிடத்திலிருந்து தனக்கு வந்த அழைப்பு என்றெண்ணிக்கொண்டு 'ஆம் நான் வருகிறேன்; நீர் எப்போது புறப்படுகிறீர்' என்றாள்.

'நாளைக் காலமே புறப்படுகிறேன்' என்றார்.

'நல்லது, நான் ஆயத்தமாயிருப்பேன், போகலாம்' என்றாள்.

அவ்வாறே மறுநாட் காலையில் புறப்பட்டுப் போனார்கள். மிஷனெரியின் பாதங்கள் ஓர்போதும் சென்றிராத அந்த அஞ்ஞானக் கிராமத்திலே அவள் இரண்டு கிழமை தாமதித்து இராப்பகலாய் கர்த்தராகிய இயேசுவைப்பற்றிப் பிரசங்கித்து, அந்த ஜனங்கள் அவளைப் பற்றிக்கொண்டு வரப்போகிறகோபாக்கினைக்குத் தப்பிக்கொள்ள வகை காட்டினாள்.

கைம்பெண்ணாய்ப்போன அவருடைய சகோதரன் மனைவி அவளுடைய பிரசங்கத்திற்கு கருத்தாய்ச் செவிகொடுத்து மனமாறுதலடைந்து விசுவாசியாகிப் பிற்பாடு தன் பிள்ளைகளுடனே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டாள். அவருடைய மாதா பிதாக்களுக்குள்ளும் சத்தியத்தைப்பற்றிய உணர்வுண்டாயிற்று. என்றாலும் இந்து சமயத்தாரான தங்கள் ஜனங்கள் முன்பாக கர்த்தராகிய இயேசுவைத் தாராளமாய் அறிக்கையிடப் போந்த தைரியமில்லாமையால் தங்கள் இரட்சணியநாளை அலட்சியம் பண்ணினார்கள். அவர்கள் அந்த ஊரில் தலைமையும் செல்வாக்குமுள்ள பிரதான குடும்பத்தாராகையால், அவர்களுடனே தங்கியிருந்து அவ்வூரெங்கும் அறியும்படி அப்படி விபரீதமான மார்க்கத்தைப்பற்றிய ஆச்சரிய வார்த்தைகளைப் பிரசங்கித்த அந்நியராகப்பட்டவர்களைத் தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டதினிமித்தம் அங்கே மெத்த அதிர்ச்சியுண்டாயிற்று. அவ்வூர்ப் பிராமணப் பூசாரிகள் உலையிலகப்பட்ட இரும்பு பழுத்து வெளுத்தாற்போல் கோபவெறியேறி, சந்திரலீலாள் கடைவீதியிலே பிரசங்கித்துக்கொண்டு நிற்கையில், அவளை எதிர்த்துப் பேசி 'நீ மாட்டிறைச்சி தின்னும் கிறிஸ்தவளான கீழ்ஜாதிப் பெண்டுதானே' என்று வசை கூறினர்.

எவ்வேளையிலும் சாத்மீக குணாலங்காரமுடைய சந்திரலீலாள் அவர்களுக்கு மாறுத்தரமாக, 'கிறிஸ்தவர்கள் தான் மாட்டிறைச்சி தின்கிறவர்கள் என்றாற்போல் பேசுகிறீர்களே: உங்களுடைய இந்துமார்க்கச் சுவடிகளான வேத நூல்களிலே ஒரு சமயம் தேவர்கள் பிராமணரிடத்தில் காளைகளைத் தங்களுக்குப் பலியிடும்படி கட்டளையிட்டதாகச் சொல்லியிருக்கிறதில்லையா? எங்ஙனமெனில்: ஒரு தெய்வத்தின் கோபாக்கினியைச் சாந்திசெய்ய மாட்டுப் பலியினாலேயேயன்றி மற்றைய எவ்வகைப் பலியினாலும் முடியாதென்று கண்டு, அத்தெய்வத்தின் உக்கிரகோபத்திற்குத் தப்பவேண்டி அப்பலியைக் கட்டளையிட்டார்களென்றும், பிராமணர் அப்படியே பலியிட்டு, அந்த மாடுகளின் இறைச்சியைக் கட்டளைப்படி நன்றாய்ச் சாப்பிட்டார்களென்றும் சொல்லியிருக்கிறதில்லையா? அங்ஙனம் மாட்டுக்கறி தின்ற பிராமணர் தீட்டுப்படாதிருக்க, கிறிஸ்தவர்கள் அதைப் புசித்ததினால் எப்படி தீட்டுப்பட்டுப் போனார்கள்' என்று நியாயம் பேசினாள்.

இதுகேட்ட அந்தணர் வாய்காட்ட வழியில்லாததால் தோற்றுப் பின்வாங்கிப்போகவே, கூடிநின்ற ஜனங்கள் கோவென்று கூச்சலிட்டுப் பகிடி பண்ணிக்கொண்டு நின்றார்கள். சந்திரலீலாளோ அப்பால் தடங்கலின்றித் தாராளமாய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாள். இரண்டு வாரங்களும் முடிந்தபின் அவள் திரும்பிவந்து சிலநாள் இளைப்பாறிக்கொண்டிருந்தாள்.

குளிர்காலம் அவள் மூடிக்கொண்டு திரியும்படி ஒரு போதகர் கொடுத்திருந்த கம்பளியை ஒருசமயம் உயர்த்திவைத்துக்கொண்டு 'என் சிநேகிதர் எனக்குத் தூக்கிக் கொடுத்திருக்கிற தொல்லையைப் பாருங்கள்: தேசாந்தரப் பக்கிரியான எனக்கு இந்தப் பாரச்சுமை என்னத்துக்கு' என்றாள்.

கிறிஸ்துமார்க்க விரோதிகள் எடுத்துரைக்கும் தர்க்கங்களுக்கு எதிர் உத்தரங் கூறி அவர்களை வாயடைப்பதில் விளங்கும் அவளது விவேகமும் அரிய திறமையும், துராகிர்தரான மூர்க்கர் பேசும் நிந்தைகளையும் தூஷணங்களையும் சாத்துவீகமாய் அவள் ஏற்றுக்கொள்ளுகிற நல்லாவியின் மேன்மையுமெல்லாம் மெத்த ஆச்சரியமாய்த்தானிருக்கும்.

ஒரு விக்கிரகாலயத்தில் திருவிழாநடக்கையில் அங்கு நெருங்கி மொய்த்த விக்கிரக பக்தருக்கு அவள் மெத்த வல்லபத்துடன் பிரசங்கித்ததைக் கவனித்துநின்ற ஒரு சிநேகிதன் சொன்னதாவது:—

120124

சந்திரலீலாளின் பிரசங்கத்தை ஜனங்கள் வெகு நெருக்கமான கூட்டமாய் வட்டமிட்டுக் கேட்டுக்கொண்டு நின்றார்கள். அதைக்கண்டு மனஞ்சகியாத அக்கோவிற் பூசாரிகளிலொருவன் மூர்க்கவெறிகொண்டவனாய் அவளை நோக்கி, 'உன் கிறிஸ்துவை என் பிரம்புத்தடியால் அடித்துப்போடுவேன்' என்றான். அவள் அதற்கு மெத்த சாந்தமாய், 'ஆனால் பார்ப்போம், நீர் கூடுமானால் எங்கள் கிறிஸ்துவை உம்முடைய பிரம்புத்தடியால் அடித்துப்பாரும்; ஆகிலும் நீர் கிறிஸ்துவை அடிக்க ஓங்குகையில் அந்தத் தடிக்கம்பு உங்கள் விக்கிரகசாமிகள்பேரில் தட்டுப்பட்டு விடாமல் சற்றுக் கவனமாய்ப் பார்த்து ஓங்கவேண்டும். ஏனெனில் நீர் ஓங்குகிறபோது அந்த தடிக்கம்பு உங்கள் விக்கிரக சாமிகள்மேல் தட்டுப்பட்டுவிட்டால் அந்தச் சாமிகள் சில்லி சில்லியாய் உடைந்துபோவர். எங்கள் கிறிஸ்துவோ உமது அடியால் உடைந்துபோகமாட்டார். எங்கள் தேவனை அடித்து அழித்துப்போட உம்மால் முடியாது; ஏனென்றால் அவர் மண்ணினாலும் கல்லினாலும் மாத்தினாலும் உருவாக்கப்பட்ட உங்கள் விக்கிரக தேவர்களுக்கு ஒப்பானவர் அல்லவே என்றாள்' என்பதே.

அவள் பிரசங்கயாத்திரையாய்ப் போய்விட்டுத் திரும்பி வந்து எங்களிடம் இளைப்பாறிக்கொண்டிருக்கையில் அவள் போயிருந்த இடங்களில் நடந்த விசேஷங்களையெல்லாம் எடுத்துப் பேசுவாள். அவளிடம் அநேக வருஷம் போதனையடைந்து இப்போது கிறிஸ்துமார்க்கத்திற்குத் திரும்புகிற ஒரு குடும்பத்தைப்பற்றி அவள் சொன்னதாவது:—

மகன் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்பட்டிருக்கிறான்: ஆனாலும் தகப்பன் அதற்கு ஆயத்தப்படுமட்டும் அவன் காத்திருக்கின்றான். அவன் சொல்வதென்னவென்றால், மூத்த மகனாகிய தான் கிறிஸ்தவனாகி, வயோதிபனான தகப்பனை இந்து மார்க்கத்தானாய் மரித்துப்போகவிட்டால் தகப்பனுக்குக் கொள்ளிவைக்கிறதார் என்பதே. இந்துக் குடும்பத்து மூத்த மகனின் கடமைதா னிது. சந்திரலீலாள் அந்த வயசாளிக்குப் புத்தி சொல்லி அவனைக் கிறிஸ்தவனாகும்படி வேண்டிக்கொண்டாள். அந்த மனுஷனோ கிறிஸ்துமார்க்கந்தான் சத்தியமார்க்கமென்று அறிந்து ஒத்துக்கொண்டாலும், இந்துமார்க்கத்திலே அவன் மூத்து முதிர்ந்துபோனதால் சாத்தானின் கோட்டையைத் தாண்டி, ஜாதிவித்தியாசத்தின் பாரச் சங்கிலியை முறித்து இந்தத் தள்ளாடின வயசிலே வெளியேறிவர ஏலாதவனா யிருக்கின்றான். இந்துமார்க்கத்தா னொருவன் கிறிஸ்தவனாகிறபோது

சாதாரணமாய் நேரிடுகிற துன்பங்களை அந்தக் கிடுகிடு கிழவன் எப்படி தாங்கக்கூடுமென்பதே தடையாயிருக்கின்றது. கிறிஸ்துமார்க்கத்தில் சேரவிருக்கும் இப்படிக்கொத்த ஜனத்தாருக்கு இதுவிஷயத்தில் நேரிடுகிற சோதனைகளான பாடுசூடுகள் மெய்யாகவே தாங்கரியவைதான். ஆதலால்தான் இந்த அந்தரங்க சீஷர் இரட்சணிய சமாதானத்தை அறிந்தனுபவித்துச் சிலுவையை எடுத்துக்கொண்டு அவருக்குப் பின்செல்லத் தைரியமற்றவர்களாய்ப் போகிறார்கள்.

ஒருநாள் சந்திரலீலாள் வந்து தன் வழக்கப்படியே என் பாதத்தண்டை தரையிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில், அம்மா, நமது போதகன்மார் நான் தங்கியிருந்து மரிக்கும்படிக்கென்று ஒரு வீட்டைக் கட்டியிருக்கிறார்கள்; அதைப் பற்றி நீங்கள் நினைக்கிறதென்ன? அவர்கள் முதலாவது என்னிடத்தில் அதைக்குறித்துப் பேசினபோது, இதென்ன, நான் மரிக்கிறதற்காகவென்று ஒரு வீடு கட்டித் தரவேணுமா? நான் மரிக்கிற இடம் எதென்று உங்களுக்குத் தெரியுமா, நான் புகைவண்டியிலே யாத்திரை போகையிலோ, ஆற்றிலே கப்பலேறிப் போகையிலோ, காட்டுப்பாதையாய்ப் பிரயாணஞ்செய்கையிலோ, வீதியிலே பிரசங்கிக்கையிலோ செத்துப்போகலாமே. அப்படியிருக்க நான் தங்கியிருந்து மரிக்கவென்று ஒரு வீட்டை ஏன் கட்டிவைக்கவேண்டும் என்றேன். அதற்கவர்கள் ஓகோ, அது மெய்தான். நீ சொல்லுகிறபடி அது நமக்குத் தெரியாதுதான். ஆயினும் சில மாதங்களுக்குமுன் நீ வியாதிப்பட்டிருந்ததுபோல ஒருவேளை இன்னும் வியாதிப்பட நேரிட்டால் அல்லது நீ மிகவும் பெலன் குன்றிப்போய்க் கொஞ்சக்காலம் இளைப்பாறிக் கொண்டிருக்க நேரிட்டால், அதற்கென்று உனக்குச் சொந்தமாய் ஒரு வீடிருக்கவேண்டியது அவசியம் என்றார்கள். நான் மாறுத்தரமாக, சிநேகிதராகிய நீங்கள் எனக்குத் தொல்லையை உண்டாக்கி வைக்கிறீர்கள். நான் ஒரு வீட்டை எப்படி பேணக்கூடும்? ஒன்றிற்கும் கவலைப்படாதிருக்க வேண்டுமென்பது என் ஆசை. வீட்டைப் பழுதுபார்த்துச் சூழ்ச்சிப்பதற்குப் பணச்செலவு வருமே என்றேன். அதற்கவர்கள் நல்லது, மாதந்தோறும் உனக்குக் கொஞ்சம் உபகாரச்சம்பளம் தருவோம், அதிலிருந்து செலவிடலாம் என்றார்கள். ஆகையால் அவர்கள் யோசனைக்கு நான் சம்மதிக்கவேண்டியதாயிற்று. ஆலோசனைச்சங்கம் முடிந்தபிறகு மிதுனபுரிக்குத் திரும்பிப் போனோம். அப்போது ஒருநாள் போதகன்மார் என்னைக் கூப்பிட்டு, 'உனக்கு நாங்கள் வீடு

கட்டப்போகிற ஸ்தலத்தை வந்துபார்; நீ வசதியாய் அமர்ந்திருக்கத்தக்கதாக இங்கே இந்த மாந்தோப்பிலே வீட்டுக்கு இடத்தைத் தெரிந்திருக்கிறோம்' என்றார்கள். அப்போது நான், என்ன, எனக்கு வீடுகட்டவென்று இங்கே ஒதுக்கமான ஸ்தலத்தையா பார்த்துத் தெரிந்துகொண்டீர்கள்; தயவுசெய்து வேண்டாம். எனக்கு வீடுகட்ட விரும்பினால் அங்கே இரஸ்தாவோரமாய் அதைக் கட்டுங்கள். அப்படியானால் வயது கடந்து நடக்கவும் ஏலாதபோது கதவண்டை நகர்ந்துபோயாவது அங்கே போகிற வழிப்போக்கருக்குப் பிரசங்கிப்பேன் என்றேன். அவர்கள் என் விருப்பப்படிக்கே செய்து தந்திருக்கிறார்கள்: ஆதலால் 'நான் சந்தோஷமாய் என் ஜீவனுள்ள நாள்மட்டும் பிரசங்கிக்கக்கூடும்' என்றாள்.

நாம் எல்லாரும் சந்திரலீலாளைப்போல் இப்படி நமது ஊழியத்திலேயே கருத்தாயிருக்கக் கர்த்தர் அனுக்கிரகம் பண்ணுவாராக.

இப்படி வயது கடந்து முற்றிலும் தள்ளாடிப்போனாலும் தங்கள் மீட்பருக்கு மகிமையாகப் பிரசங்கிக்கவேணுமென்று ஆசைப்படுகிற கிறிஸ்தவ பணிவிடையாட்கள் அநேகரிரார்: ஆனாலும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; அநேகர் திவ்விய ஊழியத்தின் மத்தியிலேயே நித்திரையடைந்து இளைப்பாறப் போகின்றனர். ஆ! இயேசுவின் ஜீவவார்த்தைகளைப் பிரசங்கிப்பதே தங்கள் போஜனமாயும் பானமாயும் இருக்கிறதென்று எண்ணிக்கொள்ளுகிற தமது தாசரைக் கர்த்தர் என்றைக்கும் பூமியிலே வைத்துக் காத்துக்கொள்ளக் கூடுமானால் எத்தனை நன்று. இந்த விஸ்தார இந்துதேச அறுப்புக்கு அப்படிக்கொத்த ஆயிரக்கணக்கான ஊழியர்களைக் கர்த்தர் எழும்பிவரப் பண்ணவேண்டுமென்று ஆவலோடே பிரார்த்திப்போமாக.

## 10. அதிகாரம்

### குஷ்டரோகியான ஒரு சிறுமியின் குணப்படுதல்

பரம ஸ்தலத்தில் ஒரு பங்கும் பூதலத்தில் மறுபங்குமாயிருக்கிற தேவ புத்திரரான அந்த மகத்தான குடும்பத்தின் அங்கத்தாருக்கு தேவன் தாமே பிதாவாயிருப்பதால், அவர்கள் பிறருக்கென்று பிழைத்து உழைத்து மற்றெவர்களையும்விட மனுஷ

ஜாதிகள் ஒருவருக்கொருவர் சகோதரர்களா யிருக்கிறார்கள் என்பதையும் உய்த்துணர்ந்துகொள்ளுகிறார்கள். காரியத்தளவில் பூமியின் பஞ்சகண்டங்களிலுமுள்ள மனுஷஜாதியான நாமனைவரும் எவ்வளவாய்ச் சரியொத்திருக்கின்றோம். நமது முகச்சாயலும் நிறமும் ஒன்றுபோல் இராதிருக்கலாம். ஆயினும் நமது உடம்புகள் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டவைகளாயிருந்து, வியாதி கஸ்தி நேரிடுங்காலையில் ஒன்றுபோலவே பாடுபடுகின்றன. நமது நம்பிக்கைகளும் பயங்களும் இருதயப்பீடைகளும் சங்கடங்களும் பாவங்களுமெல்லாம் ஒன்றுபோலவே இருக்கின்றன. நாமனைவரும் ஒரே பெரிய சங்கிலியின் பிணைத்தொடர்களா யிருக்கின்றோம். தேவன்தாமே அப்படி நம்மை அமைத்திருக்கிறார்.

இந்த இந்துதேசத்திலே குஷ்டரோகத்தைப்போல் அதி பயங்கரமான வியாதி வேறொன்றில்லை. அது பாவத்திற்கு ஒரு குறிப்பாயிருப்பது ஆச்சரியமன்று. பாவத்தைப்போலவே தேகத்தில் அது அறியாதவண்ணமாய் வந்தேறிவிடுகிறது. ஒருவன் திடீரெனப் பெரிய தீவினைகளை நடத்திவிடுகிறது அபூர்வம்; பொதுவாய் ஒரு காரியத்திலே அவன் சற்றுப் பிசகிப் பின்வாங்கி, அதிலிருந்து ஒரு சின்னப் பாவத்தைச் செய்வான். அப்படியாக இருந்திருந்து மனச்சாட்சி கடினப்பட்டுப்போய் பெரிய பெரிய பாவங்கள் தொடரும். கடைசியாக தேவபிதாவை விட்டு வெகுதூரம் சோரம்போய் முற்றிலும் சாத்தானின் கைக்குள்ளடங்கி அதி பயங்கரமான பாவதோஷங்களை நடப்பிப்பான். குஷ்டரோகத்தின் தன்மையும் அப்படித்தான். முதலாவது தேகத்தின் ஓரிடத்திலே ஒரு சிறு மறு விழுந்தாற்போலிருக்கும். அப்பால் சருமத்தில் ஒரு சிறு தடிப்புப்போல் காணும். பின்பு ஒரு விரலில் புண் பொடி; அதிலிருந்து முதல் மொளி அழுகி விழல், பிறகு அடுத்த மொளியும் அவ்வாறே அழுகிப் பெயர்தலாகி, இருந்திருந்து தசைநாளமான ஜீவசத்துக்களெங்கும் அதன் வேர் பரவி, ஊனைத் தின்றறுத்துக் கடைசியில் உயிர் பிரிதலாகிறது. அந்த வியாதி கண்டவுடன் மரணம் ஓடிவருகிறதில்லை. ஏனெனில் அப்பயங்கர நோய் வெகுநாளைக்குத் தேகத்தைப்பற்றி மெல்லமெல்ல அரித்துக் கொண்டிருந்து மானிடவுடலை உருக்கெடுத்து உபத்திரவப்படுத்திக் கொல்லாமல் கொன்றுபோடுகிறது.

இவ்வியாதியால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கள் உற்றார் பெற்றார் உறவினர் வீடுவாசலை விட்டு விலகிப்போய்த் தனிவாசஞ் செய்யவேண்டும். ஐயையோ! அந்த நோயாளிகள் தங்களுக்கு

அருமையானவர்கள் அனைவருக்கும் அசங்கியமானவர்களாகி, தங்கள் நாட்களை வேதனையிலும் விருதாவிலும் செலவிட வேண்டும். இவ்வியாதி மெல்லமெல்லத் தேகத்தை அரித்தழித்தாற்போலவே பாவத்தின் வியாகுலங்களும் இருக்கின்றன. குஷ்டரோகத்தைச் சிலர் மறைத்துவைக்கப் பார்ப்பதுபோல பாவத்தையும் சிலகாலம் மறைத்து வைத்துக்கொள்ளலாம்.

பஞ்சத்தினின்று விடுவிக்கப்பட்ட ஒரு சிறுமியை ஒரு மிஷன் அனுதசாலையில் சேர்த்திருந்தது. அவளை லைசாள் என்று பெயர்சொல்லிக் கூப்பிட்டுவந்தோம். அவளுடைய பெற்றோர் இந்துமார்க்கத்தார். அவள் தகப்பன் தன் வீட்டிலே சாகக் கிடக்கிறான் என்றறிந்தபோது அவனுடைய சிநேகிதர் வந்து அவனை எடுத்துக்கொண்டு போனதை அவள் கண்டாள். அவர்கள் அவனைக் கங்கைநதிக்குக் கொண்டுபோய் அதன் புண்ணிய கரையென்று தாங்கள் எண்ணிக்கொண்ட ஓரிடத்திலே சாகும்படி கிடத்திவைத்து, அவன் ஜீவன் போகட்டுமென்று காத்திருந்தார்கள் [இது அந்த நதியோரமான இராஜ்யத்து ஜனங்கள் தங்கள் உறவினர் சிநேகிதர் முதலியோருக்குச் செய்யும் புண்ணிய கருமமான கடைசி உபகாரங்களி லொன்றும்]. அவனுக்கோ ஜீவன் போகவில்லை. காத்திருந்தவர்கள் அலுத்துப்போனதால் காவலுக்கு வேறாட்களை நியமித்துவிட்டுப் போய்விட்டார்கள். சாகக்கிடந்தவனோ குடிப்பினையின்றி அவர்கள் எண்ணத்தின்படி மரண தூதனாகிய யமன் அவன் ஜீவனை வாங்கிக்கொள்ளுமட்டும் பகலின் அகோர வெயிலிலும் இராவின் பனியிலும் மழையிலும் கிடந்தான். காவற்காரரும் காத்திருந்து சடைத்துப்போனமையால் கடைசியில் அவர்களிலொருவன் நதியிலிருந்து தன் கைநிறையச் சேற்றை அள்ளி அவன் வாயிலும் மூக்கிலும் குத்தியமுக்கி அப்படியாக அவனை மூச்சொடுங்கிச் சாகப்பண்ணினான்.

இப்படிச்செய்த மனிதனைப்பற்றி என்னசொல்லலாம்: இவன் செய்ததும் புண்ணிய கருமந்தானா? யமதேவனின் சங்காரத் தொழிலில் இவனும் கூடி உதவிசெய்திருக்கின்றானதலால் இவனுக்கு என்ன பெயர் தகும்? அவ்வேழைமனிதன் 'அம்மா கங்காதேவி' யென முணுமுணுத்து ஜீவனை விட்டதாலும், அவன் பாதங்கள் கங்கையின் புண்ணியஜலத்தில் கிடந்ததாலும் அவன் யமலோகத்திற்கு ஆயத்தப்பட்டவனாய்த்தானே இருந்திருக்கவேணும்.

லைசாளின் தகப்பன் காரியம் இப்படி முடிந்திருக்க, தாயும் இனத்தாரும் அப்போதுண்டான கொடிய பஞ்சத்தால் அகால

மரணமே யடைந்தார்கள். ஏழைப்பிள்ளையாகிய அவள் உலகத்தில் உதவுவார் யாருமின்றிப் பசி பட்டினியால் எலும்புந் தோலுமாகி கடைசியில் மிஷன் அனுதசாலையில் வந்து சேர்ந்தாள். இங்கே அவளுக்குத் தகுந்த ஆகாரமும் உடையும் படிப்பும் கிடைத்துவந்தபடியால் மெத்த மனமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் பிரயோஜனமுமுடையவளாய் வளர்ந்து புஷ்பவதியாகி சில வருஷங்களுக்குப்பின் அவளுக்குக் கலியாணநாளும் திட்டமானது. அவளுடைய கலியாணநாள் மெத்த சந்தோஷநாளாயிருந்ததென்று சொல்லிக்காட்ட அவசரமில்லை. மிஷன் கம்பவுன்ட் அன்றையத்தினம் விருந்தாளிகளால் நிரம்பி சகலமானபேர்களும் மெத்தச் சந்துஷ்டியாகவே இருந்தார்கள். லைசாள் இந்நாட்டு வழக்கப்படியே தன் மணவாளனை ஒருக்காலும் கண்டு பேசியிருப்பதில்லை. இத்தேசத்து மற்றநேக ஸ்திரீ ஜனங்களைப்போலவே ஜனசமுதாய ஒழுக்க முறைப்படிக்கு அவள் தன் கலியாணத்திற்குமுன் மாப்பிள்ளையைக் கண்டு பேசக் கூடாதிருந்தது. இவ்விஷயத்தில் லைசாள் பயப்படவும் வேணுமோ? அவளுடைய மாப்பிள்ளையைப்பற்றி, தலைமையான மிஷனெரி துரைசாணிக்கு நல்ல நற்சாட்சி வந்திருந்தது. அவன் ஒரு நல்ல மனிதனும் உபதேசியுமாயிருந்தபடியால் எல்லாரும் லைசாளைப்பார்த்து அவள் நல்ல யோகமுள்ளவளென்றும் அந்தச் சம்பந்தம் நல்ல வாழ்வுடையதா யிருக்குமென்றும் சொல்லிக்கொண்டார்கள். அதைக் கேட்டபோது லைசாளுக்கும் மெத்த சந்தோஷந்தான். மங்களதினத்தில் மாப்பிள்ளை வெகு நேர்த்தியாய் உடைதரித்து உல்லாசகோலமாய் வந்து சேர்ந்தான். ஐயையோ அந்த அலங்காரமான மேற்சட்டையினடியில் இருந்ததென்னவென்று நாங்கள் அறிந்திருக்கக்கூடுமானல் நலமாயிருந்திருக்கும். வெளிப்பார்வைக்குச் சிறப்பான மேற்புறமானது பாவத்தால் கரிகறுத்த இருதயத்தை எவ்வளவு திறமையாய் மூடி மறைத்துக்கொள்ளுகின்றது. அசுத்தஆவி அடிக்கடி ஒளியின் தூதனைப்போல் கோலங்கட்டி நடப்பதுமுண்டு. இவ்விஷயத்தில் நாம் எவ்வளவோ குறும்பார்வையுடையவர்களாயிருந்து அதிலேசாய் வஞ்சிக்கப்பட்டுப் போகின்றோம். அன்று எல்லாரும் கூடி மங்களத்தை முடித்து சுபசோபனங்கள் கூறி வழியனுப்பிவைக்கவே, குற்றமற்ற அம்மங்கை தன் புதிய வீட்டுக்கு வழிநடத்தப்பட்டுப் போனாள்.

சிறிதுநாட்களுக்குப்பின் அவள் தாங்கரிய மனப்பீடையுடனே தன் போதக பிதா மாதாக்களிடம் திரும்பிவந்து தான் கட்டுண்டிருக்கும் கொடிய இடுக்கணிலிருந்து தன்னை விடுவித்

தருளவேண்டுமென்று மன்றாடினாள். போதகர் அவளைப் பார்த்து 'லைசாளே, என்னகாரியம் நடந்திருக்கிறது? உன் புருஷன் குடிகாரனாயிருக்கிறானோ' என்று கேட்டார். அவள், 'அப்படியல்ல, ஐயா' என்றாள். 'பின்னென்ன? அவன் உன்னிடத்தில் பட்சமாயிருக்கிறதில்லையோ?' 'அப்படி யாதொன்றுமில்லை ஐயா!' 'அப்படியாகில் வேறே என்னகாரியமுண்டு?' 'ஐயையோ! என் புருஷன் குஷ்டரோகமுடையவராயிருக்கிறார்' என்றாள். அப்படி அவள் சொல்லவே, இயல்பாய்ச் சந்தோஷ முகத்தோற்றமுள்ள அவள் முகவாட்டமாய் ஏங்கிப் பெருமூச்சுவிட்டாள்.

அதைக் கவனித்துப்பார்க்கையில் எத்தனையோ பரிதாபம்! ஆம், ஆம், அவன் நெஞ்சிலே பயங்கரமான வெண்குஷ்டப் புள்ளி காணப்பட்டிருந்தது. அதை அவன் சில வருஷங்களாய் மறைத்துக்கொண்டே திரிந்திருக்கிறான். இப்போதோ பாவத்தைப்போல் அதுவும் வெளியாயிற்று. 'உன் பாவம் உன்னைக் கண்டுபிடிப்பது திண்ணம்.' ஆனால் ஐயோ! குற்றமற்ற பல அன்பரின் இருதயத்தை உடைத்து நித்தியத்திலும் முடியாத சங்கிலித்தொடர்போன்ற பாவகாரணங்கள் தொடருமட்டும் இந்தக் கொடியநோய் மறைத்து வைக்கப்பட்டிருந்திருக்கிறது. இதுகாரணத்தால் புருஷனைவிட்டு அவளைப் பிரித்து மிஷன் ஆதரவில் வைத்துக்கொள்ளவேண்டியதாயிற்று. அவள் கிறிஸ்தவளானதால் புருஷனோடு கூடி வாசம்பண்ணவேண்டுமென்று இந்தவிஷயத்தில் கட்டாயப்படுத்த முடியாது. இந்துமார்க்கத்தாளானால் ஒருவேளை அவள் அவனுடனேதான் இருக்க வேண்டியதாகும். அதிஷ்டங்கெட்டவனான அவள் புருஷன் நிர்ப்பந்தமான தனது பிந்திய வருஷங்களை தனிமையாய்க் கழிக்க விட்டுவிடப்பட்டான். அவள் ஒரு குழந்தை பெற்றாள். அதின் உடலில் அவ்வியாதிக்குரிய தோற்றங்கள் ஒன்றுமில்லை. ஆகிலும் வருங்காலத்திலே அந்தத் தாய்க்கும் குழந்தைக்கும் நேரிடப்போகிறதெதுவோ, எந்நிமிஷத்திலே அக்கொடியநோயின் குறிகள் அவர்கள்மீது தோன்றிவிடுமோ யாருக்குத்தெரியும்! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்; குஷ்டரோகி சொஸ்தமடையக் கூடாதாயினும் பாவியானவன் இயேசுவின் இரத்தத்தில் கழுவப்பட்டுச் சொஸ்தமடையக்கூடும். அவற்றின் பலாப்பலன்கள் இரக்கமுள்ளஆண்டவரின்காருண்ணியத்தில்தானிருக்கின்றன.

இந்தியாவின் அந்தகார நாட்டுப்புறமாகிலும் சீர்மிகும் பங்காளத்து மாமரச் சோலைகளும் தென்னந்தோப்புகளும் உயர்ந்தோங்கிய ஓர் அடவியிலிருந்த தாழ்ந்த குடிசையில் பிறந்த

பெண் குழந்தையும் தனது மாதாவின் உள்ளத்திற்குக் கொண்டாட்டமானதுதான். காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சுதானல்லவோ? அதேபிரகாரமாகப் புல்லறிவாளனான அத்தகப்பனுக்கும் அப்பெண்மதலை பொன்மதலையோவென மெத்தப் பிரியமானதாகவே யிருந்தது.

இக்குழந்தை கொஞ்சம் வளர்ந்து படிக்கப் பிராயமானபோது அயல்புரமிருந்த பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டு, நாளாவட்டத்தில் கொஞ்சம் கொஞ்சம் தேர்ச்சியடைந்து வளர வளரப் படிப்பில் வெகு கெட்டிக்காரியெனப் பெயர் வாங்கினாள். படிப்பில் அவளுக்கிருந்த கூர்மையையும் திறமையையும் கவனித்த ஊர்ஜனங்கள் அவள் கொஞ்சக்காலத்தில் படிப்பில் தேறி மெத்தக் கெட்டிக்காரியான வாத்திச்சியாகி, சம்பளம் பெற்று தன் பாட்டை நடத்திக்கொள்ளுவாள் என்று பேசிக்கொண்டார்கள். அவளுக்கும் தன்னைப்பற்றி அப்படிக்கொத்த எண்ணந்தானிருந்தது. ஆனால் மனுஷ நம்பிக்கைகள் அடிக்கடி சிதறி அவமாய்ப் போகிறபடியே இவள் காரியமும் இருந்தது. எப்படியெனில் அவள் உடம்பில் காய்ச்சலால் இரத்தக்கொதிப்புண்டாகி அதோடே தேகத்தில் தடிப்புகள் தோன்றி இருந்திருந்து அவைகள் அதிகப்பட்டன. இதனாலே அவளுக்குப் பயமுண்டாகி நாளுக்குநாள் நடுக்கமும் தத்தளிப்பும் அதிகப்பட்டது. அவள் சிநேகிதரும் துக்கத்தால் தொய்ந்துபோயினர். பாடசாலையில் இத்தனை சமர்த்துள்ள படிப்பாளியாய் விளங்கினவளும், எல்லாரையும் நேசித்து எல்லாராலும் நேசிக்கப்பட்டவளுமான இந்த நற்குணப் பெண்மணி எவரும் அருவருத்து விலகி யொதுங்கும் குரூப நோயாளியாய்ப் போவாளென்றும், அவளைப்பற்றிய நல்லெண்ணமும் நம்பிக்கைகளுமெல்லாம் வியர்த்தமாகிச் சிதறிப்போமென்றும் யாருக்குத் தெரியும்.

அவளை ஒரு டாக்ற்றரிடம் கொண்டுபோனார்கள். அவர் அந்த வியாதியைக் கவனமாய்ச் சோதித்துப் பார்த்தபின் துக்கத்தால் தமது முகநாடி வேறுபட்டவராகி அந்த எளிய தாயைப் பார்த்து உன் மகள் குஷ்டரோகியாகத்தா னிருக்கிறாள் என்றார். அப்போது அம்மாதாவுக் குண்டான மனோவியாகுலத்தை எவ்வளவென்று சொல்ல! பரிதபிக்கப்படத்தக்க அந்த அவள் குமாரத்தி புஷ்பமாரி சொரிய, 'இனி நான் பள்ளிக்கூடத்தில் நிற்கக்கூடாதோ? இது சுகப்படக்கூடிய வேறொரு வியாதியாயிராதா?' என்று உள்ளமுடையக் கோவெனக் கதறியழுதாள்.

குஷ்டரோகத்தைப்பற்றிய பூரணமான சாஸ்திர அறிவுடைய இன்னொரு டாக்ற்றரை வரவழைத்துச் சோதித்துப் பார்த்த போது அவரும் முந்திய தீர்ப்பையே சரிவைத்ததுமன்றி, இது குஷ்டரோகத்திலும் கொடியவகையென்று தீர்த்ததால் அந்த அவருடைய வார்த்தைகள் அவள் காதினுள் தனக்கு மரணதீர்ப் புரைத்தாற்போலிருந்தன. அவளைப் பள்ளிக்கூடத் தினின்று பிரித்து நீக்கிவைக்க வேண்டியதாயிற்று. அவள் கலியாணஞ்செய்யவும் கூடாதென்று சொல்லித் தீர்த்ததால் இருதயம் நொறுங்குண்டவளாய்ப் புறப்பட்டுப் போனாள்.

சிறிது வாரங்களுக்குப்பின் அவளைக் குஷ்டரோகிகளின் இல் லத்திற்கு அனுப்பிவைத்தார்கள். அங்கே தன்னைப்போன்ற அசங்கிய கோர கர்மிகளான நிர்ப்பந்தரிடையில் தனது ஜீவ காலம் முழுவதையும் அந்நோயின் வல்லடிக்குள் சொல்லரிய கஷ்டங்களுடனே கழிக்கவேண்டியதாயிற்று. ஆகவே இராப் பகலாய் அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய்த்தானிருந்தாள். ஐயோ, அப்படிக்கொத்த ஜீவியம் அவளுக்கு எப்படி சந்தோஷ மாயிருக்கக்கூடும்? அவளுக்கு எல்லாம் நம்பிக்கையற்ற இரு ளாகவேயிருந்தது. மிஷனெரிப் போதகர்களின் பட்சமும் உதவிகளுமெல்லாம் அவளுக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடாமற் போயிற்று. அவள் மரணஇருளின் அந்தகார ஆழுத்துயரத் தில் தன்னந்தனியே போய் உட்கார்ந்துகொண்டு தேவன் என் றொருவர் உண்டோவென்று எங்களுடனே நினைக்கலானாள்.

ஒருநாள் அவள் காதுக்கு ஏதோ ஒரு மணிச்சத்தம் கேட் டாற்போலிருந்தது. அது முன்னாட்களின் பாடசாலை மணி போல் அவள் காதினுள் தொனித்தது. அது என்னமோ வென்று கூர்ந்து கேட்கையில், ஒருவன் தப்புமேளங் கொட்டி முழக்கிக்கொண்டு திரிந்து இடைக்கிடையே ஏதோ கூப்பிட் டுச்சொன்னதைக் கேட்கலானாள். அவன் அடுத்தடுத்து வரவே சொல்லியது தெளிவாய்க் கேட்டது. அதாவது:—

இதோ இங்கே பண்டாரவகைத் தரிசு நிலத்திலே வந்து கேளுங்கள். ஒரு மாதா கிறிஸ்துவின் வசனங்களைப் பிரசங் கிக்கிறாள்; எல்லாரும் வந்து கேட்கலாம் என்றான். அது அஸ்தமன வேளையாயிருந்தது. பெருங்கூட்டமான ஜனங் கள் போய்ப் பிரசங்கங் கேட்கக் கூடினர். ஏக்கம்பிடித்த அம்மடந்தையும் தன் இல்லத்தைவிட்டு வெளியேறி அச் சனக்கூட்டத்திற்கு அப்பாலே எட்ட ஓர் மேட்டில்போய் அப் பிரசங்கியைப் பார்த்தகண்ணாய் நின்று செவிகொடுத்தாள்.

வயதுகால நரைதிரையும் பலவீன தோற்றமுமுடைய அப் பெண்ணரசியின் வார்த்தைகள் துவக்கத்தில் மெல்லிய தொனிச் சொற்களாய் ஒலித்தாலும் இருந்திருந்து இயல்புக்கு மிஞ்சின திவ்வியாஸ்திர பலமும் அதிகாரமுமுடைய உச்சத்தில் தொனிக் கவே, அவள் முகமானது தேவாவியின் சுத்தாங்க ஒளிப்பிர பையால் இலங்கினாற்போலிருந்தது.

அந்தப் பிரசங்கி யாரென்று கேட்பாயோ? அவள் சந்திர லீலாள்தான். மனுஷஜாதியான எல்லாரையும் பாவத்தினின்று விடுதலைசெய்து அவர்கள் இருதயங்களுக்கு உலகம் கொடுக்கக் கூடாததான சமாதான சந்தோஷங்களை நல்கும் திவ்விய மீட் பரான இயேசுவைப்பற்றி அவள் பிரசங்கித்தாள். கூட்டம் முடிவாகிற சமயத்திலே அப்புண்ணியவதியின் கவனமெல்லாம் அந்தக் குறைநோய்க்காரியான பெண்கொடியின் மேலேயே சென்றது. அப்பரிதாப குரூபியின் முகத்தோற்றம் ஆருத்துயர முடையதாயிருக்கக் கண்டபோது சந்திரலீலாளின் இருதயம் அவள் நேருக்கு அனுதாப அன்பினாலே பொங்கிற்று.

ஆகவே, தமது பூலோக சஞ்சாரநாட்களில் குருடு செவிடு ஊமை குஷ்டரின் வியாகுலங்களைக் கண்டபோது, சற்றும் சகியாது ஜல்தியில் இரங்கி அவர்களுக்கு சரீராத்ம சுகமளித்த பாவியின் நேசரான இயேசுசுவாமியின் திருப்பாதத்தண் டை அவளை வழிநடத்தவேண்டுமென்று ஆசைகொண்டாள். ஆதலால் அன்றுதொட்டு அந்த நிர்ப்பந்த மடந்தையுடனே தரித் திருந்து அவளுடைய குணப்படுதலுக்காக ஜெபத்துடனே போதித்துப் புத்தி புகட்டிவந்தாள். தேவகிருபையால் அந்த அவளுடைய புத்தி போதனைகள் சித்திபெறவே, குஷ்டரோ கியான அந்த அப்பிராணி கர்த்தரைக் கண்டடைந்தாள். இரட் சகரான அவர் அவளுடைய இருதயத்தில் வந்து தங்கினதால் அவர் அருளிய பூரண சமாதானத்தினாலே முடிவில் பூரிப் படைந்து மனமகிழ்ச்சியும் முகமலர்ச்சியு முடையவளானாள். அப்பால் அவளுடைய கண்கள் பிரபஞ்ச வாழ்வையல்ல, பரத் தையே நோக்கின சிந்தையும் மகிழ்ச்சியும் உடையதாகி சில வருஷங்கள்மாத்திரம் இப்பூதலத்திலே முற்றிலும் அந்நியமான பரதேசவாசியாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருந்தபின், பூச்சி புழுக் கள் அரித்து நோவு மிகுத்த இம்மண்ணாலான ஓட்டை இம் மண்ணுக்கே போட்டுவிட்டு அதற்குள் தங்கியிருந்த அவளு டைய ஆத்துமாவானது தீங்குகள் அண்டாததும், தீனங்கள் தீண்டாததும், மரணம் பிரவேசியாததுமான அந்த உன்னத

லோகத்து உச்சித வாசஸ்தலத்தை நோக்கி ஆசையாய்ப் பறந்தோடிப்போயிற்று.

இப்படியாக, குஷ்டரின் இல்லத்தில் குஷ்டரோகியாய்ச் சஞ்சரித்து, இச்சீவனை எட்டியைப்போல் கசந்தரோசித்து இளைத்துப்போன அவ்வாத்துமமானது, இன்ப சந்தோஷமும் இனிய ஆறுதலும் நிறைந்த ஒப்புவமையில்லாத பேரின்ப ஜீவியம் ஒன்றிருக்கிறதென்றும், இவ்வுலகத்திலே ஊனர் ஈனர் என்னப்பட்டாலும் மீட்பரின் இரத்தத்தில் தங்கள் பாவங்களறக் கழுவப்பட்டவர்கள் அந்த உன்னத லோகத்து உச்சித பட்டணத்திலே பரிசுத்தவான்களின் சுதந்தரத்திற்குப் பங்காளிகளாய் இப்பாரப் பள்ளத்தாக்கினின்று பிரிந்தேறிப் போகலாமென்றும் சாட்சியாகி அறிவித்துவிட்டுப் போயிற்று.

இதனாலே அதிபிரகாசமான இன்னொரு நட்சத்திரம் சந்திரலீலாளின் கிரீடத்திலே பதிந்தது.

# 11. அதிகாரம்

## இராஜமாளிகைக்குட் பிரவேசித்தல்

சந்திரலீலாளுக்கு வயது தளர தளர அவளுடைய பிரயாணங்களும் குறுகலாயின. அவள் பெயர் பிரஸ்தாபமோ வெனில் எல்லாச் சபைகளுக்கும் எட்டலாயிற்று. அவள் சென்ற இடங்களிலெல்லாம் அவள் நேசிக்கப்பட்டும் சன்மானிக்கப்பட்டும் வந்தாள். குருமார்களும் சிநேகிதர்களும் அவளிடத்தில் சம்பாஷிக்கவும் அவள் பேசுவதைக் கேட்கவும் கூடி வருவார்கள். அவள் சாதாரணமாய்த் தரையில் ஓர் பாயின் மீது உட்கார்ந்துகொண்டு தன்னிடத்தில் விரும்பிக் கேட்பவர்களெல்லாரோடும் மனப்பூர்வமான வாஞ்சையோடும் அன்போடும் பேசுவாள். கிறிஸ்து பெருமானைப்பற்றித் தான் எவ்விதமாய்ப் பிரசங்கிக்கிறதென்று அவள் பிறருக்கு விவரித்துக் கொண்டிருந்த ஒருநாள் சாயந்திரம் ஓர் உயர்குல இந்து மாது வந்து தரையில் அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தான் கிறிஸ்துவைத் தன் இரக்ஷகராகப் பகிரங்கமாய் அறிக்கையிடத் துணிந்து வெளியேறுவதற்குத் தனக்குள்ள பயத்தையும் கஷ்டத்தையும் முறையிட்டுக்கொண்டாள். உடனே, பயந்து திகைக்

கிற ஒரு பிள்ளையைத் தன் தாயானவள் எவ்வண்ணமாய் அணைத்துத் தழுவிக்கொள்வாளோ அவ்வண்ணமாகச் சந்திரலீலாள் அவளைத் தன் கரங்களால் அணைத்துக்கொண்டு புன்னகையோடு கூடி அவளுடைய பயமானது நிர்நிமித்தமானதும் இம் மாயாப் பிரபஞ்ச சம்பந்தமானதுமெனத் தன்னாலானமட்டும் எடுத்துக்காட்டி அவளுக்கு உணர்த்தி, உன்னதமான ராஜாவாகிய இயேசுவைமாத்திரம் அவள் உண்மையாய் நம்பிப் பிடித்துக்கொள்ளக் கூடுமானால், அவர் அவளை நிச்சயமாய்ப் பாதுகாப்பார் என்று, அவளைத் தைரியப்படுத்தினாள். அப்படியே அவள் போன இடங்களிலெல்லாம் அவள் தான் அறிந்த நற்செய்தியை மற்றவர்களுக்கும் அறிவித்துக் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படியாய் அவர்களுக்கு உதவிபுரிந்தும் வந்தாள்.

சந்திரலீலாள் அதிக பலஹீனமாயிருந்தபோதும் இவ்விதமாக மற்றவர்களோடு பேசும்படியாகக் கிடைக்கும் நல்ல சமயங்களை மிகவும் விரும்பினாள். அவள் பேசும்போது அவள் சப்தமானது தெளிவாயும் உச்சஸ்வரமாயும் தொனிக்கும். கேட்பவர் மனதினின்றும் ஒருக்காலும் எடுபடாதவண்ணமாய் சொற்பொழிவுடனே வசனிப்பாள்.

தேகம் மெலிந்து பலவீனமாகிற மாதங்கள் நெருங்கின. பிரயாணத்தின் முடிவும் சமீபித்தது. அந்திய நிமிஷத்திலே 'இதோ! என்னை நித்திய பேரின்ப வீட்டுக்கு அழைத்துப் போகும்படியாகப் பிரகாஸமுள்ள நாலுபேர் வந்திருக்கிறார்கள்' என்று அவளுடைய சப்தம் மறுபடியும் கேட்கப்பட்டது. இந்த வார்த்தைகளோடு தான் இவ்வளவுகாலமாகச் சேவித்து வந்த பரமராஜாவின் திவ்விய மாளிகைக்குள்ளே நித்தியத்துக்கென்று பிரவேசித்தாள்.

**ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.** (*தானி.* 12. 3.)

தமிழ் ... 170124

S. P. C. K. Press, Vepery, Madras—1914.

170124

சென்னபட்டணத்துச்

## சன்மார்க்க சிறுபுத்தக சங்கத்தார்

# விற்பனைசெய்யும் புத்தகங்கள்

| | அ. | பை. |
|---|---|---|
| அமலகுரு சதகம் ... ... ... ... ... | 1 | 0 |
| அருணோதய ஜெபத்தியானமும் அஸ்தமான ஜெபத்தியானமும் ... | 3 | 0 |
| ஆத்தும விபசாயம்... ... ... ... ... | 1 | 6 |
| இருதயக் கண்ணாடி ... ... ... ... | 2 | 0 |
| இயேசுவின் சிந்தை ... ... ... ... | 2 | 0 |
| ஹிந்துமத கண்டனம் ... ... ... ... | 1 | 0 |
| எஸ்தர் அரசாணி மாலை ... ... ... ... | 0 | 9 |
| என் இராஜா ... ... ... ... ... | 2 | 0 |
| கர்த்தருடைய ஜெபம் ... ... ... ... | 2 | 6 |
| காலைமணிச் சத்தம்... ... ... ... ... | 1 | 6 |
| கிறிஸ்தவ இல்லற மாலை ... ... ... ... | 2 | 0 |
| கிறிஸ்தரசன் சரிதை ... ... ... ... | 3 | 0 |
| கிறிஸ்துமார்க்க உதாரணங்கள் ... ... ... | 3 | 0 |
| குருட்டு வழி ... ... ... ... ... | 1 | 0 |
| பாவத்தையும் பாவத்தினின்று இரக்ஷிக்கப்படுகிற விதத்தையும் குறித்த சம்பாஷணைகள் ... | 1 | 0 |
| சிறு தலையணைகள் ... ... ... ... ... | 1 | 6 |
| சீர்கெட்ட குமாரன் சரிதை ... ... ... | 0 | 9 |
| சுவிசேஷ சமரஸம்... ... ... ... ... | 14 | 0 |
| தாவீதின் சரித்திரம்... ... ... ... ... | 1 | 6 |
| திருக்குமரன் அந்தாதி ... ... ... ... | 0 | 6 |
| துக்கசாகரத்தோணி ... ... ... ... | 1 | 6 |
| நவோபநிஷதம் ... ... ... ... ... | 1 | 6 |
| நிஸ்தார ரத்நாகரம் ... ... ... ... | 1 | 0 |
| நித்தியாநந்தக்காதல் ... ... ... ... | 1 | 0 |
| நேச அழைப்பு ... ... ... ... ... | 1 | 0 |
| பகவத்கீதை ... ... ... ... ... | 0 | 6 |
| "பயப்படாதே" ... ... ... ... ... | 1 | 0 |
| பாவநிவாரண விளக்கம் ... ... ... ... | 1 | 0 |
| பிள்ளைகளும் சபையும் ... ... ... ... | 2 | 0 |
| பூர்வபாதை ... ... ... ... ... | 3 | 0 |
| மரணத்தை ஜெயிக்கும் ஜெயம் ... ... ... | 1 | 0 |
| மூதேவி சீதேவி வீடுகள் ... ... ... ... | 1 | 0 |
| மெய்ஞ்ஞானோதய விருத்தி ... ... ... ... | 2 | 0 |
| மேரி ஜோன்சுடைய வேதாகமம் ... ... ... | 2 | 0 |
| வேதியரொழுக்கம் (வீரமாமுனிவரால் இயற்றியது)... | 5 | 0 |

2 E 2 M T 4 M